நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 198 ஜுன் 08 - ஜுன் 21, 2000 விலை ரூபா 10. 00



## கருகும் மொட்டுக்கள்!

### மட்டக்களப்பிலிருந்து அதிர்ச்சித் தகவல்கள்...





## ஒற்றையாட்சியும் நாடுகளின் கூட்டாட்சியும்



## தணிக்கை

### 1998 ஜுன் 05

### 2000 ஜுன் 08

### இரண்டு வருடங்களைக் கடந்து...

நன்றி - நூலகத்திட்டம்



## திருமலை கிழக்குப் பல்கலைகழக வளாகம்

# மூடப்படும் அபாயம்!

அரசியல்வாதிகளும் கல்வியியலாளர்களும் கண்களை இலேசாக மூடிப் "பட்டுவேட்டி பற்றிய கனாவிலிருக்க" கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகம் என்ற பெயர்ப் பலகையுடன் இயங்கி வந்த கல்விச்சாலை இந்த ஆண்டுடன் மூடப்பட்டு விடும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றது.

வடக்கு கிழக்கு மாநிலத்தில் ஒரு பல்கலைக்கழகமாவது அமைய வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட்ட 1950களின் நடுப்பகுதியில் இலங்கைத் தமிழரசுக்கட்சி திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும் எனக் கோரிக்கை வைத்தது. இந்துப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் வைத்த கோரிக்கை இதனால் பலமிழந்து போனது. ஆனால், இன்று மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் தென்கிழக்கிலும் முழுமைபெற்ற பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. திருகோணமலையே ஒரு வளாகத்தைத் தானும் நடத்த முடியாமல் மூடுவதற்கு தயாராகி வருகின்றது.

ஆனால், பல்கலைக்கழகம் வேண்டும் என்பதற்கான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது திருகோணமலையில் தான். தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம் என்ற பெயரில் கல்வியாளர்களால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வியக்கத்துக்குப் பல வழிகளிலும் பொருளுதவிகள் ஆலோசனைகள் என்பவை தாராளமாகக் கிடைத்தன. அந்தக் காலத்தை நினைவு கூர்ந்த திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் "நாங்கள் அப்போது இளைஞர்கள். உத்தியோகம் அப்போது தான் கிடைத்திருந்தது. மாதா மாதம் பத்து பத்து ரூபாவாக நானும் நண்பர்களும் ஆளுக்கு நூறு ரூபாவும் செலுத்தினோம். நூறுரூபாய் என்பது அந்த நாட்களில் பெரிய தொகை. எங்களைப் போல் ஏராளமான தமிழ் இளைஞர்கள் ஆர்வத்துடன் இந்த அமைப்பு வளர உதவினார்கள்" என்று தெரிவித்தார்.

> **"தங்கத்துரையின் பணியை நான் ஏன் தொடர வேண்டும்? எனச் சம்பந்தன் கைவிட்டாரா?"**

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் "தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம்" என்ற பெரிய பெயர்ப் பலகையுடன் கம்பீரமான ஒரு கட்டிடம் செயல்பட்டது. பல்லாயிரக்கணக்கான பெறுமதிமிக்க நூல்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. பல ஏக்கர் நிலம் அக்கட்டிடத்தைச் சூழப் பரந்து காணப்பட்டது. இப்போது எல்லாம் கனவு போலாகி விட்டன.

கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் என்ற பெயர்ப்பலகையுடன் காட்சியளிக்கும் இந்நிறுவனம் 23.05.1993ல் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி மட்டத்துக்குச் சற்றுக் குறைந்தவர்கள் டிப்ளோமா பயிற்சி நெறிக்காக அனுமதிக்கப்பட்டார்கள். ஆங்கிலம், கணக்கியலும் நிதிமுகாமைத்துவமும் ஆகிய இரு நெறிகள் இங்கு பயிற்றப்பட்டன. இரண்டு வருட காலப்பயிற்சி நெறிகள் மூன்று வருடங்களாகப் பயிற்றப்பட்டு

> **"பல்கலைக்கழகக் கல்லூரியாகக் குத்துவிளக்கேற்றி நடத்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்ட நாங்கள் இந்நிறுவனத்தின் இறுதி நாளையும் காணப்போகிறோம். என்பதுதான் கஸ்டமாக இருக்கிறது' என்று வேதனையுடன் தெரிவிக்கின்றனர் இங்கு பயிலும் மாணவர்கள்."**

முதலாவது குழாம் 1996ல் தான் தமது கல்வியைப் பூர்த்தி செய்தது.

பிறகு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகம் என்ற அந்தஸ்த்து வெறும் பெயரளவில் இதற்கு வழங்கப்பட்டு பட்டநெறிகள் ஆரம்பமாயின. டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்த பல மாணவர்கள் வேறு இடங்களிற்குச் சென்று தங்கள் பட்டநெறியைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். 37 மாணவர்களோ இதே நிறுவனத்தில் தான் பட்ட நெறியைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று தீர்மானித்ததன் பலனாக தற்போது ஏழாவது வருடமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய மாணவர்கள் எவரும் பட்டநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படாததால் இவ்வருடம் செப்டம்பரில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 31 மாணவர்களதும் வெளியேற்றத்துடன் இக்கல்வி நிறுவனம் தானாகவே இயங்காமல் முடங்கப் போகிறது.

புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படாததற்கான காரணம் இந்நிறுவனம் முறையாக கிழக்குப் பல்கலைக்கழக வளாகமாகப் பிரகடனப்படுத்தாமை தான் என்கிறார்கள் மாணவர்கள். இன்றுவரை பல்கலைக்கழகத்தின் அங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதற்கான எழுத்து மூலச் சான்றுகள் இல்லையென்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாகவோ, கிழக்குப் பல்கலைக்கழகமாகவோ அடையாளப்படுத்தப்படாத நிலையில் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழுக்கு எதாவது அங்கீகாரம் கிடைக்குமா என்பதும் மாணவர்களது பிரச்சினையாக இருக்கிறது. இந்நிறுவனத்தில் கல்வி பயின்ற எவருக்கும் இன்றுவரை நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை என்ற சங்கதி மாணவர்களது கவலையை நியாயப்படுத்துகிறது எனலாம்.

டிப்ளோமாச் சான்றிதழ் பெற்ற 62 பேர் அரச வேலைவாய்ப்புகளுக்காகப் போராடிக் களைத்துப் போயிருக்கிறார்கள். மத்திய அரசோ மாகாண சபையோ இவர்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. தங்களுக்கு ஜுனியர் மாணவர்களாகப் பாடசாலைகளில் கல்விபயிற்னறவர்கள் பலர் தத்தம் பாடநெறிகளை நிறைவு செய்து தொழில் வாய்ப்புப் பெற்று சமூக அந்தஸ்துடன் வாழும் போது "எங்கள் நிலை இப்படி ஆனது ஏன்?" என்ற ஆதங்கம் இவர்களை வாட்டுகிறது.

இளநிலைப்பட்டமொன்றுக்காக ஏழாண்டு காலம் படிப்பவர்கள் இலங்கையில் நாங்களாகத் தான் இருக்க முடியும்" என்று சரிநிகருக்குக் கூறுகிறார்கள் இம்மாணவர்கள். "நாங்கள் வசதியான குடும்பங்களிலிருந்து வந்தவர்களல்லர். எங்களை நம்பித் தான் குடும்பங்கள் கனவு காண்கின்றன.

இந்த நிலையில் ஏழாண்டுகாலம் படித்து எங்கள் பெற்றோரை ஒட்டாண்டி ஆக்குவதில் என்ன நியாயமிருக்கிறது?" என்று குமுறும் இவர்கள் "பல்கலைக்கழகக் கல்லூரியாகக் குத்துவிளக்கேற்றி நடத்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்ட நாங்கள் இந்நிறுவனத்தின் இறுதி நாளையும் காணப்போகிறோம். என்பதுான் கஸ்டமாக இருக்கிறது" என்று வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை இக்கல்வி நிறுவனத்தின் குறைகளைக் கேட்டறிந்து, நிரந்தரக் கட்டிடம் அமைய வேண்டியதன் தேவையை ஏற்று, நிலாவெளி வீதியில் பரந்த காணி பெற்றுத் தருவதாகத் தெரிவித்து, அவ்வாறே செய்தும் முடித்தார். அவர் மறைவுக்குப் பின் இப்பணிபற்றி தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் எவ்வித கரிசனையும் எடுத்ததாகத் தெரியவில்லை. "தங்கத்துரையின் பணியை நான் ஏன் தொடர வேண்டும்?" எனக் கைவிட்டாரோ தெரியவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் திருகோணமலை வாளகம் பற்றி எவ்வித அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. அது அவர்கள் தவறுமல்ல. ஆனால், திருகோணமலை சார்ந்தவர்களே இவ்விடயம் குறித்துக்கவலை கொள்ளாதிருப்பது தான் கவலைக்குரியது.

இந்த இறுதிக் கட்டத்திலேனும் தலையிட்டு இந்நிறுவனத்தின் மூடுவிழாவை தடுத்து நிறுத்தாது விட்டால் "தந்தை செல்வா வழியில் நடை போடுபவர்கள் நாங்கள்" என்று சொல்லிக் கொள்பவர்கள் மீதும் திருகோணமலையின் கல்வியியலாளர் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் மீதும் எதிர்க்காலச் சமுதாயம் காறி உமிழ்வது தவிர்க்க முடியாததாகி விடும்.

**விவேகி**

## அடக்குமுறை சட்டத்தை நீக்கு! சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்து!

அரசாங்கத்தினால் மே மாதம் 3ம் திகதி தொடக்கம் இலங்கையில் போர்ச் சூழல் அமுல் செய்யப்பட்டதன் பின்னர் அதன் விளைவாக இந்நாட்டு மக்களின் வாழ்முறையில் மிக மோசமான தாக்கங்கள் பல உருவாகியுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது.

1998 ஜுன் மாதம் 5ம் திகதி தொடக்கம் இரண்டு வருடங்களாக அமுல் செய்யப்பட்டு வரும் யுத்த செய்தித் தணிக்கை இருக்கும் போதே, கடந்த ஆட்சிக் காலத்தில் அமுல் செய்யப்பட்ட மிகவும் மோசமான அடக்குமுறைச் சட்டங்கள் அப்படியே அமுல் செய்யப்பட்டு நாட்டின் ஜனநாயக செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் அவசரகாலச் சட்டமும் அதன் கீழான அனைத்து அடக்குமுறைச் சட்டத் திட்டங்களையும் உடனடியாக நீக்கி மக்கள் வாழ்முறையை சுமுகமான நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்."

"தொடர்ச்சியாக கழுவி துடைத்தெறியப்பட்டு வரும் நாட்டின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் போர்ச் சூழல் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுயமான கருத்துக்களை வெளியிடவும், தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்நாட்டு மக்களுக்குள்ள உரிமை முழுமையாக இந்நாட்டு போர்க்காலச் சட்டதிட்டங்களினால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதால், தொழில் புரியும் மக்களின் அடிப்படை மற்றும் தொழில் சார் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. இந் நிலைமையில் இன்று இந்நாட்டு மக்கள் குருடர்களாகவும், செவிடர்களாகவும், ஊமைகளாகவும் வாழ வேண்டியவர்களாகியுள்ளனர்.

அரசாங்கத்தின் அரசியல் அதிகாரிகளினால் மற்றும் அரசாங்கத்தினால் போஷிக்கப்படும் இனவாத, யுத்தவாத பிரச்சாரங்களைத் தவிர்த்து, உண்மையில் என்ன தான் நடைபெறுகின்றது என அறிந்து கொள்ள இந்நாட்டு மக்களுக்கு உரிமையில்லை. பிபிசி சந்தேஸய நிகழ்ச்சி தடை செய்யப்படுதலுடன் ஆரம்பமான தொடர்பூடக வேட்டை இன்று யாழ் உதயன் பத்திரிகை மற்றும் லீடர் வெளியீடுகள் தடை செய்யப்படுதல் வரை தொடர்ந்துள்ளது.

இத் தணிக்கை சட்டதிட்டங்களின் பின்னணியில் அரசாங்கத்தின் அரசியல் தேவைகள் உள்ளன என்பது நிரூபிக்கப்பட்டாயிற்று. இந்நாட்டு பொதுமக்கள் அறிவுபூர்வமான சமூக அரசியல் தீர்மானத்திற்கு வருதலை தடுக்கும் இத்தணிக்கைச் சட்டங்களை நீக்கிக் கொள்ளுமாறு நாம் வற்புறுத்துகின்றோம்.

'அடக்கு முறைச் சட்டத்தை நீக்கு! சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும்உறுதிப்படுத்து' என்ற தலைப்பில் மோர்ஜ், சுதந்திர ஊடக இயக்கம், பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மற்றும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், உள்ளிட்ட 40 அமைப்புகளின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க, மலையக மக்கள் முன்னணி, ரெலோ, தமிழர் ஐக்கிய விடுலைக் கூட்டணி தேசிய மக்கள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளும், இப்பிரசுரத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யுத்த நிலைமையின் வெளிப்பாடாக, அரசாங்கம் சிற்சில அரசியல் குழு மற்றும் சில தொடர்பூடக நிறுவனங்களினால் பிரதான மக்கள் குழுக்களுக்கிடையில் பிரிவினையைத் தூண்டும் மோசமான யுத்த பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் நிலவும் யுத்த நிலைமையைப் போன்று இந்நாட்டில் வாழும் மக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள தேசியப் பிரச்சினைக்கு சமாதான தீர்வினைப் பெறும் வாய்ப்பு இந்த யுத்தவாத அரசியல் நிலைமையை மேம்படுத்துவதன் மூலம் மென்மேலும் விலக்கி வைக்கப்படுகின்றது. யுத்த உளவியலை நாடு முழுவதும் ஏற்படுத்துவதன் மூலம் இறுதியில் இந்நாட்டு ஜனநாயக வழக்கங்களின் இருப்பு மற்றும் நிறுவனங்கள் ஆபத்திற்குள்ளாக்கப்படுகின்றன.

இந்நிலைமை அபிவிருத்தியடைய வாய்ப்பளிப்போமானால் யுத்த உளவியலின் அடுத்த கட்டமாக, எந்த மட்டத்திலுமான இராணுவ அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் ஆதரவு கிட்டும். இவ்வளர்ச்சி நிலை காரணமாக இராணுவ அரசாங்கம் ஏற்படாத போதும் அதற்கான யாப்பு முறைகள் எழும் ஆபத்து தற்போது தோன்றியுள்ளது.

இதன்படி நோக்கினால் யுத்த உளவியலை கட்டியெழுப்புவது அரசாங்கத்தின் ஜனநாயக விரோத அரசியல் செயற்திட்டத்தின் இன்னுமொரு பகுதியாகும். இந்த போர்ச் சூழல் வளர்ச்சிப் பெற்றால் எமது நாட்டில் நேரடி வெளிநாட்டு தலையீட்டின் ஆபத்தும் ஏற்படும்.

இச் சூழலை தவிர்க்க பேச்சுவார்த்தை வழியின் மூலமான அரசியல் தீர்வின் அவசரத் தேவையை விளங்கிக் கொள்ளுமாறு இந்நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுக்கும் நாம், இதற்கு எதிராக இந்நாட்டில் ஜனநாயக மற்றும் சமாதான உளவியலை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் யோசனை தெரிவிக்கின்றோம்.

நன்றி - நூலகத்திட்டம்



தணிக்கை அதிகாரி இப்பக்கத்தை முழுமையாக தணிக்கை செய்துள்ளார்



நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளரின் சம்பளக் கோரிக்கை வாலைச் சுருட்டிக் கொண்ட தொழிற்சங்கங்கள்!

இலங்கையிலேயே ஆகக்குறைந்த தினக்கூலி பெறும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தூரநோக்கற்ற, துரோகத் தொழிற்சங்கங்களால் மீண்டும் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. 1998ம் ஆண்டு வேலைநிறுத்தத்தின் பின்னர் ரூபா 95/- தினக்கூலியை வழங்கிய கம்பனிகள் தற்போது ரூபா 105/- மட்டுமே வழங்க முடியும் என அடம்பிடிக்கின்றன. இவ்வேலைநிறுத்தம் அர்த்தமற்றது, அடிப்படைகளற்றது, சுயநல நோக்குடையது என்பது அம்பலமாக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் மின்னல் வேகத்தில் நாட்டின் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள போதும், கம்பனிகள் கோடானுகோடி ரூபாயை ஏப்பம் விட்டபோதும், தொழிற்சங்க முதலாளிகள் தரகர்களாக மாறி



மௌனம் சாதித்தார்கள். கம்பனிகளுக்காக வக்காலத்து வாங்கினார்கள்.

இதன் உச்சக் கட்டமான ஒரு அடிமைச் சாசனம் 04.12.1998 அன்று முதலாளிமார் சம்மேளனத் தலைவர் ஈ.டி.ஜி. அமரசிங்க, பெருந்தோட்டத் தொழில்தருனர் குழுவின் தலைவர் ஜே.எஸ். ரத்வத்த, மத்தியஸ்தக் குழுத் தலைவர் எம்.ஜே.சி. அமரசூரிய ஆகியோருடன் சௌமியமூர்த்தி தொண்டமான் (இ.தொ.கா.), ராஜித செனவிரட்ன (எல்.ஜே.ஈ.டபிள்யூ.யூ.), பி.வி. கந்தையா (தொழிற்சங்கக் கூட்டுக்



கமிட்டி) ஆகியோரால் கைசாத்திடப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின் பகுதி -1, 4ம் சரத்து 01.12.1998 முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். மேலும் இதன் 6ம் சரத்தின் (1)ம் பந்தி 13.2.1998இல் உடன்பட்ட சம்பள ஏற்பாட்டையும் இவ் ஒப்பந்தக் காலத்தினுள் அடக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி மூன்று ஆண்டுகளுக்குத் தோட்டத் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு கோருவதற்கான தார்மீக பலத்தைத் தொழிற்சங்கங்கள் இழந்து விட்டன. எனவே தான் கடந்த இரண்டாண்டுகளாகத் தொழிலாளருக்கு ஞான உபதேசம் புரிந்து வந்த மக்கள்விரோதத் தொழிற்சங்கத் தலைமைகள் 2000 ஆண்டு ஜனவரி முதல் வெறும் ஏமாற்றுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுத் தொழிலாளரை ஏமாற்றி வருகின்றன. முதல் ரூபா 150/- தினசரி சம்பளம் வேண்டும் என 1996இலேயே கோரப்பட்டது. பிறகு 1998இல் 131/- 125/- எனச் சுருங்கி 95/- வில் தொழிலாளர் கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டப்பட்டது. தற்போது 150/-இல் தொழிற்சங்கங்களும், 131/- இ.தொ.கா, ல.தோ.தொ.யூ தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியும் கோரப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் வக்கற்றுப் போய் முதலாளிகளுடன் பேரம் பேசத் திராணியற்றுத் தோற்றுப் போன தொழிற்சங்கங்கள் 115/- ரூபாவுக்குத் தொழிலாளரை விலை பேசத் தயாராகி வருகின்றன. இதுவும் அடிப்படைச் சம்பளம் அல்ல என்பது வெட்கக் கேடு.

அதுமட்டுமல்லாமல், 1988ம் அண்டு அடிமைச் சாசனத்தின் 20ம் சரத்தின்படி, நடைமுறையில் இருக்கும் மூன்றாண்டு காலப்பகுதியில் தொழிற்சங்கங்கள் எந்தத் தொழிற்சங்க நடவடிக்கையையும் ஊக்குவிப்பதில்லை என உடன்பட்டுள்ளன.

எனவே தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிலாளர்களின் தன்னியல்பான எழுச்சிகளும், நசுக்கப்பட்டதோடு, பசறைத் தொழிலாளர் போராட்டம் பொலிசாரின் மோசமான ஒடுக்கு முறைகளுக்குத் தொழிற்சங்கங்களும் துணைபோயின.

இந்நிலையில் அற்ப சலுகைகளுக்காக அடிப்படை உரிமைகளை விலைபேசியது மட்டுமன்றி வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கான அவலன்சையும் தாரைவார்த்தது இவ் ஒப்பந்தமேயாகும்.

இந்த நிலையில் முதலாளிமார் சம்மேனத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையேயான பேச்சு ஒரு ஏமாற்று நடவடிக்கையேயாகும். ஏனெனில், மலையகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளான தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசின் அடக்கு முறைச் சட்டங்களை ஆதரித்து / மௌனித்து நிற்கின்றன. இ.தொ.காவின் ஆறுமுகம் தொண்டமான், பாசிச அரசின் பங்காளி அமைச்சராக இருந்து பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை அங்கீகரித்துள்ளார். இதன் கீழ் பாரிய வேலை நிறுத்தக் கோரிக்கைகளை எழுப்ப முடியாது. தொழிலாளரோ, மக்கள் நலன் பேணும் தொழிற்சங்கங்களோ தாமாகப் போராட முன் வரவும் முடியாது. மீறினால், இலகுவாக ஒடுக்கி விடமுடியும். சம்பளப் பேரம் பேசுவதாகக் காட்டிக்கொண்டோ அல்லது எச்சில் பருக்கைகள் போலச் சில ரூபாய்கள் சம்பளவுயர்வைப் பெற்றுக் கொடுத்தோ வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் மேடையேறிக் குதிக்க முடியும். நாங்கள் மீண்டும் சென்றால், பாலும் தேனாறும் ஓடும் என்று எக்காளமிட முடியும். இ.தொ.காவின் உட்பிளவைச் சமாளிக்கவும், கோட்டாப் பணத்திற்காகப் பறக்கும் சுயநலவெறி கொண்ட மாவட்ட / தோட்டக்கமிட்டித் தலைவர்களை ஏவிவிட முடியும். இதுவரையும் தொழிற்சங்கங்கள் செய்த நாற்றமெடுக்கும் பணிகளை மூடிமறைத்துவிட்டுப் புனிதராகி, நிமிர்ந்து நிற்க எச்சில் பருக்கைகளான ரூபாய்க் காசுதான் பிரதான ஆயுதமாகியுள்ளது.

எனவே, அரசு தப்பிக்கொள்ளும், முதலாளிகள் தப்பிக்கொள்வார்கள், தொழிற்சங்க முதலாளிகள்மார் தட்டி மீண்டும் மகுடம் சூட்டிக் கொள்வார்கள். பாவம் தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் எச்சில் இலையை நோக்கிக் கையேந்தி நிற்க வேண்டும். தம் வியர்வையை மீண்டும் மீண்டும், சாந்தாக்கித் தர வேண்டும் என்பது தான் இந்த வாலைச் சுருட்டிக்கொண்டு பிரார்த்தனையில் இருக்கும் சம்பளக் கோரிக்கையின் அரசியல் என்பது யாருக்குப் புரியும்?

**தரிசனன்**

### வைத்தியருக்கு அச்சுறுத்தல் !

நோர்வூட் வெஞ்சர் தோட்ட வைத்திய அதிகாரியின் (EMA) வீட்டுக்கு வழங்கப்பட்டுள்ள மின்சார இணைப்பையும், குடிநீர் விநியோகத்தையும் இரண்டு வாரகாலமாக துண்டித்து வைத்துள்ள வெஞ்சர் தோட்ட அத்தியட்சகர் வைத்தியரின் ஏப்ரல் மாதத்திற்கான சம்பளத்தையும் மோசடி செய்துள்ளார்.

இதனால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள தோட்ட வைத்தியரான நமசிவாயத்தின் குடிநீர், மின்சார விநியோகத்தை மீண்டும் வழங்குமாறு அட்டன் நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

மேலும் அட்டன் மாவட்ட நீதிமன்றத்தில், 08.05.2000 அன்று நடைபெற்ற இது தொடர்பான 83063ம் இலக்க வழக்கு விசாரணை முடிய, மேற்படி வைத்தியரின் மகனான ஆசிரியரை நீதிமன்றத்திலேயே தாக்க முற்பட்டுள்ளார் அத்தியட்சகர். இது தொடர்பாக அட்டன் நீதிமன்றத்தில் 47ம் இலக்க முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு வெஞ்சர் தொழிலாளர் மீது கண்ணீர்ப்புகை பிரயோகித்து தாக்குதல் நடத்த ஏவியவர் இத்தோட்ட அத்தியட்சகரே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மாதாந்த சம்பளத்தை ஏப்ரல் மாதம் வைத்தியர் கோரிய போது சம்பளப் பட்டியலில் கையெழுத்து வாங்கிக் கொண்டு நான் உனது சம்பளத்தை கொடுத்து விட்டேன். நீ என்ன வேண்டுமானாலும் செய் என மிரட்டியுள்ளார்.

தோட்ட வைத்தியர் இருப்பிட வசதி போதாமையால் ஒரு தற்காலிக கொட்டில் அமைத்தமைக்காகவே இந்த ஏதேச்சதிகாரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

0 0 0

### ஆசிரியர்க்கு அச்சுறுத்தல் !

மலையகத்தின் பாடசாலைகளில் நடைபெறும் பல்வேறுபட்ட நிர்வாக மோசடிகள், நிதி மோசடிகள், பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு எதிராகப் பாரிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் கல்வி அதிகாரிகளை அமைச்சர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி மிரட்டியுள்ளார். பல ஆசிரியர்களுக்கு எதிராக அதிபர்கள், பழிவாங்கல்களில் இறங்கியுள்ளனர். காடைத்தனம் புரியும் ஆசிரியர்கள், தமது சகாக்களுடன் சேர்ந்து பல்வேறு அச்சுறுத்தல்களை விடுத்து வருவதோடு, அவதூறுப் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர். மலையகத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரும், சில பாராளுமன்ற உறுப்பினர்களும், கல்விக்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவரும், உள்ளூர் அரசியல்வாதிகளும், பொலிசாரும் இவர்களுக்கு ஆதரவாக மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

0 0 0

### விளக்கம் கோருகிறது இ. தொ. கா. !

பொகவந்தலாவை நகரில் வைத்து ஆசிரியர் ஒருவரை அச்சுறுத்திக் கொலை மிரட்டல் விடுத்த இ.தொ.கா. ஊழியரான மனோகரனுக்கு எதிராகப் பொகவந்தலாவைப் பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இ.தொ.காத் தலைமையகம் இவ் அச்சுறுத்தல் பெரும் "பாரதூரமான நடவடிக்கை" என்பதை ஏற்றுக் கொண்டு அவரிடம் "விளக்கம்" கோரியுள்ளது.

0 0 0

### வைத்தியசாலைக்கு மூடுவிழா !

சாமிமலை நகரில் 1998ம் ஆண்டு திறக்கப்பட்ட வைத்தியசாலை மூடப்பட்டு விட்டது. இவ்வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் செல்ல முடியாது என மறுப்பதாகச் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். இப்பிரதேசத்தில் 20 தோட்டங்களையும், நகரையும் சேர்ந்த 20,000 க்கு மேற்பட்ட மக்கள் இதனால் அவதியுறுகின்றனர்.

0 0 0

### அவர்களுக்கு இல்லை!

ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் நடைபெற்ற தோட்டக் கட்டமைப்பு அமைச்சின் நடமாடும் சேவையில் கவரவலத் தோட்டத்தைச் சேர்ந்த 42 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க உடன்பட்டது. ஆனால், சாமிமலை நகரின் காங்கிரஸ் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட குடும்பங்கள் ஐ.தே.கவை ஆதரிப்பவை என ஆறுமுகம் தொண்டமானுக்குச் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து மின்சாரம் வழங்க மறுக்கப்பட்டுவிட்டது. தோட்டக் கட்மைப்பு அமைச்சு, தன் அதிகாரத்தையும், வளங்களையும் கட்சி சார்பாக மட்டும் பயன்படுத்துவதோடு, துஷ்பிரயோகம் செய்து வருகிறது என்பது அம்பலமாகியுள்ளது.

0 0 0

### பொறுப்பற்றோர் வைத்தியசாலையில் !

பொகவந்தலாவ அரசாங்க வைத்தியசாலை வைத்தியர்களும், ஊழியர்களும், இனவாத நோக்கிலும், பொறுப்பின்றியும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

அண்மையில் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவரை இனவாத ரீதியில் திட்டித் தீர்த்ததோடு அம்புலன்ஸ் வாகனத்தில் வைத்துக் கடும் இரத்தப்போக்கு ஏற்பட்டுத் துடி துடித்த போதும் ஈவிரக்கமின்றித் திட்டித் தீர்த்துள்ளனர். இப்பெண் அனாவசியமாக, நாவலப்பிட்டி, பேராதனை, கண்டி வைத்தியசாலைகளுக்கு அலைக்கழிக்கப்பட்டும் உள்ளார்.

கொட்டியாகலைத் தோட்டத் தொழிலாளி ஒருவரை உரிய நேரத்தில் மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு வைத்திய அதிகாரி மறுத்தமையினால் நோயாளி வைத்தியசாலை விறாந்தையிலேயே மரணமாகியுள்ளார். இதனையடுத்து மரணமானவரின் உறவினர்கள் வைத்தியசாலையைச் சேதப்படுத்தியுள்ளனர். பொலிசார் உறவினர்களை அச்சுறுத்தி நஷ்ட ஈடு வழங்கக் கோரியுள்ளனர். இது குறித்துச் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

0 0 0

### சான்றிதழுக்குத் தடை !


கொழும்பில் வேலை செய்யும் மலையக இளைஞர் - யுவதிகளுக்குக் கிராம சேவகர் சான்றிதழ் எதனையும் கொடுக்கக் கூடாது என அம்பகமுவ பிரதேசச் செயலாளர் இப்பகுதி கிராம சேவகர்களைப் பணித்துள்ளார். இதனால் தொழில் நிமித்தம் கொழும்பில் தங்கியிருக்கும் மலையக வாலிபர்கள் ஆயிரக்கணக்கானோர் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# நோய்க்கு மருந்தா? நோயாளிக்கு மருந்தா?

இரண்டு வாரங்களாக நடைபெற்ற பெரிய தடல்புடல்களும் ஹாய் ஹூய்களும் இப்போது அடங்கி விட்டன. வடக்கில் நடைபெறும் யுத்தம்



தொடர்பாக சற்றேறக்குறைய முழுமையான மௌனம் நிலவுகிறது. இஸ்ரேலிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய படகுகள் புலிகளுடன் யுத்தம் செய்வதற்காக இப்போது கடலில் இறக்கிவிடப்பட்டுள்ளன. மேலதிகமாக வடக்குக்கு 4000 இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் போன்ற தகவல்கள், இன்னும் இரண்டொரு நாட்களில் பலாலி புலிகளிடம் விழுந்துவிடும் என்றிருந்த நிலைமையை மாற்றிவிட்டதாக காட்டுகின்றன. இந்த புதிய போக்குகள் யுத்தம் இன்னும் தொடர்ந்து நீடிக்கப்போகிறது என்பதையும், உடனடியாக பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதையுமே காட்டுகின்றன.

இந்தியாவில் நடந்த திடீர் கூட்டங்கள், அரசியல் இராணுவ மந்திராலோசனைகள், தமிழ்நாட்டு அரசாங்கத்துடனான பிரதமரின் பேச்சுக்கள், நோர்வே விஷேட தூதுவரின் வருகையும் அவரது இந்தியப் பயணமும், அமெரிக்க பிரதி அரசாங்க செயலர் பிக்ரிங்கின் திடீர் இந்திய இலங்கை விஜயம், அமெரிக்க போர்க்கப்பலின் நகர்வு போன்ற பல சம்பவங்கள் காரணமாக மே மாதத்தின் இறுதி இரண்டு வாரங்களும் ஒரே பரபரப்பாக இருந்தன. ஆனால், இந்தப் பரபரப்பு தற்போது ஓய்ந்து விட்டது. இலங்கை அரசாங்கம் யுத்தமே தனது ஒரே குறிக்கோள் என்பதில் விடாப்பிடியாக இருந்து செயற்படுவது என்ற முடிவுடன் குண்டுவீச்சிலும், படைகளை அனுப்புவதிலும் தன் பலத்தை முழுமையாகக் குவித்துள்ளது. பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களை நோர்வேயிடம் கையளித்துவிட்டு, கடந்த இரு வாரமும் கடத்தியவர்கள் அமைதியாகி விட்டார்கள். யுத்தம் தொடர்கிறது: யுத்தம் பற்றிய செய்திகள் மீதான தணிக்கை தொடர்கிறது: எதிர்வரும் ஜூன் 7ம் திகதி புதனன்று யுத்த மாவீரர்கள் தினம் கொண்டாடப்படுவதற்கான முயற்சிகள் தீவிரமாக நடக்கின்றன. மின்சாரம், தொலைபேசி, பெற்றோலிய வாயு (LPG) போன்றவற்றின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இவற்றுக்கு எதிரான மக்களது எதிர்ப்புக்களை நசுக்குவதற்கு வசதியாக நடைமுறையில் இருக்கும் அவசரகாலச் சட்டம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. நாட்டை யுத்த முனைப்புடன் வழிநடாத்திச் செல்வதற்கான சகல நடவடிக்கைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

நாட்டை யுத்த முனைப்புடன் நடாத்திச் செல்வது என்பது, வெறுமனே தெற்கிலுள்ள சிங்கள இனவாதிகளும் கட்சிகளும் நினைப்பது போல, புலிகளுக்கு எதிரான சண்டையை நோக்கி அரசாங்கம் தனது அனைத்து வளங்களையும் கவனத்தையும் குவிப்பது மட்டுமல்ல. அவ்வாறு செயற்படுவதனால் வரப்போகிற விளைவுகளை எதிர்கொள்வதும் கூட அதனுடன் சம்பந்தப்பட்டதாகிறது. இப்போது உயர்த்தப்பட்டிருக்கும் தொலைபேசி, மின்சாரம் மற்றும் காஸ் விலையேற்றம் மட்டுமல்ல இதைத் தொடர்ந்து இன்னும் பல விலையேற்றங்கள் நடைமுறைக்கு வரக் காத்திருக்கின்றன. இந்த விலையேற்றங்கள், வரி அதிகரிப்பு போன்ற அனைத்தும் கூட யுத்தமுனைப்புடனான நாட்டின் செயற்பாட்டுக்கான அத்தியாவசிய விடயங்கள் ஆகிவிடும். அதுமட்டுமல்லாமல் இவை மக்களின் அன்றாட தேவைகளையும், வாழ்வுக்கான அத்தியாவசிய செயற்பாடுகளையும் மட்டுப்படுத்தப் போகின்றன. இத்தகைய மட்டுப்படுத்தல்கள் தவிர்க்க முடியாத அளவுக்கு மக்களிடையே அதிருப்தி, விரக்தி, எதிர்ப்புணர்வு போன்ற பல்வேறுவிதமான உணர்வுகளை ஏற்படுத்தவே செய்யும். ஆனால், இவற்றை வெளிப்படுத்தும் வாய்ப்புகளும் கூட யுத்த முனைப்பின் பேரால் நசுக்கப்பட்டிருப்பதால், அவை தீவிரமான வன்முறை வடிவங்களை நோக்கிச் செல்வதனைத் தவிர்க்க முடியாது.

அண்மையில் நோர்வே தூதரகம் மீது வீசப்பட்டதாகக் கருதப்பட்ட குண்டுவீச்சு தொடர்பாக அதன் உயர்ஸ்தானிகர் வெளியிட்ட கருத்து மிகுந்து கவனத்துக்குரிய ஒரு கருத்தாகும். தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு அவர்களுக்கு பொருத்தான ஒரு ஜனநாயக வழி இல்லாமல் இருப்பது இப்படியான வழியில் அவர்கள் தமது எதிர்ப்பை காட்டுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று தெரிவித்திருந்தார். உண்மையில் இந்த அடிப்படையான கருத்து, நமது அரசியல் தலைவர்களுக்குப் புரிந்திருந்தால், நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய முக்கியமான பிரச்சினைக்கு என்றோ தீர்வு கிடைத்திருக்கும்.

ஜனநாயக வழிகளில் சகலவிதமான பாதைகளும் அடைக்கப்பட்டு தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்கள் நசுக்கப்பட்ட ஒரு நிலையில் தான் வன்முறை வடிவத்தை நோக்கி தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டார்கள் என்ற உண்மை இத்தனை காலம் கடந்த பின்பும் பலருக்குப் புரியவில்லை. பயங்கரவாதிகள், பயங்கரவாதம் என்ற சொற்களைக் கொண்டு தமிழ் இளைஞர்களது போராட்டம் முத்திரை குத்தப்படுவதை எப்போது ஜே.ஆர். ஆரம்பித்து வைத்தாரோ, அந்த முத்திரை குத்தல் மூலமாக, தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கான சட்ட அங்கீகாரம் பெறுதலை அவர் சாதித்துக் கொண்டாரோ அன்று முதல், அது இந்த நாட்டின் தலைவிதியையே பிடித்து ஆட்டிப்படைக்கிற ஒரு பெரிய விடயமாக மாறிவிட்டது.

அண்மையில் இன்று இலங்கையில் உருவாகியுள்ள நெருக்கடி சூழ்நிலை தொடர்பாக தென்னிலங்கை இடதுசாரிகள் மற்றும் ஜனநாயகவாதிகள் சிலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. அந்தக் கலந்துரையாடலின் போது அவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக கொண்டிருக்கும் புரிதல்கள் எவ்வளவு மேலோட்டமானவை, எவ்வளவுக்கு சிங்கள பேரினவாத சிந்தனைகளின் ஆதிக்கத்திற்கும் அதன் தொடர்புசாதனப் புனைவுகட்கும் ஆட்பட்டவை என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் தோல்வி தமிழ் மக்களின் தோல்வி என்றும் ஆனால் அவர்களது வெற்றி தமிழ் முஸ்லிம் மக்களின் வெற்றியாக அமையுமா என்பது இன்னமும் தெளிவற்ற நிலையிலேயே உள்ளது என்றும் உங்களது பத்திரிகை ஒருதடவை எழுதி இருந்ததே, தமிழீழம் கிடைத்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார் ஒரு நண்பர். சிங்கள இனவாதத்தை தொடர்ந்து எதிர்த்து வரும் சிங்கள நண்பரான இவர், இன்றைய அரசாங்கத்தின் யுத்த முனைப்பு நடவடிக்கைகளை தீவிரமாக எதிர்க்கும் ஒருவரும் கூட.

தமிழீழம் என்பது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையிலிருந்து அவர்களை விடுவிக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்ட ஒரு தீர்வு. அந்த தீர்வு எதைச் சாதிக்காவிட்டாலும், தமிழ் மக்களை இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடாத்தப்படும் நிலையிலிருந்து நிச்சயம் அவர்களை விடுவிக்கும் என்பதில் ஐயமில்லை. தமிழர்கள் என்பதற்காக தண்டிக்கப்படுகிற, இம்சைப்படுத்தப்படுகின்ற ஒரு நிலையை அவர்கள் ஒருபோதும் தமிழீழம் வந்தால் அனுபவிக்கப் போவதில்லை என்பது வெளிப்படையான உண்மை. தமிழீழம் ஜனநாயக சோசலிச தமிழீழமாக இருக்குமா இல்லையா என்பது இந்தப் பிரச்சினையின் போது ஒரு இரண்டாம் பட்சப் பிரச்சினையாகி விடுகிறது என்று சொன்னேன்.


ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசில் ஜனநாயகமோ சோசலிசமோ கிடையாது. அதிலே வெறும் ஸ்ரீலங்கா மட்டுமே - சிங்கள இனவாதம் மட்டுமே - மீதிருக்கிறது என்ற ஒரே ஒரு உண்மை மட்டுமே தமிழீழத்தை ஒவ்வொரு தமிழர்களும் ஆதரிக்கப்போதுமான காரணமாகும் என்று அவர்களுக்கு நான் விளக்கினேன்.

இந்த விளக்கம் புலிகளை கண்மூடித்தனமாக ஆதரிப்பதாக அர்த்தம் கொள்ளப்படும் வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடும். ஆயினும் எமது சமூக யதார்த்தம் இன்று அவ்வாறு தான் உள்ளது. புலிகளினால் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட எந்த ஒரு தனிநபரும் தமிழர் என்பதற்காக தமது உரிமைகளைப் பறிகொடுக்கவில்லை. புலிகளுடன் தமது ஜனநாயக உரிமைகளுக்காக தமிழர்களும், தமது இனரீதியான உரிமைக்காக முஸ்லிம் மக்களும் கணக்குத் தீர்க்க வேண்டிய நிலை தமிழீழம் எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்து தொடரக்கூடும். ஆனால், அது தமிழீழ எதிர்ப்பாக நிச்சயம் இருக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டேன்.

இந்த விவாதத்தில் உள்ள நியாயத் தன்மையை விளங்கிக்கொள்ள முடிந்தாலும் இதனை ஜீரணிப்பது அவர்களுக்குக் கடினமாகவே இருந்தது.

தமிழ் மக்கள் மீதான இன ஒதுக்கல் நடவடிக்கைகட்கு தமிழீழம் தவிர்ந்த வேறு தீர்வு மார்க்கங்களும் சாத்தியமாக இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆரம்பத்தில் சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் சரி, அதற்குப் பின் திம்பு பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் போதும் சரி தமிழீழத்திற்கும் குறைவான தீர்வுகட்கு தமிழ்த் தலைவர்கள் தயாராகவே இருந்திருக்கிறார்கள். ஆனால், தீர்வு தமிழ் தேசியத்தின் உரிமைகளை கௌரவிக்கவும், அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளவும் தயாரற்ற இலங்கை அரசின் நிலைப்பாடு காரணமாக தொடர்ந்து நடைமுறைக்கு வராமல் இழுபட்டுச் செல்கிறது.

சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னைய ஓரிரு ஆண்டுகளும் ஆட்சிக்கு வந்த புதிதிலும் ஒற்றை ஆட்சிமுறையை மறுதலித்து 'ஒருமித்த' ஆட்சி பற்றி (Unified) பேசிக் கொண்டிருந்தார். இரண்டு சுயாதீனமான சுயாட்சி அமைப்புகளின் கூட்டமைப்புப் பற்றி (Confederation)யும் முதன் முதலில் பிரஸ்தாபித்தவர் அவரே. சமஷ்டி பற்றி முதன் முதலாக அதை இலங்கையின் ஆழமான இன சௌஜன்னிய வாழ்வுக்கு அடிப்படையான ஒரு முறைமை என்று - எப்படி இன்றைய ஜனாதிபதியின் தந்தையார் பண்டாரநாயக்க அவர்கள் அரசியல் தீர்க்க தரிசனத்துடன் குறிப்பிட்டாரோ அவ்வாறே சந்திரிகாவும் 'கூட்டமைப்பு' பற்றி பிரஸ்தாபித்தார். இவை இரண்டும் நிச்சயமாக தமிழீழத்திற்கு மாற்றான, இலங்கையின் சுயாதிபத்தியம் இறைமை என்பவற்றை தொடர்ந்தும் பேண வகை செய்யும் தீர்வாக முன்மொழியப்பட்டிருந்தன. ஆனால், இன்று இவை இலங்கை அரசியல்வாதிகள் மத்தியில், பேரினவாதத்தின் இனவெறிக்கூச்சலுக்குப் பயந்து, கைவிடப்பட்ட விடயங்களாகப் போய்விட்டன.



'தமிழீழம் வந்தால் ஆதரிப்பீர்களா?' என்ற கேள்வியின் பின்னுள்ள அரசியல் நிலைப்பாடு என்பது தமிழீழம் இன்றைய பிரச்சினைக்கு தீர்வு தரக்கூடிய சாத்தியமான தீர்வுகளுள் ஒன்று என்ற கணிப்பீட்டின் அடிப்படையிலான ஒரு கேள்வி அல்ல. மாறாக சிங்கள இனவாதத்தின் உடன் பிறப்பான சுய அச்சம் காரணமாக மேலெழுந்துள்ள, ஆயுதமேந்திய வன்முறை எதிர்ப்புப் போராட்டத்தை வெறும் பயங்கரவாதமாக குறுக்கிப்பார்த்து, தமது நிலைப்பாட்டினை நியாயப்படுத்துகிற போக்கிற்குத் தோள் கொடுக்கின்ற ஒரு கேள்வியாகும்.

இலங்கையின் இன்றைய யுத்த சூழல் தமிழீழத்திற்கு மாற்றான, 'முதலமைச்சர்' பதவியோடு சம்பந்தப்பட்ட மாகாண சபை மட்டத்திற்கு மேலான ஒரு தீர்விற்கு தவிர்க்க முடியாமல் போக வேண்டிய நிலையை தவிர்க்க முடியாமல் உருவாக்கி விட்டிருக்கிறது. இது யார் விரும்பினால் என்ன விரும்பாவிட்டாலென்ன இன்றைய யதார்த்தம் என்றாகி விட்டது.

உண்மையில், ஜனாதிபதி அவர்களே முன்பொரு தடவை கூறியது போல (சரிநிகரில் நாம் இதை பலதடவை சுட்டிக் காட்டியிருந்தோம்.) நாடு ஏற்கெனவே பிளவுண்டு போய்தான் இருக்கிறது. மக்களது மனோவியல்பில் தீவிரமான பிளவை நாம் பிரத்தியட்சமாக இன்று காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் பூகோள ரீதியான எல்லை பிரிப்பு மட்டுமே என்ற நிலை முழுமையான யதார்த்தமாக நிலவுகிறது.

ஆனால், இதை நாம் கண்களை மூடிக்கொண்டு மறுத்து வருகிறோம்.

உண்மைய எதிர்கொள்ளத் தயங்கி நிற்கிறோம்.

ஆனால், இலங்கைக்கு வெளியே இப்போது பரவலாக கூட்டாட்சி (Confederation) தொடர்பான கருத்துக்கள் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் முன்னால் இலங்கை உயர்ஸ்தானிகர் திருமதி ரேசிற்றா சபார் (Ms. Tersita Shaffer) அண்மையில் South Asia Monitor பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் இலங்கைக்கு கூட்டாட்சி முறையே உரிய தீர்வு என்று வலியுறுத்தியுள்ளார். "இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வினை நோக்கிய பல புரட்சிகரமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. சிங்கள அரசியல் களத்திலும் புலிகள் மத்தியிலும் இதை ஏற்றுக் கொள்ள வைப்பது கடினமாக இருக்கக் கூடும். ஆயினும் இதுவே இன்றுள்ள பொருத்தமான தீர்வாக இருக்கமுடியும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி அவர்களும் "செக்கஸ்லாவாக்கிய மாதிரியானது ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் ஒரு பூரணமான அமைதியான தீர்வைக் காண உதவக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.

உண்மை கசப்பாக இருக்கலாம். ஆனால், அது தான் எதிர்காலம் பற்றிய முடிவுக்கு அடிப்படையானது.

இலங்கை அரசு அதுபற்றி எப்போது புரிந்து கொள்ளப் போகிறது என்பது தான் அதன் விடிவுக்கான முன்நிபந்தனையாக உள்ளது.

பலருக்கும் விளங்காத ஒரு விடயம், மருந்து நோய்க்கா, நோயாளிக்கா கொடுக்கப்படுகின்றது என்பது தான்.

**நோயாளிக்கு என நினைப்பவர்கள் நோயைக் காப்பாற்றுவார்கள்.**

**நோய்க்கு என நினைப்பவர்கள் நோயாளியைக் காப்பாற்றுவார்கள்.**

இலங்கை அரசாங்கம் எதை விரும்புகிறது என்பதை இன்னும் சில காலம் போகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்!

**நாசமறுப்பான்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் வீதம் சமீப காலங்களில் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# கருகும் மொட்டுக்கள்!

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருகி வரும் குழந்தைத் தொழிலாளர்களும் அதனால் ஏற்படும் சமூகவியல் விளைவுகளும் பற்றிய சில அவதானக் குறிப்புகள்


போர்ச் சூழல், தொழில் வாய்ப்பின்மை, வறுமை நிலை என்பன இங்குள்ள மக்களை வாட்டி வதக்கி வருகின்ற இந்தக் காலத்தில், இங்குள்ள குழந்தைகள் வருமானமீட்டும் தொழில்களை நோக்கி ஈர்க்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் எரிந்து கொண்டிருக்கும் " போர் " நெருப்பில் பல குடும்பங்கள் சுட்டெரிக்கப்பட்டு, அதன் எச்சங்களாகிப் போன குழந்தைகள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களால் தமது வீடுகளில் வேலைக்கமர்த்தப்படுவது இங்கு சாதாரணமாக நடைபெற்று வரும் ஒரு விடயமாகி விட்டது.

நகரத்தில் அலுவலகங்களில் பணிபுரியும் அனேகமான உத்தியோகஸ்தர்கள், தமது வீடுகளில் ஒரு சிறுவனையோ அல்லது சிறுமியையோ வேலைக்கமர்த்திக் கொள்வதை அவசியமான ஒன்றாகவும், நாகரீகமான ஒரு நடைமுறையாகவும் கருதி வருகின்றார்கள்.

ஆனால், 16 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை வீடுகளில் வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம் என்பதையோ அல்லது இது ஒரு சமூக விரோதச் செயல் என்பதையோ சாதாரணமாக இங்கு எவருமே உணர்வதாகத் தெரியவில்லை.

16 வயதிற்குட்பட்ட சிறுவரை வேலைக்கமர்த்துவதை ஒரு வகையில் " சிறுவர் துஷ்பிரயோகமா"கவே இன்றைய உலகம் நோக்கி வருகையில், மட்டக்களப்பு நகரில் வசிக்கும் பல அலுவலகர்கள் தமது வீட்டில் ஒரு குழந்தையை வேலைக்கமர்த்துவதைத் தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள உதவும் ஒரு நடைமுறையாக நினைத்துச் செயற்பட்டு வருகின்றார்கள்.



வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் குழந்தைகள் படும் கஷ்டங்களையும், எதிர்கொள்ளும் சித்திரவதைகளையும், மனித உரிமைகளையும் பற்றியும், சமூக விடுதலை பற்றியும் வாய் கிழியக் கூச்சலிடும் அமைப்புக்கள் இங்கு கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

போரில் பாதிப்படையும் குழந்தைகளின் நலன்களைப் பேணுவதற்கென்றே உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வரும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட, போரின் காரணமாக அனாதைகள் ஆக்கப்பட்டு, பல்வேறு வீடுகளில் அடிமைகளாகக் காலந் தள்ளும் குழந்தைத் தொழிலாளர்கள் விடயத்தில் அக்கறை காட்டுவது இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய சமூகத்தின் விழிப்புணர்வும், கரிசனையும் சிறிய அளவேனும் இல்லை என்றே கூற வேண்டும்.

16 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்த வடிவிலாவது வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரிய குற்றம் என்று இலங்கை அரசின் சட்டம் தெரிவிக்கின்றது. குழந்தைகளை வேலைக்கமர்த்துவோர் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கென்று இலங்கையில் விஷேட பொலிஸ் பிரிவு ஒன்றும் செயற்பட்டு வருகின்றது.

ஆனால், மட்டக்களப்பு நகர எல்லைக்குள் மட்டும் சுமார் 2,000இற்கும் அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற ஆய்வுகள் தெரிவிக்கின்ற போதிலும், கடந்த வருடம் முழுவதிலும், குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய இரண்டு முறைப்பாடுகள் மட்டுமே மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய சமுதாயத்தின் விழிப்புணர்வற்ற தன்மையும், அறியாமையுமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. சிறு வயது முதல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள், மனோதத்துவ ரீதியாகப் பல்வேறு தாக்கங்களை எதிர்கொள்வதாகச் சிறுவர் நல மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

குழந்தைத் தொழிலாளர்களுக்கு அடிப்படைக் கல்வி மறுக்கப்படுகின்ற அதேவேளை, அந்தக் குழந்தைகளுக்கான அடிப்படை வசதிகள், அடிப்படை உரிமைகள் என்பனவும் மறுக்கப்படுகின்றன.

இப்படியான அடிமைச் சூழலில் வளர்ந்து வரும் குழந்தைகளின் எதிர்காலம் நிச்சயமாக ஒரு இருளடைந்ததாகவே காணப்படும்.

இன்று சமுதாயத்தில் பாரிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வரும் நபர்களின் குழந்தைப் பருவத்தை ஆராய்ந்து பார்த்தால், அவர்களில் பலர் தமது சிறு வயதுகளில் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து இருப்பார்கள்.

தொழிலாளர்களாகக் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு இயல்பாக ஏற்படக் கூடிய, சமுதாயத்தின் மீதான கோபம் எதிர்காலத்தில் அவர்களைத் தீவிர சமூக விரோதிகளாக மாற்றி விடும் அபாயத்தை ஏற்படுத்துகின்றது.

ஆனால், இந்த விடயம் சம்பந்தமாகக் குழந்தைத் தொழிலாளர்களுக்கோ, அவர்களது பெற்றோர்களுக்கோ அல்லது குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துபவர்களுக்கோ, எச் சந்தர்ப்பத்திலும், எவராலும் விளங்கப்படுத்தப் படுவதில்லை என்பதும், குழந்தைத் தொழில் வளர்ச்சி அடைவதற்கு ஒரு காரணம் எனலாம்.

மட்டக்களப்பைப் பொறுத்த வரையில் இங்கு குழந்தைகள் பல்வேறு துறைகளில் தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தப்படுகின்றார்கள்.

குறைந்த ஊதியம் வழங்குவதுடன், குழந்தைகளை இலகுவாகக் கட்டுப்படுத்திக் கையாள முடியும் என்பது, தொழில் வழங்குனர்கள் பெரும்பாலும் குழந்தைகளைத் தெரிவு செய்வதற்கான பிரதான காரணம். வயல்களில் வேலை செய்வது, வெற்றிலைச் செடிகளுக்கு நீர் இறைப்பது, கால் நடைகளைப் பராமரிப்பது, கடைகளில் வேலை செய்வது மற்றும் வீடுகளில் வேலையாட்களாக இருப்பது போன்ற வேலைகளுக்கு அதிகமாகக் குழந்தைகளே தொழில் வழங்குனர்களால் விரும்பப் படுகின்றார்கள்.

இவர்களில் வீட்டு வேலையாட்களாகப் பணிபுரியும் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளே மிகவும் கொடூரமானது.

வீடுகளில் வேலையாட்களாக (Domestic Servents) பணிபுரியும் குழந்தைகள் வீட்டு எஜமானர்களாலும், அவர்களது பிள்ளைகளாலும் சொல்ல முடியாத சித்திரவதைகளை அனுபவிக்கின்றார்கள்.

கண்மூடித்தனமாகத் தாக்கப்படுதல், சுகாதாரமற்ற இடங்களில் தங்க வைத்தல், மிகுதியான, பழுதடைந்த உணவுகளை வழங்குதல், பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படல் என்று பல்வேறு இன்னல்களை இவர்கள் பணிபுரியும் வீடுகளில் எதிர்நோக்குகின்றார்கள்.

இங்கு, இந்தக் குழந்தைகளின் " சிறுபராயம் " முற்றாக மறுக்கப்படுகின்றது. அவர்களது உணர்வுகள், உரிமைகள் எல்லாம் நசுக்கப்படுகின்றன.

வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உதாரணமாக, மட்டக்களப்பில் வெகு அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்களைக் கூறமுடியும்.

கடந்த 1999ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள தாண்டவன்வெளியில், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஒருவரது வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த ஒரு சிறுமி, ஒரு நாள் திடீரென்று அந்த வீட்டை விட்டு வெளியேறி மட்டக்களப்புப் பிரதான பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்திருந்தாள்.

அந்தச் சிறுமியின் உடலில் தாக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டதால், அந்தக் காயங்களை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்ட, குறிப்பிட்ட வீட்டு எஜமானி பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் மேலதிக பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அந்தச் சிறுமி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த வீட்டு எஜமானரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று, இந்த வருடம் மார்ச் மாதம் 03 ஆம் திகதி, மட்டக்களப்பு இருதயபுரத்தில் ஒரு வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த 12 வயதுச் சிறுமி, அந்த வீட்டில் இருந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவனால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

பராயமடையாத அந்தச் சிறுமி பல தடவைகள் அந்த மாணவனால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானதாகவும், இதன் காரணமாக அச் சிறுமி உடல், உள வேதனைகளுக்கு உள்ளாகி இருப்பதாகவும் சிறுமியைப் பரிசோதித்த வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்திற்கெதிராகவும் மட்டக்களப்புப் பொலிசார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி, மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜயந்திபுரத்திலுள்ள ஒரு வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த வீரக்குட்டி மகேஸ்வரி என்ற சிறுமியும், வீட்டு உரிமையாளராலும், அவரது மனைவியாலும் பலமாகத் தாக்கப்பட்டு, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். (பார்க்க பெட்டிச் செய்தி.)

மேலே தெரிவிக்கப்பட்ட சம்பவங்கள், மட்டக்களப்பு நகரில் வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்ட குழந்தைகள் மீது அண்மையில்



படத்திலுள்ள சிறுமியின் பெயர் : வீரக்குட்டி மகேஸ்வரி, மட்டக்களப்பு சித்தாண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.

மட்டக்களப்பு நகரில் ஜயந்திபுரம் என்ற இடத்தில், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஒருவரது வீட்டில் இந்தச் சிறுமி வேலைக்கமர்த்தப்பட்டிருந்தாள்.

கடந்த 10. 04. 2000 அன்று இந்தச் சிறுமி அந்த வீட்டு உரிமையாளராலும், அவர் மனைவியாலும் பலமாகத் தாக்கப்பட்டு, பின்னர் காயங்களுடன் அயலிலுள்ளவர்களால் மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டாள். இச் சிறுமி, மட்டக்களப்பு சூர்யா பெண்கள் அபிவிருத்திக் கழகத்தின் ஊடாக மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள். சிறுமி தாக்கப்பட்ட சம்பவம் பற்றி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மறுதினம், அதாவது 11. 04. 2000ஆம் திகதி 02.00 மணியளவில் இந்தச் சிறுமி வைத்தியசாலையில் இருந்து கடத்தப்பட்டாள்.

இதைத் தொடர்ந்து பெண் உரிமை அமைப்புக்களால் இந்த விடயம் பெரிதாக்கப்பட்டு, மட்டக்களப்புப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணையை மேற்கொண்ட மட்டக்களப்புப் பொலிசார் இந்தச் சிறுமி வேலைக்கமர்த்தப்பட்டிருந்த வீட்டு உரிமையாளராலேயே கடத்தப்பட்டதைக் கண்டு பிடித்தனர்.

அதேவேளை, மட்டக்களப்பு வைத்தியசாலை மருத்துவ விடுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஒரு தாதியும், சிறுமி கடத்தப்பட்டதைக் கண்டதாகச் சாட்சி அளிக்க முன் வந்தார். தாதியின் வாக்கு மூலத்தி ன்படியும், சிறுமி ஏற்கெனவே வழங்கியிருந்த வாக்கு மூலத்தின் படியும், சிறுமியை வேலைக்கு அமர்த்தி இருந்த நபரும், அவர் மனைவியும் மட்டக்களப்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்கள்.

தற்போது, இந்த விசாரணை மட்டக்களப்பு மாவட்ட நீதி மன்றத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



நிகழ்த்தப்பட்ட வன்முறைகளில் வெளியே தெரிய வந்து நடவடிக்கை எடுக்கப்பட்ட மிகச் சிலவற்றில் குறிப்பிடத்தக்கவைகள்.



ஆனால், வெளியே தெரியாமல் இப்படியான குழந்தைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பலவாறான சித்திரவதைகள், பல தரப்பாலும் மறைக்கப்படும் நிகழ்வுகள் இங்கு பரவலாக இடம் பெற்று வருகின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் ஒரு வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த சிறுமியை நிர்வாணமாகப் புகைப்படமெடுத்த சம்பவமும் விவேகமான முறையில் மறைக்கப்பட்டிருந்தது.

வேலைக்கமர்த்தப்பட்டிருந்த ஒரு சிறுவனைக் கயிற்றினால் கட்டி வைத்துத் திருக்கை மீனின் " வால் " பகுதியால் தாக்கிய சம்பவமும், தவறுவிட்ட ஒரு சிறுமி மீது கொதிக்கும் நீரை ஊற்றிய சம்பவமும், வீட்டு உரிமையாளர்களுக்குச் சமுதாயத்திலிருந்த அந்தஸ்தைப் பயன்படுத்தி அமுக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் பணிபுரியும் ஒரு இளம் தம்பதிகளிடம் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த ஒரு சிறுமி, அருகில் உள்ள வீட்டில் வசித்த வந்த 70 வயது வயோதிபரால் அசிங்கமான, அருவருப்பான செய்கைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அந்தத் தம்பதிகள் பகலில் வேலைக்குச் செல்லும் போது, அந்த வயோதிபரிடம் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட அந்தச் சிறுமியின் தனிமையும், அறியாமையும் அந்த வயோதிபரால் கேவலமான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒரு நாள் இந்த விடயம் அந்த வயோதிபரின் மகளால் நேரடியாகப் பார்க்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த வயோதிபர் அங்குள்ள ஒரு முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டார்.

இப்படியான எத்தனையோ கொடூர நிகழ்வுகள், வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள குழந்தைகளுக்கு இன்னும் இடம் பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.


அறியாமையும், இயலாமையும், பயமும் இந்தக் கொடூரங்களை வெளியே சொல்ல முடியாதபடி குழந்தைகளைக் கட்டிப் போட்டுள்ளன.

சூழ்நிலைகளின் கைதிகளாகிப் போன எத்தனையோ சிறுவர், சிறுமிகள் தமது விருப்பத்திற்கு விரோதமான செய்கைகளைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு, ஈற்றில் அந்தச் செய்கைகளுக்கேற்றவாறு தங்களையே மாற்றிக் கொள்ள ஆரம்பித்த பரிதாபங்களும் இடம் பெற்று வருகின்றன.

மட்டக்களப்பைப் பொறுத்த வரையில் குழந்தைத் தொழிலாளர்களது அதிகரிப்பிற்கான காரணங்களை ஆராய்ந்தோமானால், அதில் முதன்மையானதாக இங்கு நடைபெறும் போரையும், அதன் விளைவுகளையுமே குறிப்பிடலாம்.

நெற்செய்கையையும், மீன் பிடித் தொழிலையும் பெரும்பான்மையாக மேற்கொள்ளும் இங்குள்ள மக்கள், போர் காரணமாக இவ் இரண்டு தொழில்களிலுமே முழுமையாக ஈடுபட முடியாத நிலையில், தமது குடும்பங்களைப் போஷிப்பதற்குத் தேவையான மேலதிக வருமானம் தமது குழந்தைகளை வேலைக்கமர்த்துவதன் மூலம் கிடைக்கின்றது என்ற வகையில் திருப்திப்பட்டுக் கொள்கின்றார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டைச் சரியான முறையில் திட்டமிடாததால் ஏற்பட்ட குடும்பப் பெருக்கத்தில், குழந்தைகளைப் போஷிப்பதில் உள்ள சிக்கல்களையும், அந்தக் குழந்தைகள் மூலம் கிடைக்கக் கூடிய மேலதிக வருமானத்தையும் கருத்திற் கொண்டு, தமது குழந்தைகளை வேறு வீடுகளில் வேலைக்கமர்த்துவதை அனேகமான பெற்றோர் விரும்பியே ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.



ஆனால், தமது குழந்தைகளின் "இளமை", பறிக்கப்படுவதற்குத் தாமும் ஒரு காரணமாகின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளும் அறிவும், உணர்வும் இவர்களுக்கு இல்லை.

அதேவேளை, எமது சமூகமும் குழந்தைத் தொழிலாளர்கள் விடயத்தில் மௌனமான போக்கையே கடைப் பிடிக்கின்றார்கள்.

சமுதாய நலனில் அக்கறை கொண்டுள்ள ஒரு சிலராவது, குழந்தைத் தொழிலாளர்கள் சம்பந்தமான விடயங்களை வெளிக் கொணர எடுக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகள், அந்தக் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது எமது இனத்தின் எதிர்காலத்திற்கே ஒளிமயமானதாக அமையலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

நிராஜ் டேவிட்

கிழக்கு மாகாணத்தில் எரிந்து கொண்டிருக்கும் ' போர் ' நெருப்பில் பல குடும்பங்கள் சுட்டெரிக்கப்பட்டு, அதன் எச்சங்களாகிப் போன குழந்தைகள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களால் தமது வீடுகளில் வேலைக்கமர்த்தப்படுவது இங்கு சாதாரணமாக நடைபெற்று வரும் ஒரு விடயமாகி விட்டது.

நகரத்தில் அலுவலகங்களில் பணிபுரியும் அனேகமான உத்தியோகஸ்தர்கள், தமது வீடுகளில் ஒரு சிறுவனையோ அல்லது சிறுமியையோ வேலைக்கமர்த்திக் கொளவதை அவசியமான ஒன்றாகவும், நாகரீகமான ஒரு நடைமுறையாகவும் கருதி வருகின்றார்கள்.

ஆனால், 16 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை வீடுகளில் வேலைக்கமர்த்துவது தண்டனைக்குரியகுற்றம் என்பதையோ அல்லது இது ஒரு சமூக விரோதச் செயல் என்பதையோ சாதாரணமாக இங்கு எவருமே உணர்வ்தாகத் தெரியவில்லை.

# தணிக்கை பலவிதம்..!!!

- மு. பொ.

**தணிக்கை** என்பது ஒரு நாட்டின் அரசு தனது இருப்புக்கு எப்பொழுது ஆபத்து ஏற்படுவதாக உணர்கிறதோ அப்பொழுது அந்நாட்டில் உள்ள சகல மக்கள் தொடர்பு ஊடகங்களுக்குப் போடும் வாய்ப்பூட்டாகும்.

இத்தணிக்கையானது பலவிததோற்றங்களில் இயக்கங்கொள்வது இன்னொரு விடயம். ஜனநாயக ரீதியாக இயங்குவதாகச் சொல்லப்படும் ஒரு அரசு. தனது இருப்புக்கு ஆபத்து ஏற்படுவதாக உணரப்படும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் அவசரகால நிலை (Emergency) என்ற ஒன்றைப் பிரகடனப்படுத்தி அதன் சட்டவிதிகளுக்மைய மக்கள் தொடர்புசாதனங்களான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இன்னும் பொதுக்கூட்டங்கள் நடாத்துதல், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல் போன்ற சகல மக்கள் வெளிப்பாட்டுச் சாதனங்களுக்கும் தடை போடுகிறது. அதன் மூலம் மக்களின் எழுத்து பேச்சு, என்னும் அடிப்படை வெளிப்பாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இதனால் நாட்டின் உண்மை நிலவரம் மக்களுக்குத் தெரியாமல் செய்யப்படுவதோடு அரசு தன்னைத் தக்கவைப்பதற்கு எவை தேவையெனக் கருதுகிறதோ அவ்விஷயங்களையே மக்கள் முன் உண்மையென வைக்கிறது.

இது ஏற்கெனவே வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் ஒரு ஜனநாயக அரசு, புதிய நெருக்கடிகால அதிகாரங்களைப் பிறப்பிக்கும்,போது, அதன் உடன்பிறப்பாக இத்தணிக்கையும் செயல்படத்தொடங்குகிறது. 1956, 1958களில் பண்டாரநாயக்கா ஆட்சியின் போது, மேற்படி அவசரகால நிலைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. சுருக்கமாகச் சொல்லப்போனால் தேசிய இனப்பிரச்சினை தலைதூக்கிய காலத்திலிருந்து (அதாவது 1956ல் இருந்து) இன்று வரை ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள், பெரும்பாலான தமது ஆட்சிக் காலத்தை அவசரகால நிலையிலும் அதன் மூலம் பிறப்பிக்கப்படும் பத்திரிகை தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழுமே ஓட்டிவந்துள்ளன.

ஜனநாயக அரசுகள் என்று சொல்லப்படுபவை தமது இருப்புக்கு அந்தரம் ஏற்படும் போது காட்டப்படும் 'முகம்' இதுவென்றால் இன்னொரு வகை இன்னும் சுவையானது.

அதாவது சோஷலிஸப் 'புரட்சி'யை ஏற்படுத்தி ஆட்சிக்கு வரும் அரசுகளோடு உடன்பிறப்பாக வருவது இன்னொரு வகைத் தணிக்கையாகும். ஸ்ரலின்கால ரஷ்ஷியாவில் இது உச்சத்தொழிற்பாட்டைக் கொண்டிருந்தது. கவிஞன் மாயகொவஸ்கி இத்தணிக்கைக்கு முகம் கொடுக்க முடியாது தற்கொலை செய்து கொள்வதன் மூலம் தன்னெதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டான். இவ்வாறே மாபெரும் எழுத்தாளர்களான பொறிஸ் பஸ்ரனாக், அலெஸான்டர் சொல் சொலன்ஸ்ரைன், அசுமத்தாவ் போன்றவர்கள் வாய் மூடப்பட்டனர், துன்புறுத்தப்பட்டனர். ஏனையோர் இத்தகைய தணிக்கையை மீறப் பலவித இலக்கிய உத்திகளைக் கையாண்டனர். இக்கால ரஷ்ஷிய இலக்கியம் பற்றி ஆய்வு மேற்கொண்ட விமர்சகர்கள், பல எழுத்தாளர்கள் தமது பால்யகால அனுபவங்களை மீட்டெடுக்கும் சாட்டில் அன்றைய அடக்குமுறையைத் தோலுரித்துக் காட்டினர் என்று கூறுவர். (இத்தகைய விதத்தில் பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் நிலவிய அரச அதிகாரப் போக்கிற்கு எதிரான குரலை, 'கலிவர்ஸ் ட்ரவல்' என்ற படைப்பின் மூலம் ஜொனதன் ஸ்விப்ஃற் முன் வைக்கிறார்.) இங்கே சோஷலிஸ அரசு என்னும் தேன்முலாம் பூசப்பட்ட சர்வாதிகார அமைப்புக்கு எதிராக அந்நாட்டின் அரைவாசிக்கும் மேலானோர் குரல் கொடுக்கும் நிலையிலிருந்தாலும் அதற்கு அங்கே சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இங்கே அரசென்பதே தணிக்கையில் தான் நிலைநாட்டப்படுகிறது.

இதே நேரத்திரல் இன்னொரு வகைத் தணிக்கையையும் நாம் பார்க்கலாம். அதாவது இனம், மொழி, சமயம் போன்ற உணர்வுகளை வெறிநிலைக்குத் தூண்டிவிட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவோடு நிலை நாட்டப்படும் பாஸிச அரசுகள் சிறுபான்மை மக்களின் வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு மிகக் கொடூரமான தணிக்கையைக் கையாள்கின்றன. ஹிட்லரின் நாஸி (Nazi) ஆட்சியின் போது யூதர்களும், இடதுசாரிகளும் இவ்வாறே நசுக்கப்பட்டனர். இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகளில் அவ்வப்போது அத்தகைய குணக்கூறுகள் தோற்றம் பெற்றிருந்ததைக் காணலாம். நாஸிகளால் பிரான்சு தேசம் கைப்பற்றப்பட்டிருந்த போது அதை எதிர்ப்பதற்காக 'ஈக்கள்' என்ற நாடகத்தை சாத்தர் எழுதினார்.



2

யாழ்ப்பாணத்தில் சற்றடே றிவியூ (Saturday Review) பத்திரிகையின் சகோதர இதழாக வெளிவந்த 'திசை' பத்திரிகையின் காலத்தில் எமக்கு சில அனுபவங்கள் ஏற்பட்டதுண்டு. அக்காலத்தில் இந்திய இராணுவம் ஈ.பி.ஆர்.-எல்.எப். விடுதலைப் புலிகள் ஆகிய மூன்று அமைப்புகளின் மத்தியில் இப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. ஆனால், இவை எவையும் எமக்கு தணிக்கை என்ற ஒன்றை விதித்ததாக இல்லை. இதன் ஆசிரியர் பொறுப்பை மேற்கொண்டிருந்த நான் எனக்கு உதவியாகப் பணி புரிந்த யேசுராசா, 'சற்றடே றிவியூ'வின் ஆசிரியராகப் பணி புரிந்ததோடு, எமக்கும் உதவிய ஏ.ஜே.கனகரத்னா இன்னும், மு.திருநாவுக்கரசு, நிலாந்தன், திருச்செல்வம் ஆகிய நாங்கள் எமக்குள் ஒருவித தணிக்கையை மேற்கொண்டவாறே இயங்கினோம். தமிழ்த்தேசியம் பற்றிய தெளிவான கருத்துக்கள் எமக்கிருந்தன. இக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பலவகை கொடுமைகளுக்கு இலக்காகினர். இதனால் 'தமிழ்ப் பேரினவாதம்' என்ற தலைப்பிட்டு ஆசிரிய தலையங்கமொன்றை நாம் எழுதினோம். அது முஸ்லிம் மக்களின் துன்பத்தில் நாம் பங்குகொண்ட உணர்வையும் அவர்களுக்கு ஓர் ஆறுதலையும் தருவதாய் அமைந்தது. அதேவேளை சில சந்தர்ப்பவாதிகளால் முஸ்லிம்கள் தவறான விவகாரங்களின் ஈடுபட்டதையும் நாம் கண்டிக்கத் தவறவில்லை.

ஒருமுறை எமது பத்திரிகையில் 'இலங்கையில் மூன்று இராணுவங்கள் தற்போது உள்ளன' என்ற தலைப்பிட்ட செய்தி வெளியானபோது அதற்கு விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவித்தனர். தாம் விடுதலைப் போராளிகளேயொழிய இராணுவம் அல்லவென்றும் தமது திருத்தத்தை வெளிக்கொணர்ந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் மக்களால் ஏற்படுத்தப்படும் தணிக்கை வகையொன்றையும் கூறிச்செல்வது பொருத்தமானதாகும். திசையில் 'பஜகோவிந்தம்' என்ற கதை பிரசுரிக்கப்பட்டது தொடர்பாக எழுந்த பிரச்சினை சுவையானது. இக்கதை எழுத்தாளர் கே.டானியலின் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த சில தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்துவதாக அமைந்தது. இக்கதை யேசுராசாவிடம் கொடுக்கப்பட்டு பின்னர் எனது பார்வைக்கு வந்த போது அவர் மூலமே அதன் கருப்பொருள் சுட்டும் விஷயம் எனக்குத் தெரிய வந்தது. நான் அதைப் பிரசுரிக்க விரும்பவில்லை. பின்னர் இது ஏ.ஜே யின் பார்வைக்குச் சென்றது. அவர் அதைப்படித்து விட்டு "இது வெளிப்பாட்டு முறையில் கலைத்துவம் உடையதாக இருப்பதால் பிரசுரிக்கலாம். ஏனைய விஷயங்கள் இப்படி பல சமூகத்தில் நடக்கவே செய்கின்றன. இது முக்கியமல்ல' என்றார். யேசுராசாவும் பிரசுரிப்பதற்கு ஆதரவாகவே இருந்தார்.

ஆனால் கதை பிரசுரிக்கப்பட்டதோ இல்லையோ பலவித மொட்டைக் கடிதங்கள் எனக்கு வந்து சேர்ந்தன. அவற்றில் ஒன்று பின்வருமாறு:

"டேய் முட்டாள் பொன்னம்பலம்! கூழ்முட்டையையும், தக்காளிப்பழத்தையும் 'வேண்டத்' தயாராக இருக்கவும். ஈழநாதம் எழுதிய விமர்சனம் உங்கள் போக்கிரிப் பத்திரிகையை தடை செய்வதற்கு முன்னெச்சரிக்கை என்பதை மனதில் கொள்"

இக்கதை திசையில் வெளிவந்ததைக் கண்டித்து ஈழநாதம் 08.04.90 விமர்சித்திருந்தது. அதையே இம்மொட்டைக் கடிதம் குறிப்பிடுகிறது. பஜகோவிந்தம் கதையை ஒரு பிரபல முற்போக்கெழுத்தாளர் 'கார்த்திநேசன்' என்ற பெயரில் எழுதியிருந்தார்.

நன்றி - நூலகத்திட்டம்





# ஒரு அறிஞனின் மறைவு!

### – பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் பற்றிய ஒரு குறிப்பு

பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் கனடாவில் காலமானார் என்ற செய்தி, அரசறிவியல் துறையினரையும், இலங்கை பற்றிய ஆய்வியலாளரையும், ஈழத்துத் தமிழ் மக்களையும் சோகத்தில் ஆழ்த்துவதாகும்.

உலக அரசறிவியலாளர் மட்டத்தில் இலங்கையின் அரசியற் போக்குகளில் தவிர்க்க முடியாது போன இனத்துவத் தர்க்கத்தினை தனது மதியறிவினாலும், பட்டறிவினாலும், உணர்ந்து முனைப்புடன் எடுத்துக் கூறிவந்த அவர் மறைவு, தமிழ்ப் போராட்டத்தின் நியாயப் பாடுகளை அறிந்திருந்த ஒரு பேராசானை நம்மிடத்திருந்து அகற்றி விட்டது.

அவரது பிரிவினால் வாடும் அவர் மனைவியருக்கும் குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்கள் நாங்கள் (ஈழத்தமிழர்கள்).

அவருடைய ஆய்வு நூல்கள் இலங்கையின் இனத்துவப் பிரச்சினையில் மிகுந்த புலமை முக்கியத்துவமுடையவை. இலங்கையின் அரசியல் 1947 - 73 (2ம் பதிப்பு 1979), ஆசியாவில் ஒரு "கோலிஸ்ற் (Gaullish) முறைமை (1980), ஸ்ரீலங்காவின் உடைவு (The Break up SriLanka) - (1988), எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் இலங்கைத் தமிழ் தேசியத்தின் நெருக்கடியும் 1947 - 77 (S.J.V.Chelvanayakam and the SriLankan Tamil Nationalism 1947-1977) - (1994) ஆகிய நூல்களை வாசிக்காத எவரும் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய முழு அறிவுடையவர் என்று கூற முடியாது.

இவற்றுள் 1988ஆம் ஆண்டில் வெளிவந்த நூலும் 1994இல் வெளிவந்ததும் மிக முக்கியமானவை. இலங்கையின் உடைவு பற்றிய நூலில், 1978முதல் 1983வரை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் தனக்கிருந்த அரசியல் மதியுரைத் தொடர்பு காரணமாகப் பெற்ற அறிவினைத் தளமாகக் கொண்டு, இலங்கை அரச நிர்வாக அமைப்பும், இலங்கை அரசியலில் தலைமைகளும் எவ்வாறு தமிழ்ப்பிரச்சினைக்கு வினயமான முறையில் முகங்கொடுக்கத் தயங்குகின்ற என்பதை மிகத் துல்லியமாக விளக்கியுள்ளார். எஸ்.ஜே.வி. செல்வநாயம் பற்றிய நூலில் இலங்கையின் தமிழ்த்தேசியம் தன்னம்பிக்கைத் தன்மை பெற்ற வரலாற்றை, செல்வநாயகத்தின் வாழ்க்கை வரலாற்றினூடாகக் காட்டுகிறார்.

இந்த நூல்கள் அறிஞர்களால் மிகுந்த மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் புலமை நிலையில் அரசறிவியலாளர். 1953இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் (பேராதனை) அரசறிவியல் உதவி விரிவுரையாளராகச் சேர்ந்த அவர் படிப்படியாகத் தனது ஆய்வறிவினை வளர்த்தெடுத்து அறுபதுகளில், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது அரசறிவியல்துறைப் பேராசிரியரானார். பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரியர்களிடையே வில்சன் மதிப்பார்த்த ஓர் இடத்தைப் பெற்றிருந்தார்.

1972இல் நியூபுறுன்ஸ்விக் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைப்பேராசிரியராக நியமனம் பெற்றுச் சென்றார்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் மகள் சுசீலாவை திருமணம் செய்தார். அந்த உறவு இவருக்கு தமிழ் அரசியல் வியடங்களின் மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது. அரசறிவியற் புலமையும் தமிழ் அரசியல் தொடர்பும் காரணமாக இவர் நடைமுறை அரசியல்துறையினரால் பெரிதும் விரும்பி மதியுரை கேட்கப்படும் ஒருவரானார்.

இந்த உறவுகள் காரணமாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா 19 8இல் இவரைத் தனது முக்கிய அரசியல் ஆலோசகர்களில் ஒருவராகக் கொண்டார். இலங்கையின் தமிழர்ப் பிரச்சினைக்கான தீர்வுக்கான ஆலோசனை கூறுவதற்காகக் கனடாவிலிருந்து இவர் இலங்கைக்கு அடிக்கடி வந்து சென்றார். அந்த அனுபவங்கள் தான் இலங்கையின் உடைவு என்ற நூலை எழுதச் செய்தது.

பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அரசியல் ஆலோசகராக இருந்தமையால் பல தமிழர்கள் அப்பொழுது அவரை விரும்பவில்லை. ஆனால், 1988இல் வெளிவந்த அவரது நூலில் ஜனாதிபதியுடனும், இலங்கை நிர்வாக அமைப்புடனும் தனக்கிருந்த உறவுகளை ஒளிவுமறைவின்றி எடுத்துக் கூறுகின்றார். இதன் மூலம் இலங்கை அரசியல் செல்நெறிபற்றி வெளிவந்த புலமை அறிவு, தமிழ் பேராட்டத்தின் நியாயப்பாட்டை உறுதிப்படுத்தியது.

அந்த நூலின் இறுதி அத்தியாயம் மிக முக்கியமானது. (இலங்கையிலுள்ள தணிக்கை முறைமை காரணமாக, அதிலிருந்து மேற்கோள் காட்ட முடியாதுள்ளது.)

இலங்கையின் இனத்துவப்பிரச்சினை உண்மையாகத் தீர்க்கப்படுவதற்கு தமிழர் மனக்குறைகளும், மனப்பயங்களும் சந்தேகத்துக்கிடமில்லாத வகையில் தீர்க்கப்பட வேண்டுமென்னும் கருத்து அந்நூலில் தெளிவாக இழையோடுகிறது.

அதேபோன்று செல்வநாயகத்தின் 'அரசியல் வாழ்க்கை வரலாறு' பற்றிய நூலில் இலங்கையின் தமிழ்த் தேசியம் எதிர் கொண்ட பிரச்சினைகளை நன்கு சுட்டிக்காட்டுகின்றார்.

பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சனின் சிறப்பு அவர் தமது அனுபவங்களையும், கருத்துக்களையும், ஏமாற்றங்களையும், எழுத்திற் பொறித்துள்ளமையாகும். அந்தப் புலமை மீது எவரும், எக்காலத்தும் குற்றஞ் சாட்ட முடியாதபடி அது தன்னைத் தானே தெளிவுபடுத்தியுள்ளது. இந்தப் புலமை நேர்மைக்காக அவர் என்றும் போற்றுதற்குரியவராகிறார்.

1996இல் அவரைக் கனடாவில் (ரொறன்ரோவில்) நீண்டநாட்களுக்குப் பின் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பேராசிரியர் சிவராசாவும் நானும் சென்றிருந்தோம். சேரனும் வந்திருந்தார். தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் பற்றிய ஆதங்கம் அவரின் ஒவ்வொரு வார்த்தையிலும் தோய்ந்து கிடந்தது.

தமிழ்த் தேசியத்தின் நடவடிக்கைகள் சர்வதேச அரசியல் அங்கீகாரத்தைப் பெறும். இயல்பினதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் மிகுந்த சிரத்தை கொண்டிருந்தார்.

நான் அவ்ரிடத்து 1953இல் படித்தவன். அந்த நினைவுகளையெல்லாம் பசுமையுடன் இரைமீட்டார். தமிழ், தமிழர் சார்ந்த செயற்பாடுகளில் நாம் ஈடுபடுவது அவருக்கு மனம் நிறைந்த மகிழ்ச்சியைத் தந்தது என்பதை அவரது கண்களும், வார்த்தைகளும் கூறின.

அவரிடம் அப்பொழுது அவருக்கான பாராட்டு மலர் ஒன்றினைப் பற்றிப் பேராசிரியர் சிவராசா எடுத்துக் கூறினார்.

நாம் இலங்கைக்கு வந்ததன் பின்னர் அதற்கான பணிகளை மேற்கொண்டோம். விரைவு போதவில்லை.

இனி, அத்தகைய ஒரு மலர் நினைவு மலராகத் தான் வரவேண்டும். வரப் போகிறது. பாராட்டு மலரைக் கண்டிருப்பின் நிச்சயம் சந்தோஷப்பட்டிருப்பார். அந்த சந்தோஷத்தை உண்மையில் இழந்தது அவரல்ல. அவர் மாணவர்களாகிய நாங்கள் தான்.

ஆனால் ஒன்று பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சனின் நினைவு மலர் ஒன்றினால் மாத்திரம் போற்றப்படப் போவதில்லை. கண்டறிந்த உண்மையை ஒளிக்காத அறிவு நேர்மையுடைய அவர் எழுத்துக்கள் என்றும் அவரது மேதாவிலாசத்துக்கும், அதன் நேர்மைக்கும், அவற்றுடன் இலங்கையின் தவறுகளுக்கும் சோகத்துக்கும் சாட்சியாய் நிற்கும்.

அறிஞர்களின் உடலுக்குத் தான் மரணம், அவர்கள் எழுத்துக்கள் மரணிப்பதில்லை. அவற்றுக்கு ஒரு நிரந்தரம், சாசுவதம் உண்டு.

"புகழுடம்பு" என்பது அது தான்.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி

வவுனியா:

# மக்களுக்குப் பாதுகாப்பில்லை!

வவுனியாப் பிரதேசம் பலத்த பாதுகாப்பு மிக்க பிரதேசமாக விளங்குகின்ற போதிலும், அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை வவுனியா நகரில் இருந்து கிழக்குப்பக்கமாக சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பூந்தோட்டத்தில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் 3 புளொட் உறுப்பினர்களும், பொதுமகன் ஒருவருமாக 4 பேர் காயமடைந்தார்கள். பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழாவில், சுப்பர் சப்தஸ்வரா இசைக்குழவினருடைய இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், அதிகாலை 4.30 மணிக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இசைநிகழ்ச்சி நடைபெற்ற மேடை அமைந்திருந்த இடத்தில் இருந்து சுமார் 250 மீற்றர் தொலைவில், பூந்தோட்டம் பிரதான வீதியில் இருந்து நரசிம்மர் ஆலயத்திற்குச் செல்லும் ஒழுங்கையின் சந்தியிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. ஆலயத்திற்கு வருவதற்காக அந்தச் சந்திக்கு வந்த புளொட் உறுப்பினர்களை இலக்கு வைத்தே இந்தக் கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் சம்பவ இடத்தில் நின்றிருந்த இரண்டு மூன்று ஓட்டோக்களும் சேதமடைந்ததாக ஊர்வாசிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலைத் தமது உறுப்பினர்கள் மீது நடத்தியதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 25 ஆம் திகதி வவுனியா குசைப்பிள்ளையார்குளம் வீதியில் இடம்பெற்ற கிளமோர் கண்ணிவெடித்தாக்குதலில் அந்த இயக்கத்தின் உளவுப்பிரிவு பொறுப்பாளராகிய வின்சன் உட்பட இரண்டு புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த அவர்களை இலக்கு வைத்து, வீதியோரத்தில் கடையொன்றின் எதிரில் இருக்கும் மரம் ஒன்றில் சாத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளிலேயே கிளமோர் குண்டு பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா ஹொரவப்பத்தானை வீதியில் இருந்து குசைப்பிள்ளையார்குளத்திற்குச் செல்கின்ற வீதியின் சந்தியிலும், அங்கிருந்து சுமார் 200 யார் தூரத்தில் உள்ள மில்வீதிச் சந்தியிலும் பொலிசார் 24 மணித்தியாலமும் காவல் கடமையில் இருக்கத்தக்கதாக, இந்த இரண்டு சந்திகளுக்கும் இடையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் போக்குவரத்தும், வாகனப் போக்குவரத்தும் மிக்க இந்த வீதியில் குறிப்பிட்ட இரண்டு புளொட் உறுப்பினர்களினதும் வருகைக்காகக் காத்திருந்த சைக்கிள் கிளமோர் குண்டு அவர்கள் மோட்டார் சைக்கிளில் கடந்து செல்கையில் வெடிக்க வைக்கப்பட்டதில் இருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். சம்பவ வேளையில் அவ்வழியாக சைக்கிளில் சென்ற ஒரு பொதுமகன் காயமடைந்தார்.

உச்சப் பாதுகாப்பு நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், படையினர் பொலிசாரின் கண்ணைக்கட்டிவிட்டு நடாத்தப்பட்டது போல இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளமையானது, பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. புளொட் உறுப்பினர்கள் அல்லாமல், இந்தத் தாக்குதல் பொலிசார் அல்லது இராணுவத்தினர் மீது நடத்தப்பட்டிருந்தால், விளைவுகள் பாரதூரமானதாகவே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதேவேளையில், வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் வவுனியாவில் இருந்து சுமார் 4 மைல் தொலைவில் கடந்த 30 ஆம் திகதி காலை 9 மணியளவில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் 9 பொலிசார் கொல்லப்பட்டார்கள். 19 பேர் காயமடைந்தார்கள். இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது, ஒரு கடை, ஒரு மினி சினிமா கொட்டகை மற்றும் 5 விடுகள் பாதிக்கப்பட்டன. இந்த வீடுகள் எரிந்ததையடுத்து வீட்டு உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக அச்சமடைந்த இவர்கள் தங்களுக்கு இப்பகுதியில் இருப்பதற்கு உரிய பாதுகாப்பு இல்லை என்றதனால், அங்கிருந்து வெளியேறிச் செல்லப்போவதாக அப்பகுதிக்குப் பொறுப்பான பாதுகாப்பு பொலிஸ் அதிகாரியிடம் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆயினும், அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவதாகவும், அவர்களை அப்பகுதியில் இருந்து வெளியில் செல்ல வேண்டாம் என்றும் பொலிசார் மறுத்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.



(REUTERS)

பொதுமக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் இடங்களில் இடம்பெறுகின்ற தாக்குதல்களில் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பது இன்று நேற்று நடைபெறுகின்ற விடயமல்ல.

இருப்பினும் மோதல்களில் ஈடுபடுபவர்கள் பொதுமக்களின் நலன்கள், பாதுகாப்பு என்பவற்றைக கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் வேண்டுகோளாக உள்ளது.

– தீபன்

நன்றி - நூலகத்திட்டம்



# 1999 யுத்தத்தின் போக்கு ஒரு கணக்கெடுப்பும் சில குறிப்புகளும்

***3.3 யுத்த மயம்***

1999 வருடம் முழுவதும் போர் புரிந்து கொண்டிருந்த இரு தரப்பினரும் தமது பிரதான இலக்காக யுத்தத்தீர்வை கொண்டிருந்தமையால் வடக்கு கிழக்கு பிரதேச மக்கள் வாழ்க்கை மேலும் யுத்த மயமானது.

சிங்கள இராணுவம் மக்களைக் குடியமர்த்தவென யாழ் பலாலி முகாமுக்கு அண்மையில் 4848 ஹெக்டயர் நிலத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக 1999 மார்ச் மாதம் தமிழ் அரசியல் கட்சிகள் அரசின் மீது குற்றம் சுமத்தின. 06.08.98 இல. 1083/9 வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் பிற சமாதான சக்திகளினால் காட்டப்பட்ட எதிர்ப்பின் காரணமாக இந்நடவடிக்கை பிற்போடப்பட்டதாகத் தெரியவந்தது.

போர்ச் சூழலில் தேர்தல் நடாத்த முடியாதென வடக்கு கிழக்கு மாகாணத்தின் 3 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் மார்ச் மாதம் 23ம் திகதி பிற்போடப்பட்டது. இவற்றில் ஒரு மாநகரசபையும் 3 நகரசபைகளும், 26 பிரதேச சபைகளும் அடங்கும். காலக்கெடு இன்றி அவற்றின் நிர்வாகம் பிரதேச செயலாளர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் புதிய சிங்கள குடியேற்றங்களை ஸ்தாபிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏப்ரல் மாதத்தில் டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ஈ.பி.டி.பி. மற்றும் த.வி.கூ. ஆகிய தமிழ்க்கட்சிகள் உடனடியாக இந்த சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன. தமிழ் மக்கள் குடியேறியிருந்த பிரதேசங்களில் பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வருவதாக அவர்கள் அரசாங்கத்தை குற்றம் சாட்டினர். இத்தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் சிங்கள மொழியில் கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு ஏப்ரல் மாதம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

வவுனியாவில் செயற்படுத்தப்பட்டு வரும் விசேட இராணுவ அனுதிப்பத்திர முறையை 1999 ஏப்ரல் மாதத்தில் மன்னாரிலும் முழுமையாக அமுல்படுத்த இராணுவம் நடவடிக்கை எடுத்தது. இந்த விசேட அனுமதிப்பத்திர முறை காரணமாக வன்னி தமிழ் மக்கள் அனுபவிக்க நேர்ந்த இடர்கள் பற்றி சுட்டிக்காட்டப்பட்ட போதும் இதற்கு மாற்று வழியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து மனித உரிமை மீறல் வழக்குகளை தாக்கல் செய்ய எவரும் அக்கறை காட்டவுமில்லை. 2000ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் தெரியவந்ததன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் 6 லட்ச மக்கள் மத்தியில் இவ்வாறான விசேட அடையாள அட்டை முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் எண்ணியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1999ம் ஆண்டு இறுதிப்பகுதி வரையிலும் வன்னிப் பிரதேச மக்களுக்கு போதிய உணவு, சுகாதார, கல்வி வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. தமிழ் அரசியல் கட்சிகள், வடக்கு வாழ் மதத் தலைவர்கள் மற்றும் தேசிய மட்டத்திலான மனித உரிமைகள் நிறுவனங்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தருமாறு மீள கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். வவுனியாவில் இருந்து வன்னிக்கான அனைத்து பிரதான வழிப்பாதைகளும் யுத்த நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்தன. இதில் எந்தவொரு பாதையையும் திறக்க புலிகள் இணங்கும் வரை உணவு, மருந்துப் பொருட்களை வழங்க அரசாங்கம் இடமளிக்கவில்லை. இந்த நிலைமையின் கீழ் உக்கிர உணவு, மற்றும் மருந்துப் பற்றாக்குறையை வன்னி மக்கள் எதிர்நோக்கினர். சர்வதேச உதவி அமைப்புகள் அறிக்கையின்படி மருந்து இன்மையினால் வன்னி மருத்துவமனை நோயாளிகள் பலர் இறந்துள்ளனர். இவ் அறிக்கைகளின்படி வன்னி பிரதேசத்தில் கல்வி மற்றும் சுகாதார சேவைகள் முழுமையாக வீழ்ச்சியடைந்திருந்தன.

அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின்படி வன்னிப் பிரதேசத்தில் 162,400 மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகினர். எனினும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்களின் அறிக்கையின்படி வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழ்ந்து வந்த 3,76,300 மக்களில் 297,600 பேர் அகதிகள் நிலைமையில் இருந்தனர். இந்த அறிக்கை தவறானது என கூறியது அரசாங்கம். தவறான அறிக்கைகளை வெளியிட்டார்கள் எனக் கூறி மாவட்ட அதிபர்கள் இருவரும் ஜூலை மாதத்தில் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். ரணகோச இராணுவ நடவடிக்கை காரணமாக வருடம் முழுவதும் இடம்பெயர்ந்த மக்கள் தொகை 50,000க்கு அதிகமாகும். யாழ் மாவட்டத்தில் பலதரப்பட்ட விடயங்கள் காரணமாக தமது வசிப்பிடங்களில் குடியேற முடியாத லட்சத்திற்கு அதிகமான மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். வருட இறுதியில் அரச கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா அகதி முகாம்களில் 10,000 மக்கள் வாழ்ந்து வந்தனர்.

1999 டிசெம்பர் 2ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1108/22இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சிவில் நடவடிக்கைகள் குறித்த அதிகாரிகளாக ஆயுதப்படை பிரதானிகள் ஐவர் நியமிக்கப்பட்டனர். அம் மாவட்டங்களில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் குடியேற்றல், அவர்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குதல், அம்மாவட்டங்களில் போதுமான உணவு கையிருப்பினைப் பேணல் மற்றும் அவற்றைச் சரியான முறையில் விநியோகித்தல், நீர் மின், மருந்து மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதியாக நடைமுறைப்படுத்தல் என்பன அவர்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டன. இவ்வாறு நியமிக்கப்பட்ட அனைவரும் சிங்களவர்களாவர். இந்த நடவடிக்கையினால் அப்பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் மாவட்ட அதிபர்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. 1999ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு, கொலைகள் பற்றி அறியக் கிடைத்தன. ஜூலை 11ம் திகதி இராணுவத்தினரால் மன்னாரில் பாலியல் வல்லுறவு புரிந்து கொலை செய்யப்பட்ட ஜூடா ...கமலிட்டா பற்றிய சம்பவம் பிரபல்யமடைந்தது. 1996 தொடக்கம் வடக்கு கிழக்கில் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவு சம்பவங்கள் 45 பற்றிய அறிக்கை உள்ளதாக மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கூறியிருந்தது. வருட இறுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான சாரதாம்பாள் இவ்வாறு பாலியல் வல்லுறவு புரியப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

வன்னிப் பிரதேசத்தின் முழு தமிழ் மக்களையும் யுத்தத்திற்கு தயார்படுத்த ஏப்ரல் மாதத்தில் புலிகள் நடவடிக்கை எடுத்தனர். இப்பிரதேசத்தில் வாழ்ந்த அனைத்து வயது வந்தவர்களும் கட்டாய பயிற்சிக்குட்பட வேண்டியவர்களாகினர். 9ம் வகுப்பிலிருந்து உயர் வகுப்பினைச் சேர்ந்த அனைத்து மாணவ மாணவிகளும் பாடசாலையில் உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் எனக் கூறப்பட்டது. அதன்பின் இரண்டு வாரங்களுக்கு போர் பயிற்சியொன்றை நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. பாடசாலை வேளைகளின் பின் ஆசிரியர் ஆசிரியைகளும் இப்பயிற்சியைப் பெற வேண்டும். புலிகளின் யுத்தபலத்தை இவ்வாறே நீடித்துக் கொள்ள ஒவ்வொரு வருடமும் 2000 தொகையினர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென UTHR அமைப்பு குறிப்பிட்டிருந்தது.

தமிழ் இளைஞர் யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்டகாலம் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் 1999ம் ஆண்டு 5 தடவைகள் உண்ணாவிரதத்திலும், எதிர்ப்புகளிலும் ஈடுபட்டனர். 843 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 43 மட்டுமே. தடுத்து வைக்கப்பட்டவர்களின் கோரிக்கையாக ஒன்று குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்றவாறு காணப்பட்டது. இந்த எதிர்ப்புகள் வன்முறையாக ஒடுக்கப்படுதலும், சந்தேக நபர்களினால் வன்முறை ரீதியாக எதிர்ப்பு காட்டுதலும் மீண்டும் மீண்டும் நடைபெற்றது. அரசு இவ்விடயம் குறித்து எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அத்துடன் 2000 ஜனவரி 7ம் திகதி களுத்துறை சிறைச்சாலையில் நடைபெற்ற எதிர்ப்பைக் காட்டும் செயற்பாட்டை அடக்க, தடுத்து வைக்கப்பட்டவர்கள் மூவரை அடித்து கொன்ற... சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் 44 பேருக்கு காயத்தை ஏற்படுத்தினர். 1983 தொடக்கம் இதுவரை ... 75 பேர் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக யுத்தத்தின் தீமையாக வடக்கு கிழக்கு மற்றும் இலங்கை தமிழ் சமூகம் முழுவதும் யுத்த மயமானதை காணக் கூடியதாக இருந்தது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளும் யுத்தத்தினால் கட்டுப்படுத்தப்படும் தன்மை அதிகரித்ததே அன்றி குறைந்ததைக் காண இயலவில்லை. இதன் விளைவாக தமிழ் மக்கள் மேலும் தமது சமூக - அரசியல் கலாசார எல்லைகளுக்குள் குறுகிக் கொள்ளுதலே நடைபெற்றது. அதேபோல் பிரதான தொடர்பூடகங்களின் இனமையப்பட்ட அறிக்கையிடுதல்களின் காரணமாக தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினை குறித்து சிங்கள மக்கள் அதிக அக்கறைக் காட்டவில்லை.



### 4. சமாதான மனித உரிமைகள் முயற்சிகள் மற்றும் இயக்கங்கள்

### 4.1 அரசாங்கத்தின் வெளிப்பாடு

1999ம் ஆண்டு அரசாங்கத்தின் சமாதான நிகழ்ச்சித் திட்டமான வெண்தாமரை இயக்கம் செயற்படவில்லை. தனது தனிப்பட்ட யோசனையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டதாக ஜனாதிபதியினால் புகழ்ந்துரைக்கப்பட்ட வெண்தாமரை இயக்கம் அமைதியாக மரணத்தை தழுவியுள்ளதைக் காணலாம். வெண்தாமரை இயக்கம் அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகளுக்கு தடையென 1998ல் சிங்கள தேசியவாதிகள் குற்றம் சாட்டினர்.

இன விடயங்கள் தொடர்பான பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் தலைமையில் 1999 ஜனவரி மாதத்தில் "எமது குரல்" என்ற பெயரில் சமாதான முயற்சியொன்று ஆரம்பிக்கப்பட்டது. சிவில் சமூகத்தின் சமாதான குழுக்களை இணைத்து ஆரம்பிக்கப்பட்டு, கொழும்பு கண்டி மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் மக்கள் சமாதான ஆர்ப்பாட்டங்கள் 3 நடாத்தப்பட்டன. அதன்பின், இம்முயற்சியும் தோல்வியுற்றது. நோர்வே அரசின் ஆதரவுடன் இனவிவகார மற்றும் யாப்பு நடவடிக்கைகள் குறித்த திணைக்களத்தின் கீழ் செயற்படும் தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப்பிரிவு பேராசிரியர் கிரிவெல்லவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. நாடுமுழுவதும் பல தரப்பட்ட தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் சமாதான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவி அளித்தல் என்பன இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல் அந்நிகழ்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் பல காணப்பட்டன.

இலங்கை அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வெளிநாட்டு மூன்றாம் தரப்பினூடாக இரு தடவைகள் முயற்சித்த போதும் அது தோல்வியுற்றதாக ஜனாதிபதி டிசெம்பர் இறுதியில் குறிப்பிட்டிருந்தார். புலிகள், அரசாங்கத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

## தமிழ் மக்களின் நலன்களைப் பூர்த்தி செய்யாத தொல்லை தவிர்ப்புக்குழுவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும்

யுத்தம் காரணமாக பாதுகாப்பு படையினரால் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இடையூறுகளைக் குறைக்கவென 1998ல் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட தொல்லை தவிர்ப்புக் குழு 1999 ஆண்டில் 337 முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டது. இதில் 297 முறைப்பாடுகள் தொடர்பாக குழு விசாரணை நடாத்தி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பணிப்புரை செய்தது. இந்தக்குழு 1998 ஜூலை ...ம் தொடக்கம் ... மாத... திகளும்) 74 ...ின் (வழமையாக ஒவ்வொரு ... குழு... தடவைகள் கூடியது. ...டமைச்சர் உறுப்பினர்களான வெளிநா... லக்ஷ்மன் கதிர்காமர் 3 கூட்டங்களில் ம...ட்டுமே கலந்து கொண்டார். அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கா 2 கூட்டங்களில் மட்டுமே கலந்து கொண்டார். இந்தக் குழுவினால் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லையென தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் கவலை தெரிவித்திருந்ததுடன், குழு தனித்து ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் நியமிக்கப்பட்டதினால் வேறு பணிப்புரைகளை அதிகாரப்படுத்த அதனால் இயலவில்லை.

மிகப் பரந்த அடிப்படையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க 1998இல் ஸ்தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு வெள்ளையானை நிலைமைக்கு உள்ளாகியிருந்தது. (மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றிய விசேட அறிக்கை மோர்ஜ் இயக்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.)

1998ம் ஆண்டு முழுவதும் இழுபட்டுச் சென்ற யாழ் செம்மணி புதைகுழிகள் பற்றிய விசாரணை 1999 வருடத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட அரசாங்கத்தினால் முடிந்தது. சர்வதேச மன்னிப்புச்சபை உள்ளிட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் பங்களிப்புடன் இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பல இடங்கள் தோண்டப்பட்ட பின் 15 சடலங்கள் கைப்பற்றப்பட்டன. இச்சடலங்களை இனம் காணும் நடவடிக்கை வருட இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் மட்டுமன்றி மட்டக்களப்பு படுகொலைகள் குறித்து இவ்வாறான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. செம்மணி புதைகுழிகள் மற்றும் யாழ் காணாமல் போன சம்பவங்கள் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகும்.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் உண்மைகளை நசுக்குகிறது அரசு!

**சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க**







**அவசர காலச் சட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள விசேட சட்டங்களைக் கொண்டு அரசு உங்களது பத்திரிகையை மூடிவிட்டது. "சண்டே லீடர்" பத்திரிகைக்கு எதிராக அரசு இவ்வாறான நடவடிக்கையை எடுக்க பின்னணிக் காரணங்கள் எதுவாக இருந்திருக்கலாம் என கருதுகிறீர்கள்?**

எமது நிறுவனத்தினால் பிரசுரிக்கப்படும் சண்டே லீடரும், இரிதா பெரமுனவும் அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியைத் தந்து கொண்டிருந்த பத்திரிகைகள். இதற்குப் பிரதான காரணம், எமது பத்திரிகைகள் அடிக்கடி இந்த அரசாங்கத்தின் ஊழல், துஷ்பிரயோகம், வாக்குவேட்டைகள், அரச பயங்கரவாதம், காலி துறைமுகம், எயார்லங்கா, சனல் -9, எவன்ஸ் இன்டர்நெஷனல் கொடுக்கல்வாங்கல்களில் இடம்பெற்றுள்ள துஷ்பிரயோகங்கள் குறித்து தகவல்களை வெளியிட்டது தாம். அதேபோல் பாதாள உலக தலைவர்களுள் ஒருவரான சொத்தி உபாலியுடன் ஜனாதிபதி கொண்டிருந்த தொடர்பு, சந்திரிகாவின் மதுபான அனுமதிப் பத்திரம் குறித்து நாம் தகவல்களை வெளியிட் டிருந்தோம். அதேபோல் தொடர்பூடகங்களுக்கு, தொடர்பூடக-வியலாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட பலதரப்பட்ட விடயங்கள் குறித்தும் வெளிப்-படுத்தினோம். அதேபோல் அதிக பட்சம் 5 மாதத்திற்குள் இலங்கையில் பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்பதால் எமது வாயை மூடிவிடுவதே அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தது. மக்களின் கண்களை மூடிவிட்டு தந்திரோபாயமாக எதிர்வரும் தேர்தலை வெற்றி கொள்வதே அரசாங்கத்தின் நோக்கம். இல்லாவிட்டால், தேர்தலை நடாத்தாது ஏகாதிபத்திய ஆட்சியை நோக்கி நாட்டைக் கொண்டு செல்ல முயற்சிப்பதே நோக்கம். இவ்வாறான முன் முயற்சிகள் குறித்து பத்திரிகைகள் அமைதியாக இராது என்பதை அரசாங்கம் அறியும். இவற்றில் "சண்டே லீடர்" முக்கியமானது என்பதையும் அரசாங்கம் அறியும். இதனால் தான் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டு நாம் மௌனிகளாக்கப்பட்டுள்ளோம்.

**"சண்டே லீடர்" நிறுவனத்தினை மூடிவிடுவதற்கு முன்னர் உங்களது பத்திரிகைக்கு எதிராக அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து ..... ?**

இந்த அரசாங்கம் முதலில் இருந்தே "சண்டே லீடர்" பத்திரிகைக்கு எதிராக பலதரப்பட்ட பயமுறுத்தல்களை விடுத்திருந் தது. அவர்கள் "சண்டே லீடர்" பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன், முன்னாள் சட்டமா அதிபர் என்னை அழைத்து இந்தக் குற்றச்சாட்டின் கீழ் எனக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யும் அளவிற்குப் பின்னணி இல்லாவிட்டாலும், ஜனாதிபதி இவ்வாறான வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யுமாறு தன்னை வலியுறுத்துவதால், இந்த வழக்கினைத் தாக்கல் செய்வதாகவும், இதனால் அவரை மன்னித்து விடுமாறும் குறிப்பிட்டிருந் தார். அதுமட்டுமின்றி அப்பொழுது அவ் வழக்கை விசாரித்த நீதிபதிக்கு ஜனாதிபதி அறக்கட்டளையில் இருந்து பெருமளவு பணம் வழங்கப்பட்டிருந்தது. தன்னால் மேற் கொள்ளப்-பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றின் நீதிபதிக்கு இவ்வாறு பணம் வழங்குவதன் மூலம் ஜனாதிபதி என்ன தான் செய்திருக்கிறார்?

அதுமட்டுமன்றி பலதரப்பட்ட குற்றங்கள், இழிவுகளை சுட்டிக்காட்டி எமக்கு எதிராக நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஜனாதிபதி ஒரு ஜனாதிபதி என்ற முறையில் அல்லாத வசனங்களைப் பயன்படுத்தி எம்மை இழிவுக்குள்ளாக்கினார். அவரது பதவிக்குள்ள சிறப்புச்சலுகைகள் காரணமாக இவற்றுக்கெதிராக எம்மால் எதனையும் செய்ய இயலவில்லை. பத்திரிகையாளர் என்ற வகையில் நான் உத்தியோக பூர்வமாக கேட்ட கேள்விக்கான பதிலாக அவரது காரியலாயத்தில் இருந்து நானொரு புழு என்ற கடிதம் வந்தது. உலகத்தில் எந்தவொரு அரச தலைவரின் அலுவலகத்-திலிருந்தும் தனது நாட்டின் பிரஜைக்கு இவ்வாறான பெயர் சூட்டல் கொண்ட கடிதம் வந்து சேர்ந்திருக்காது எனலாம். உண்மையில் அவர் அக்கடிதத்தின் மூலம் எமது நாட்டிற்கு இழிவைத் தேடி தந்து விட்டார். 1995.02.06 அன்று வாகனத்தில் நானும் எனது மனைவியும் பயணித்த வேளை குண்டர்களைக் கொண்டு என்னை தாக்கினார். இதனால் வைத்திய-சாலையில் சிகிச்சை பெற நேர்ந்ததுடன், எனது வாகனத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டது. இச்சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் தான் ஜனாதிபதியின் தொடர்பூடகத்துறை ஆலோசகர் சனத் குணதிலக்க ஒரு பத்திரிகையாளரூடாக என்னைப் பயமுறுத்தினார். அவரின் முன் அப்பத்திரிகையாளர் இவ்வாறான பயமுறுத்தலை விடுத்ததாக எழுத்து மூலம் அறிவித்தார். இது பற்றி நான் பொலிசுக்கு முறைப்பாடு செய்த போதிலும், இன்று வரை எந்த விதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

1998ல் எயார் லங்கா கொடுக்கல் வாங்கல் குறித்து விபரங்களை வெளியிட்ட போது எனது வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இது பற்றி விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பொலிசாரினால் விசாரணை மேற்கொள்ளப்படாத பின்னணியில் நாம் தகவல்களைச் சேகரித்தோம். இதன்படி எனது வீட்டிற்கு துப்பாக்கி பிரயோகம் செய்தவர்கள் தொடர்பாகவும், அவர்கள் வந்த வாகனம் தொடர்பான விடயங்களுடனான அனைத்து விபரங்களும் பொலிசுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பின்னும் பொலிசார் மௌனமாகவே இருந்தனர். இவை இந்த அரசாங்கம் எமக்கு எதிராக மேற்கொண்ட இழிவான காரியங்களில் ஒரு சில மட்டுமே.

**நீங்கள் குறிப்பிடுவதன்படி உங்களுக்கு எதிராக துவேஷ மனப்பான்மையுடன் செயற்படுவது ஜனாதிபதி மட்டும் என்று சொல்லலாமா?**


ஜனாதிபதி, மங்கள சமரவீர மற்றும் சனத் குணதிலக்க ஆகியோரே இவ்விதம் நடந்து கொள்கின்றனர். எனினும், மிகவும் உயர்ந்த நோக்கங்களுக்காக செயற்பட ஆவல் கொண்டுள்ள பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த அரசாங்கத்தில் உள்ளனர்.

**உங்களது பத்திரிகையை மூடிவிட்டமையானது அரசாங்கத்தில் பொது இணக்கப்பாடு இன்றி எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று கருதுகிறீர்களா?**

அரசாங்கம் பொதுவான இணக்கத்துடன் எடுத்த முடிவல்ல இது. மிகவும் தெளிவாகக் கூறுவதாயின், அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் இருவர், மூவர் எடுத்த முடிவு இது. இத்தீர்மானம் முழுமையாக தனிபர் பழி வாங்கும் உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது.

**உங்களது பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டதன் பின்னர் அரசின் உயர்மட்ட பொறுப்பாளர்களுடன் இவ்விடயத்துடன் முரண்படுபவர்கள் கருத்து ஏதும் கூறியுள்ளார்களா?**

இச்சம்பவத்தின் பின்னர் அமைச்சர்கள் சிலர் என்னுடன் தொடர்பு கொண்டு பேசினர். அரசின் இந்த முடிவு பற்றி அவர்கள் கவலை தெரிவித்தனர். அது மட்டுமன்றி இத்தீர்மானத்-திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை களுக்கு அவர்கள் இயன்ற வரையில் உதவி யளிப்ப-தாகவும் உறுதி கூறினர். உண்மையில் இந்த அரசாங்கம் இப்படியான கீழ்த்தரமான முடிவுக்கு வந்தது பற்றி அவர்கள் வெட்க மடைகின்றனர். ஏனெனில், 30 வருடங்களுக்கு முன்னர் சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சி செய்த காலத்தில் "தவச" பத்திரிகைக்கு சீல் வைத்ததன் பின் முகம் கொடுக்க நேர்ந்த விதி பற்றி அவர்கள் அறிவர். அன்றைய அரசின் அந்த மோசமான நடவடிக்கையின் காரணமாக தான் இந்நாட்டு மக்கள் 17 வருடங்கள் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு சீல் வைத்தனர். அவர்கள் அன்று பூசிக்கொண்ட சேற்றை மிகவும் கஷ்டப்பட்டு துடைத் தெறிந்து விட்டுத் தான் .94ல் அதிகாரத்திற்கு வந்தனர். அன்று "தவச" பத்திரிகைக்கு சீல் வைத்ததினால் தாய் முகம் கொடுத்த விளைவை விட மோசமான விளைவுகளை எதிர்காலத்தில் மகள் சந்திக்க நேரிடும் என்பது உறுதி. ஏனெனில், இது "சண்டே லீடர்", "இரிதா பெரமுன" பத்திரிகைக்கு சீல் வைத்த விடயம் மட்டுமல்ல, உண்மையில் மக்களுக்குள்ள உண்மைத் தகவல்களை அறிவதற்குள்ள



உரிமைக்கும் சேர்த்துத் தான் சீல் வைக்கப்பட்டுள்ளது. எமது பத்திரிகையை ஏற்றுக் கொள்பவர்கள் இருப்பதைப் போன்றே ஏற்றுக் கொள்ளாதவர் களும் உள்ளனர். ஏற்றுக் கொள்ளல் போன்று ஏற்றுக்கொள்ளாமையும் மக்களுக்குள்ள உரிமை. ஜனநாயக சமூகத்தில் மக்களுக்கு அந்த உரிமை இருக்க வேண்டும். இந்த பத்திரிகைகள் சீல் வைக்கப்பட்டதன் மூலம் இந்நாட்டின் பெரும்பான்மை யான மக்களின் உரிமையை அர-சாங்கம் பறித்துள்ள தெனலாம்.

**இலங்கையின் தொடர்பூடகர் சுதந்திரத்திற்கு மிகவும் மோசமான முறையில் பயமுறுத்தல் விடுக்கப்பட்ட சூழலில் நாட்டின் பிரதான பத்திரிகைகள் இரண்டு சீல் வைக்கப்பட்டுள்ள சூழலில் எதிர்க்கட்சி இவ்விடயம் பற்றி கொண்டுள்ள கருத்து மற்றும் அதன் செயற்பாடுகளை நீங்கள் எவ்விதம் இனம் காண்கிறீர்கள்?**

நான் முதலில் குறிப்பிட்டது போன்று அரசின் அமைச்சர்கள், பா.உக்கள் இந் நிலையை ஏற்றுக் கொள்ளவில்லையென தெரிவித்ததைப் போன்றே ஐ.தே.கவும், ஜே.வி.பியும் இது பற்றி தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தன. அதேபோல் இந்நிலைக்கு எதிராக பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இது பற்றிய தமது எதிர்ப்பை வெளிக்காட்டி ஜே.வி.பி. மேல் மாகாண சபையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியுள்ளது. ஐ.தே.கவும், இந் நிலைக்கு எதிராக அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன், எதிர்வரும் வாரங்களில் சிற்சில நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

**1970களில். ம.ஐ.மு. அரசாங்கத்தினால் "தவச" பத்திரிகை நிறுவனம் சீல் வைக்கப்பட்ட சூழலில் அதற்கு எதிராக நாட்டில் பாரிய கருத்தியல்களை கட்டியெழுப்பியது ஜே.ஆர். தலைமையிலான ஐ.தேகவாகும். அதேபோல் 80களில் ஐ.தே.கவினால் இந்நாட்டு தொடர்பூடகங்களுக்கு மற்றும் தொடர்பூடகவியலாளர்களுக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்ட போது தற்போதைய பொ.ஐ.மு. அரசின் பிரபலஸ்தர்கள் முன்வந்து மக்கள் மத்தியில் அதற்கு எதிராக பரந்த கருத்தியல்களை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தனர். அதே முறையில் தற்போதைய எதிர்க்கட்சியும் செயற்படும் என நம்புகின்றீர்களா?**

இந்நாட்டில் தொடர்பூடகவியலாளர்களுக்கு தொடர்பூடகங்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட பயமுறுத்தல்கள், சவால்களின் போதும் நாட்டின் பிற விடயங்களின் போதும், எதிர்க்கட்சி செயற்பட்டுள்ள முறை தொடர்பா கவும், குறிப்பாக ஐ.தே.க செயற்படும் விதம் பற்றியும் நான் ஒரு போதும் திருப்தியுற மாட்டேன்.

இவ்வாறான நிலையில் மிகவும் நுட்பமான முறையில் தந்திரோபாயங்களை கைக் கொண்டு அரசின் மீது அவர்கள் அழுத்தம் கொடுக்-கின்றனர் என்பது உண்மை-யாயினும், இது பற்றி மக்கள் மத்தியில் உணர்ச்சிபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்த அவர்களால் இயலாமல் உள்ளது. அரசு மோசமான தவறுகளை இழைக்கும் போது குத்துச்சண்டையில் மேற்கொள்-ளப்படும் தாக்குதல் போன்றதான தாக்குதலை எதிர்க்கட்சிகள் மேற்-கொள்ள வேண்டும் என்பதே மக்களின் அபிப்பிராயம். எனினும், எதிர்க்கட்சி இவ்வாறு எதனையும் செய்து விடவில்லை. எனினும் இவ்வாறு செயற்படுவ-தற்கான காலம் கனிந்துள்ளது என்றே நான் நம்புகிறேன்.

**உங்களது பத்திரிகை நிறுவனம் மூடப்பட பயன்படுத்தப்பட்ட அவசரகால விசேட ஒழுங்குகளை சட்டத்தின் முன் சவாலுக்குட்—படுத்தவுள்ள வாய்ப்புகள் பற்றிய உங்களது கருத்து என்ன?**

இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு எமது சட்டத்தரணிகளுக்கு நாம் கூறியுள்ளோம். இது பற்றி எனது கருத்து என்னவென்-றால், எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள், சட்டத்திற்கு முரணானதும் தனித்து அரசியல் தேவைகளுக்காக எடுக்கப்பட்டதுமான நடைமுறைகளாகும் என்பதே.

இதற்கு பல காரணங்கள் இருந்த போதிலும், அவற்றைப் பற்றி நீதிமன்றத்தில் கலந்துரையாடும் வாய்ப்பை வழங்கி விட்டு ஒரு விடயம் குறித்து மட்டும் இங்கு கூறவேண்டியுள்ளது. 1970 - 77 காலப்பகுதி போன்றதல்ல இன்று. 78 யாப்பின்படி மாதத்திற்கு ஒருமுறை பாராளுமன்றத்தினால் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதன்படி இந்த அவசரகாலச் சட்ட ஆணையின் கீழ் ஆரிய ரூபசிங்க அவர்கள் எனக்கு அனுப்பிய பணிப்புரையின்படி எமது பத்திரிகையை 06 மாதங்களுக்கு தடை விதித்துள்ளார். ஒரு மாதத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் சட்டத்தினால் ஆறு மாதத்திற்கு தடை விதிக்க முடியுமா? இந்தச் சட்டத்தின் கீழ் சில சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளுக்கு ஆலோசனை வழங்க ஆரிய ரூபசிங்கவினால் இயலும். எனினும், அவர் கடிதம் மூலம் தான் 14வது சரத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். இவற்றைத் தவிர வேறு எந்த ஆலோசனைகளையும் அவர் வழங்கவில்லை. நான் அவருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் நீங்கள் தேசிய பாதுகாப்புக்குரியது என்பதன் மூலம் எதனை விளக்குகிறீர்கள் எனக் கேட்டிருந்-தேன். எனினும், இன்று வரை அதற்கு பதில் தராது எமது பத்திரிகையை மூடிவிட்டார். இதன்படி அவர் செய்தி அதிகாரியாக செயற்பட்டுள்ள முறை

⊃19

நன்றி - நூலகத்திட்டம்



# வீரர்களும் துரோகிகளும்!

யுத்தச் சூழலில் பிரசுரிக்க தகுதியானது தகுதியற்றதை தெரிவு செய்வது ஜனாதிபதியா? தகுதி வாய்ந்த அதிகாரியா? ஜனாதிபதியின் பேச்சை தணிக்கை செய்யும் அதிகாரம் யாரிடம் உண்டு? ஜனாதிபதிக்கா அல்லது தகுதிவாய்ந்த அதிகாரிக்கா?

போர்ச் சூழலில் இராணுவத்தை அதைரியப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சந்திரிகாவைப் போன்றே பிரபாகரனும் அமுல் செய்துள்ளார். பிரபாரகனின் அகராதியில்



யுத்தமானது ஒரு விடுதலைப் போர். சந்திரிகாவும் அவ்வாறே கூறிக்கொள்கிறார். யுத்தத்தை இரு சாரரும் தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவென்றே மேற்கொள்கின்றனர்.

வியட்நாமில் அமெரிக்க இராணுவம், கம்யூனிஸத்திடமிருந்து வியட்நாம் மக்களை காப்பாற்ற போரிட்டது. வியட்நாமிய கெரில்லா இயக்கம், ஏகாதிபத்தியதிடமிருந்து மக்களைக் காப்பாற்ற போரிட்டது. மக்கள் போராடினர். கொல்லப்பட்டனர். உயிரைத் தியாகம் செய்தனர். இறந்தனர். துரோகமிழைத்தனர்.

இந்த அகராதி எல்லோர் கையிலும் உண்டு. துரோகிகள் கொல்லப்படுகின்றனர். வீரர்கள் வாழ்வைத் தியாகம் செய்கின்றனர். அதாவது நாணயத்தை சுண்டி பூவா, தலையா பார்ப்பது போல், வீரர்கள் துரோகிகள் ஆகின்றனர். துரோகிகள் வீரர்களாகின்றனர்.

பிரபாகரன் ஒரு துரோகி என்பதனை பெரிய கொட்டை எழுத்துக்காளில் போடுவதற்கு தணிக்கை அதிகாரி அனுமதி தருகிறார். வீரர் என்று குறிப்பிட்டால் நீலப் பேனையினால் பெரிய கோடென்றை கீறிவிடுகின்றார். ஆனால் இவையெல்லாம் நாம் கூறினால் மட்டுமே. சந்திரிகா குமரணதுங்க தவறுதலாக இப்படிக் கூறினால் தணிக்கை அதிகாரி என்ன செய்வார்?

இரு வாரங்களுக்கு முன் ஜனாதிபதி சி.என்.என். உலக செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியின் போது பிரபாகரன் இடி அமீனினதும், ஹிட்லரினதும் கலப்பு என்று குறிப்பிட்டிருந்தார். இடி அமீன், ஹிட்லரின் கலப்புத்தன்மை என்பது கற்பனை செய்து பார்க்க முடியாத ஒன்று. சிலவேளை கம்பூச்சியர்கள் 5 லட்சம் பேரை கொன்று குவித்த பொல்பொட் போன்றதொரு பாத்திரத்தை இதற்கு உதாரணமாக்கலாம். இந்த வியாக்கியானம் ஜனாதிபதியின் வியாக்கியானம் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இந்த வியாக்கியானங்கள் பற்றி தமிழ் மக்கள் என்ன கூறுகிறார்கள் என்பது வேறு விடயம். குமார் பொன்னம்பலம் போன்றவர்கள் பிரபாகரன் தமிழ் மக்களின் தலைவராக வேண்டும் என நினைத்தனர். இவ்வாறு கூறுபவர்கள் பலர் உள்ளனர்.

ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வேறு ஒரு முறையில் கூறுகின்றார். வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்க யோசனை தெரிவித்தார். அதன் தலைமைத்துவத்தை புலிகளுக்கு வழங்க வேண்டும் என்றார். இதற்கான வாய்ப்பு 13வது யாப்பு சீர்திருத்தத்திலும், இலங்கை இந்திய ஒப்பந்ததிலும் இருப்பதாக அவர் தெரிவித்தார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபையை நியமிக்க அவர் கொண்டு வந்த யோசனை, சந்திரிகாவின் கருத்தின்படி நாட்டை தாரைவார்த்தலுக்கு ஒப்பானது. ரணில் ஒரு துரோகி. ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ரணில் ஒரு தேசத்துரோகி என சேறுபூசப்பட்டது இந்தக் காரணத்தில் தான்.


ரணிலுக்கு முன்னரேயே இந்தக்கதையை கூறிய இன்னுமொரு அரசியல் தலைவர் இருந்தார். அவர் தான் சௌமியமூர்த்தி தொண்டமான்.

ஐ.தே.க அரசாங்கத்தில் அமைச்சுப்பதவி வகித்த வேளையிலும் பொ.ஐ.மு அரசாங்கத்தில் அமைச்சுப்பதவி வகித்த வேளையிலும் அவர் பயமின்றி இவ்வாறு குறிப்பிட்டார். வடக்கு கிழக்கு பிரதேச நிர்வாகத்தை 5 வருடத்திற்கு புலிகளிடம் வழங்க வேண்டும். யுத்தத்தை நிறுத்த இது தான் சரியான வழி. இவ்வாறு கூறியவுடன் அவர் ஒரு துரோகியென முத்திரைக் குத்தியவர்களும் இருந்தனர். குறிப்பாக சிங்கள தேசியவாதிகள் அவரை துரோகி என்றனர். ஐ.தே.கவோ ஸ்ரீ.ல.சு.கவோ அப்படிக் கூறவில்லை. தொண்டமான் இறக்கும்வரை அவர் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவுமில்லை.

ஹாவர்ட் நிக்கலஸ் என்ற எனது ஆங்கிலேய நண்பர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் கற்பித்துக் கொண்டிருந்தார். விடுதலைப் போராட்டங்கள் பற்றிய அனுபவமும், நூல்களைப் கற்றுப் பெற்ற பரந்த அனுபவமும் கொண்டவர் அவர். அவரது கருத்தின்படி விடுதலை இயக்கமொன்றை பலவீனமாக்க அல்லது புனரமைக்க அவர்களிடம் அதிகாரத்தை வழங்க வேண்டும். நிக்கரகுவாவில் சாண்டினிஸ்டா இயக்கத்தினர் புரட்சியில் வெற்றிபெற்றனர். தேர்தலில் தோல்வியுற்றனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் அதிகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின் தான் புனரமைப்புக்கு இலக்காகியது. அவர் இவ்வாறான தர்க்கங்களைக் கொண்டிருந்தார். எனினும், அவர் அன்று யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதானது யுத்த ரீதியில் பொருளாதார ரீதியில் இல்லாத பிரச்சினையொன்றை உருவாக்கிக்கொள்வது போன்றதாகும் என்றார்.

காலத்திற்கு காலம் சந்திரிகாவின் கருத்துக்கள் எவ்வாறு இருந்தாலும், தற்போது உள்ள கருத்துக்கள் முற்றிலும் வித்தியாசமானவை என்பதையே சி.என்.என். தொலைக்காட்சி பேட்டியிலும், இந்திய இந்து பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்து பத்திரிகையில் அவர் இவ்வாறு கூறினார். "யாழ்ப்பாணம் பிரபாரகனிடம் சென்றால், பின்னர் மலையகத்தை ஸ்திரப்படுத்துவார். அத்தோடு திருப்தியடையாமல் தெற்கை கைபற்றுவார். அதன்பின் தென் இந்தியாவுக்கும் பிரச்சினைகள் கொடுப்பார்".



பலவந்தமாக சிறுவர் இராணுவப் படையை நடாத்திக் கொண்டு தமிழ் மக்களை பயங்கரவாதத்தின் மூலம் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பிரபாகரனினால் இவ்வளவு வேலைகளையும் செய்ய முடியுமா? இல்லாவிட்டால் பிரபாகரன் உண்மையில் சிறந்த போர்வீரரா? போரில் வென்றால் வீரன்... தோற்றால்... துரோகியும் ஆகலாம். வீரனும் ஆகலாம்.

இந்தத் தீர்மானகரமான யுத்தச்சூழலில் எவராவது பிரபாகரனை வடக்கு கிழக்கு முதலமைச்சராக்க வேண்டும், முதலமைச்சராக்க



தயார் என்று கூறினால் எப்படியிருக்கும்? தான் அப்படி ஒரு யோசனையை முன்வைத்ததாக 1995ல் அமெரிக்க டைம் சஞ்சிகை பேட்டியின்போது சந்திரிகா குறிப்பிட்டிருந்தார். இந்த யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்க ஐ.தே.க. பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கு பற்றுதலை சிலகாலத்திற்கு நிராகரித்தது. அன்றைய தினங்களில் சமாதானத்தைப் பற்றி பேசுவது வீரமான செயல். சந்திரிகா அன்றைய சந்தர்ப்பத்தில் ஒரு வீராங்கனையாகவே மாறினார்.

இப்பொழுது என்னதான் நடைபெறுகின்றது? சந்திரிகா கடந்த வாரம் ஸ்டார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் அப்பேட்டியை செய்தித் தணிக்கை அதிகாரி சில இடங்களில் வெட்டி இருந்தனர். விக்டரின் தாயாரின் மரணவீட்டில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் சிங்க ரணதுங்க, பேட்டியில் வெட்டப்பட்டுள்ள பகுதி பிரபாகரனுக்கு முதலமைச்சர் பதவி வழங்க ஜனாதிபதி கூறிய யோசனை என்றார். நாம் இது பற்றி வியந்தோம். ஜனாதிபதியின் பேச்சை தணிக்கை செய்ய அதிகாரியினால் இயலுமா? இதற்கு முதல் வாரத்தில் பிரபாகரனை இடிஅமீன், ஹிட்லர் கலப்பு என பிரசுரிக்க இடமளித்த அதிகாரி அடுத்த வாரத்தில் ஜனாதிபதியின் பேச்சை தணிக்கை செய்திருந்தார்.

எனினும், லக்பிம, பத்திரிகை அடுத்த திங்கள் அதனை அவ்வண்ணமே பிரசுரித்தது. சமாதானத்திற்கு இணங்கினால் பிரபாகரன் வடக்கு கிழக்கு முதலமைச்சராக நியமிப்பதாக ஜனாதிபதி ஸ்டார் தொலைக்காட்சிக்கு கூறியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியினால் முதலமைச்சுப் பதவியை பிற அமைச்சுப் பதவிகள் போல் பிரித்துக் கொடுக்க முடியாது. முதலமைச்சுப்பதவி மக்கள் வாக்குகளால் நியமிக்கப்பட வேண்டிய பதவி. எனினும், வடக்கு கிழக்கு இடைக்கால சபையின் தலைமையை புலிகளுக்கு வழங்குதல் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படக் கூடியதே. ஒருவகையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலின்போது கூறியதுபோல், மறுபுறம் தொண்டமான் கூறியது போல். மேலும் பல அரசியல் விமர்சகர்கள் கூறியது போல்.

தற்போது ஜனாதிபதி கூறியுள்ள இந்த யோசனை சரியா, பிழையா என்பது வேறு விடயம். சிலவேளை இவ்வாறான யோசனை காரணமாக ஜனாதிபதி ஒரு துரோகியாகலாம், வீராங்கனையாகலாம். எனினும், இவ்வாறான கருத்தைத் தெரிவிக்க ஜனாதிபதிக்கு மட்டும் உரிமையில்லை என்பதையே நான் கூறவிரும்புகிறேன். ரணிலுக்கு, தொண்டமானுக்கு ஹாவட்டுக்கு, சுனந்தவுக்கு எந்தவொரு நபருக்கும் அவ்வுரிமை உண்டு. இவ்வாறான கருத்தை முன்வைத்த காரணத்திற்காக மற்றவர்களை மிதித்தவிட்டு தாம் மட்டும் அவ்வுரிமையை பெற்றுக்கொள்ளுதல் பலவீனமான அரசாட்சியின் இயல்பாகும். இவ்வாறான கருத்துப் பற்றி சுதந்திரமான கலந்துரையாடலுக்கு தடைவிதிக்கும் பத்திரிகை தணிக்கையை அமுல்படுத்துவதானது அறிவீனமானதொரு அரச ஆட்சியாகும்.

- சுனந்த தேஷப்ரிய

## அடக்குமுறை....

அதிக வாழ்க்கைச் சுமையை சமநிலைப்படுத்த, ஊதியத்தை அதிகரிக்க உழைக்கும் மக்களின் கோரிக்கைகளை பலவந்தமாக அடக்கி, தற்போது பொருளாதார சுமையினால் துன்பப்படும் தொழில் புரியும் மககளின் இரண்டு நாட் சம்பளத்தை பறிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை இதற்கு ஒரு உதாரணமாகும். அரச யந்திரத்தை பயன்படுத்தி யுத்தத்தின் சுமையை பாடசாலை மற்றும் கிராமசேவைப் பிரிவு மட்டத்தில் மக்களின் மீது சுமத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த யுத்தம் காரணமாக உயர் மட்ட வர்த்தகர்களுக்கோ, உயர் முதலாளித்துவ குழுமங்களுக்கோ இலாபம் ஏற்படுமே தவிர எந்தவிதமான பொருளாதார கஷ்டங்களும் ஏற்படப் போவதில்லை. அதேபோல், துரித செல்வந்தர்களாக மாறும் பல அரசாங்க அமைச்சர்களுக்கு யுத்தத்தினால் ஏற்படும் பொருளாதார நட்டங்கள் எதுவுமில்லை. யுத்தச் சுமை இப்பொழுது இந்நாட்டு தொழில் புரியும் மக்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது. யுத்தத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது இந்நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்யும் ஆட்சியாளர் வர்க்கமும் அரசியல்வாதிகளுமே. சாதாரண பொதுமக்களல்லர். இதனால் வேலை செய்யும் மக்களின் மீது யுத்தத்தின் பெயரில் சுமையை திணிக்கவென போர்ச் சூழலை அமுல்படுத்துதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மேற்கூறப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு நாம் அடிபணிய மாட்டோம். இதனைத் தோற்கடிக்க தனித்தும் கூட்டாகவும் எடுக்க வேண்டிய அனைத்து ஜனநாயக மற்றும் சமாதான நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம். போர்க்காலச் சூழல் அமுல் செய்யப்பட்ட நிலைமையின் கீழ் இந்நாட்டு ஜனநாயக உரிமைகளை மீற, போலி யுத்த உளவியல் மனப்பாங்கை வளர்க்க மற்றும் வேலை செய்யும் மக்களின் மீது சுமையைத் திணிப்பது குறித்த எமது கூட்டான எதிர்ப்பை இவ்வாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆயினும், இப்பிரசுரத்தில் ஏனைய தமிழ்க்கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இ.தொ.காவும் கைச்சாத்திடவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகித்தபோதும் இந்தப் பிரசுரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கையொப்பமிட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இடதுசாரிக் கட்சிகள் புதிய ஜனநாயகக் கட்சியை தவிர வேறெந்தக் கட்சிகளும் கையொப்பம் இடுவதை தவிர்த்துள்ளன. ஜே.வி.பி. இன்னும் ஒரு படி மேலேபோய் இந்த பிரசுரம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசியல் தீர்வைக் கோரி நிற்பதால், இன்றைய சூழ்நிலையில் அரசியல் தீர்வு நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்லும் அதிகாரப்பகிர்வினை மையமாக கொண்டுள்ளதாகவும் அதில் கையொப்பமிடுவதனை நாம் மறுப்பதுடன் அபிப்பிராயம் விநியோகிக்கப்படுவதையும் எதிர்க்கிறோம் என்று தெரிவித்துள்ளது.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க-விரும்பும் ஜே.வி.பி. இப்போது தனது அரசியல் எதிர்காலத்துக்கு இனவாத சூழலை சாதகமாக்கிக் கொள்ள விரும்புகிறது. இனவாதப் போக்கின் எழுச்சியை இப்பிரசுரம் கண்டிப்பதில் அது தனது அரசியல் எதிர்காலத்துக்கு சவலாகிவிடும் என்ற எண்ணத்துடன் கையொப்பமிட மறுத்துவிட்டுள்ளது.

கையெழுத்திடுவதை தவிர்த்த தமிழ்க் கட்சிகளுக்கு அப்படி எந்த அரசியல் லாபமும் இருப்பதாக தெரியவில்லை. வயிற்றுப்பிழைப்பு நோக்கத்தைத் தவிர!

நன்றி - நூலகத்திட்டம்



தமிழ்த் தினப் போட்டிகளில்

# வீரத்தை முளையிலேயே கிள்ளி வைக்கும்

## வலயக்கல்வி அதிகாரிகள்!

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு அற்புதமான கவிஞன் தான். எத்தனையோ வருடங்களுக்கு முன்பு அவன் சொல்லி வைத்ததை - இன்றைக்குத் தான் நாங்கள் நன்றாக நினைவு கூரவேண்டியுள்ளது. சினிமாவுக்காகப் பாடிய பாட்டுத்தான். என்றாலும் வாழ்வுக்காகப் பாடிய பாட்டு. மனித ஜீவிதயாத்திரையின் கரடு முரடான பாதைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நீண்ட காலத்துக்கான தீட்சண்யத்தோடும், தீர்க்க-தர்சனத்தோடும் பாடிய கவிதைப் பாட்டு அது.

'சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா... ... இவ்வாறு தான் தொடங்குகின்றது.

'வேப்ப மர உச்சியில் நின்னு
பேயொன்று ஆடுதுன்னு
விளையாடப் போகும் முன்னே
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைப் பிஞ்சிலேயே
கிள்ளி வைப்பாங்க'.....

தான் நேசித்த தமிழ் நாட்டில், தன் தேசத்தில் பிறக்கும் ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும் வீரத்-தோடு வளர வேண்டும், வாழ வேண்டும் என்று ஒரு கவிஞன் நினைப்பது குற்றமா? ஒரு கவிஞ-னின் உள்ளத்தில் ஒரு கலைஞனின் உள்ளத்தில், இத்தகைய நினைவுகள் ஊற்றெடுப்பது தான் ஒரு தேசத்தின் தேவை, காலத்தின் கடமை. இந்தக் கடமையிலிருந்து ஒரு கவிஞனை, கலைஞனைக் கட்டுப்படுத்த நினைப்பது உண்மையில் ஒரு கோரக் கொலைக்குச் சமமானது, கொடூரமானது, கேவலமானது. வரலாற்றுத் துரோகம் ஒன்றுக்கு வடிகாலமைப்பது போன்றது.

இந்த முன்னுரையுடனேயே விடயத்துக்கு வருவோம்? "சுற்று நிருபம்" தமிழ் மொழித் தினம் - 2000". இப்படியான ஒரு சுற்று நிருபம், கல்வி சார் கடமைகளில் ஈடுபட்டுள்ள தமிழ் பேசுகின்ற பலரின் கைகளில் இப்போது கசங்கிக் கொண்டி-ருக்கும். கல்வி, உயர்கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு "நொந்து சுமந்திங்கு நூறாண்டு



வாழ்வதற்காய் பெற்று வெளியிட்ட சுற்று நிருபம் இது. "இசுறுபாய", "பத்தரமுல்ல" இந்த முகவரியில் தான் தமிழ் வளர்க்கும் இந்தத் தனிப் பிரிவும் இயங்குகின்றது. எவரும் போகலாம், வரலாம் - எப்படியும் தமிழ் வளர்க்கலாம்... இது பேச்சளவில். எழுத்து மூலம் இது பற்றியெல்லாம் நிரூபிக்க நினைப்பது முட்டாள்த்தனம்? ஏனென்றால் வெட்கக் கேடான விடயங்களை எழுத்தில் கொண்டு வர நினைப்பது தான் சங்கடமானது.

சுற்றுநிருபத்தின்படி தமிழ் மொழித் தினத்-துக்கான ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபட்டி-ருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் அதிர்ச்சி-யடையும் படியான சம்பவங்கள் திடீரென்று நடந்து முடிந்து விட்டன. வலய மட்டப் போட்டிகள் நடைபெறுவதற்கு ஒரு வாரம் இருக்கும் போது தான். திடீர் அறிவிப்புக்கள் திசையெங்கும் பறந்தன.

நாடகம், நடனம், வில்லுப் பாட்டு போன்ற நிகழ்ச்சிகளில் "வீரம்" வரக் கூடாது, அரசியல் வரக்கூடாது, வந்தால் போட்டியில் இருந்து நீக்கப்படும் எப்படி அறிவிப்பு? எந்த நியதிக்கிது ஏற்கும்?

தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் கல்வி, செல்வம், வீரம் மூன்றும் தந்தருளும் கடவுளுக்கு வழிபாடு செய்யவே நவராத்திரி விரதமும், விழாவும் எடுப்பதை நாம் அறிவோம். நாகரீக உலகில் வாழும் எந்தவொரு மனிதரும் தன் சந்ததிக்கு வீரம் வேண்டாம் எனக் கூற விரும்ப மாட்டார்.

"பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை" என்பது கிராமத்துப் பழமொழி தெரிந்து தானே சொல்லி வைத்திருக்கின்றார்கள். ஏன் ஒரு பிள்ளைக்கு மொழித்திறன் விருத்தியடைய வேண்டும்? அதன் ஆளுமையை வளர்க்கத் தானே? அவ்வாறு இருக்க வீரம் வரக்கூடாது என்ற எழுதப்படாத சட்டம் ஒன்றை எவ்வாறு? எந்த மனதோடு பிரகடனப்படுத்த முடிகின்றது. வீரமற்ற கோழையாக இருக்கும் எந்த ஜடத்தையாவது ஆளுமையுள்ள மனிதன்/மனுசி என்று ஏற்றுக் கொள்ள முடியுமா?

பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகளையே திரும்பவும் நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். 'வீரத்தைப் பிஞ்சிலேயே கிள்ளி வைப்பாங்க....' வேலை-யற்ற மூடர்களின் தேவையற்ற வார்த்தைகளால்... இவ்வாறு விரிகின்றது பாட்டு.

பிஞ்சிலேயே வீரத்தைக் கிள்ளுகின்ற கைங்கரியத்தை நாமும் ஏன் செய்ய வேண்டும்? தமிழ் மொழித்தினத்தின் இலக்குப் பாத்திரங்-களான தமிழ் பேசும் குழந்தைகள் வீரம் செறிந்த உணர்வுள்ள மனிதர்களாக வருவதால் யாருக்கு, எங்கே, என்ன வருத்தம்?

*"விரைவாக மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுத்து நீண்ட தொரு வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிநடை போட்டு, உலகத்தோடு ஒட்டி வாழ்வதற்கேற்ற தகைமைகளை அடைவதற்கு வழியமைக்கும் பாங்கிலேயே புதிய கல்வித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கில் முன்வைக்கப்பட்ட பொதுவான அடிப்படைத் தகமைகள் ஐந்தினுள்ளும் முன்மொழியப்பட்டதான "தொடர்பாடற்குரிய தகமைப்பேறு" அடையப்படுவதற்கு ஊடகமாக அமைவது மொழித்திறன் ஆகும். ஆகவே பல்வேறுபட்ட பரிமாணங்களில் மொழித்திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. இதனடிப்படையிலேயே அகில இலங்கைத்தமிழ் மொழித்தினப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன."*

தமிழ் மொழித்தினம் 2000 சுற்றுநிருபத்தின் 1ம் பக்கத்தின் இரண்டாம் பந்தியில் மேற்கண்ட-வாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்-பட்டுள்ளது.

மொழியாளுமை என்பது பார்த்தும் கேட்டும், எழுதியும், பேசியும், வளர வேண்டியது. அவ்வாறிருக்க தமிழ் மொழித்தினப் போட்டிகளில் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட-மாட்டார்கள் என்பதும் இன்னொரு எழுதப்படாத சட்டம். ஒரு பிள்ளையின் திறனை இன்னொரு பிள்ளை கண்டுகேட்டு விருத்தியடைவதற்கு தமிழ் மொழித்தினத்தில் இடமேயில்லை. இனி நேரடியாக போட்டிகளுக்குள் வந்து விட்டோமே-யானால் நிறைய வெட்கக் கேடான விடயங்-களைத் தரிசிக்கலாம்.

"இலக்கிய நாடகம்" திறந்த போட்டிப்பிரிவு" என்றொரு நிகழ்ச்சி. அதன் விடயம் பின்வருமாறு அமைகின்றது. "தமிழ் இலக்கியங்களிலிருந்து பாடல்கள் அல்லது, காட்சிகளைத் தெரிந்தெடுத்துச் சமகாலச் சூழலுக்கேற்ப புத்தாக்கம் செய்வதன் மூலம் நாடகங்கள் ஆக்கப்படல்." இந்த விடயத்-தைப் பார்த்ததும் பலருக்கும் மிக்க சந்தோசம். ஏனெனில் கடந்த காலச் சுற்று நிருபங்களில் இத்தகைய சுதந்திரம் இருந்ததே இல்லை. குறித்த சில இலக்கியங்களை மட்டும் குறிப்பிட்டு அவற்-றிலிருந்து மட்டுமே நாடகம் ஆக்கப்படுதல் வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. நாடகத்துறை + அரங்குத்துறையென்பது உலக-மெங்கும் கடுகதி வேகத்தில் நவீனத்துவத்தை நோக்கி வளர்ந்து பயன் செய்து வருகின்றது. அரங்கூடான கற்றலும் கற்பித்தலும் பலருடைய கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. கட்டுப்பாட்-டுக்குள் நின்று கலைபடைப்பது என்பது மிகக் கொடுமையானது. இந்த நெருக்கடி கடந்த காலங்களில் இருந்தது. இந்த நிலையில் தான் இப்படியொரு சுற்றுநிருபம் சந்தோசத்தைக் கொடுத்தது. படைப்பாற்றலை வளர்ப்பதற்கு இது ஓரளவு வழிசமைக்கும் என்பது கலை இலக்கிய ஆய்வாளர்கள் ஆர்வலர்கள் பலரின் நினைப்பாக இருந்தது.

ஆசிரியர்களும் மாணவர்களும் சந்தோச-மாக போட்டி வேலைகளில் ஈடுபடத் தொடங்கி-யாயிற்று. ஆயத்தங்கள் நிறைவு பெறும் தறுவாயில் தயாரிப்புக்கள் நிறைவு தரும் தறுவாயில் போட்டிக்கு ஒரு வாரம் இருக்கும் போதுதான் "வீரம் வரக்கூடாது" என்ற அறிவிப்பும் வலயக்கல்விப் பணிப்பாளர்களால் விடுக்கப்-பட்டது. அதுமட்டுமன்றி புள்ளித்திட்டத்தில் தரப்பட்ட ஒரு விடயம் பற்றிய ஊனமடைந்த அறிவிப்பும் சர்ச்சையைக் கிளப்புகின்றது. அதாவது "ஆற்றுவோர் பார்ப்போர் இடைத்-தாக்கம்" என்ற ஒரு அம்சத்துக்கு 20 புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளது. மிகவும் ஆரோக்கியமான ஒரு சூழ்நிலை தோன்றுவது போன்ற ஒரு மனநிலையில் மூச்சு விடுவதற்கு முன்னர் ஒரு திடீர்த்தாக்குதல். "போட்டியின்போது பார்வை-யாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே மேற்கண்ட விடயத்துக்கான அம்சம் நாடகப்பிரதியில் மட்டும் இருந்தால் போது-மானது. பிரதியைப் பார்த்து அதற்கான புள்ளியை வழங்கலாம்." எப்படி இருக்கின்றது அறிவித்தல்? பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் பொறுப்பு-ணர்ச்சியுடன் அறிவிப்புக்களை விடுக்க வேண்-டாமா? நாடகப்பிரதியில் எப்படி பார்ப்போர் - ஆற்றுகையாளர் இடைத்தாக்கத்தைக் காண முடியும்? இது சிறு குழந்தைகூட கேட்கக் கூடிய கேள்வி தானே?

அதிகாரத்தை மட்டும் பாவித்து சுய-சிந்தனை கூட இல்லாமல் விடுக்கப்படும் இத்த-கைய அறிவிப்புக்கள் கலை இலக்கிய ஆர்வலர்-கள் மத்தியில் நெஞ்சுக் கொதிப்பை ஏற்படுத்தி-யிருக்கின்றது. இத்தகைய சுற்று நிருபம் ஒன்றைத் தயாரித்து அனுப்பி வைப்பது வரைக்கும் சம்பந்-தப்பட்டவர்கள் யாருமே சுய சிந்தனையுடன் செயற்படவில்லையா? அல்லது திடீரென்று அவர்களின் கழுத்தில் யாராவது கத்தியை வைத்து விட்டார்களா? தங்கள் கழுத்தைக் காத்-துக் கொள்வதற்காக ஒரு சந்ததியின் கழுத்தையே நெரிக்க நினைப்பது நியாயமா?

நாடகம் எதற்கு? பார்ப்பதற்கு. யார் பார்ப்-பதற்கு? தமிழ் மொழித்தின நாடகங்களின் பார்வையாளர்கள் யார்? பிள்ளைகள், கல்விசார் உத்தியோகத்தர்கள், பிள்ளைகளின் பெற்றோர், ஆசிரியர்கள். இவர்களைப் பார்த்துப் பயப்படுவது தான் நியாயம் என்றால் இவர்கள் மத்தியில் எவ்வாறு கல்வியை வளர்ப்பது? வேறு எந்தச் சந்தர்ப்பத்தில் இவர்களுடன் உறவைப் பேணு-வது? உறவுப்பாலமாக அமையவேண்டிய இந்த விடயங்களில் ஏன் இந்த இருட்டடிப்பு?

உலக நாடுகளில் எங்கும் நாடகத்துறை பல பரிமாணங்களில் வளர்வதை நாம் மறந்து விட்டோமா? மக்கள் அரங்கு விடுதலைக்கான அரங்கு, தளை நீக்கத்துக்கான அரங்கு என்றெல்-லாம் நாடகத்தின் பரிமாணம் வளர்கிறது. நாங்கள் தொடர்ந்தும் மண்ணுக்-குள்ளேயே புரளப்-போகிறோமா? மகா-கவியின் கவிதை ஒன்று தான் ஞாபகம் வருகிறது.



'சிந்தனையாம்
ஆற்றற் சிறகுதைத்து
வானத்தே
முந்தநாள் ஏறி வான முழு
நிலவைத்
தொட்டு விட்டு மீண்டவனின் சுற்றம்
அதோ! மண்ணில் புரழ்கிறது'

இன்னொரு போட்டிக்கு வந்து பார்ப்போம். வில்லுப்பாட்டுத் திறந்த போட்டிப்பிரிவு. இதன் விடயம் என்னதெரியுமா? "வீரத்தாய்மார்களைச் சித்திரிக்கும் புறநானுற்றுப் பாடல்களிலிருந்து கதையாக்கம் செய்து ரௌத்திராசம் பிரதிபலிக்கும் பாங்கில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி அமைதல் வேண்டும்" இதுவும் ஒரு விடயம்.

"வீரம் வரக்கூடாது" என்று அறிவிக்கப்படும் ஒரு போட்டி நிகழ்வில், புறநானூற்று வீரத்தாய்-மாரை அதுவும் ரௌத்திராசம் பிரதிபலிக்க வில்லுப்பாட்டில் சித்திரிப்பது எப்படி? என்ன வேடிக்கையிது? போதை ஏறியவர்கள் கூட இப்படி மாறி மாறி கதைக்க முடியாதே? கல்வி நிலையில் உள்ளவர்களால் மட்டும் எப்படி இது சாத்தியமாகிறது?

பிரிவு -2 தரங்கள் 6,7 க்கு ஒரு நடனப்-போட்டி. விடயம் என்னவென்றால் "பாரதியாரின் தேசியப் பாடல்கள் அல்லது பாரதிதாசனின் சமுதாயப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து பாடல்-களைத் தெரிவு செய்து பொருத்தமாகப் பரத நடனம் அமைத்தல்" நல்ல போட்டி தானே. தயாரிப்புத் தொடங்கி விட்டது. வலயமட்டத்தில் இது பற்றித் திடீர் அறிவித்தல் என்ன தெரியுமா? "விடுதலைப் பாடல்களைத் தவிர்க்கவும்" எப்படி-யிருக்கின்றது? விடுதலை உணர்வு இல்லை-யெனின் பாரதியால் எவ்வாறு தேசியப்பாடல்-களைப் பாடியிருக்க முடியும் என்பது தான் விந்தை. இந்த விந்தைகள் எதுவும் புரியாமலே மேலிருந்து கீழ் வரைக்கும் அறிவித்தல்கள் பறக்கின்றன.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற... ஓர் தேசத்தில் தமிழ் வளர்க்கும் விந்தையை எவ்வாறு வியப்பது. தமிழ்க் குழந்தைகளை தமிழர்களை எவ்வாறு வளர்த்தெடுப்பதாக உத்தேசம்? அந்த உத்தேச திட்டத்தையாவது தமிழ் மொழித் தினம் பற்றிய அறிவித்தல்களை வீசுபவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்தால், எல்லோருமே வரிந்து கட்டிக்-கொண்டு புறப்பட்டு விடலாமே.

அதிசயம் என்னவென்றால் இலங்கைத் தமிழ்த்தினவிழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் விபுலானந்த அடிகளாரின் நினைவு தினமான ஜூலை 19ம் திகதியே நடைபெறுவ-துண்டு. சுதந்திரமாக மூச்சுவிட முடியாமல் தமிழ் ஆசிரிர்களும், பிள்ளைகளும் திணறிமூச்சடங்கிப் போகும் ஒரு விழாவின் அல்லது ஒரு போட்டியின் இறுதி நாள் சமர்ப்பணத்தை, தமிழ் மொழிக்காய் தனது வாழ்வியல் சுகங்களைத்துறந்து மொழி வளர்த்த முத்தமிழ் வித்தகர் துறவி சுவாமி விபுலானந்தர் ஏற்றுக் கொள்வாரா? அவரது ஆன்ம சாந்திக்கு இது உகந்தது தானா?

"ஆக்கத்திறன் வெளிப்பாடு, புதியன புனைதல் ஆகியன புதிய கல்விச் சீர் திருத்தத்தின் விசை ஆழிகள்...." இவ்வாறு சொல்கின்றது சுற்று நிருபத்தின் இரண்டாம் பக்கத்தின் இரண்டாம் பந்தி.எப்படி முடியும்? அப்படி இறுக்கிக் கொண்டு எப்படி இந்த விசை ஆழிகளைப் பயன்செய்ய முடியும். புதியன புனைதலும் ஆக்கத்திறன் வெளிப்பாடும் என்ற பதப்பிரயோகத்துக்குரிய அர்த்தங்கள் என்ன? அடைவுகள் எவை?

**'இன்னவை தான் கவி எழுத ஏற்ற பொருள் என்று பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்'**

**மின்னல், முகில், சோலை, கடல் தென்றலினை மறவுங்கள் - மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்'**

இது மஹாகவியின் வேண்டுதல். புதியன புனைய வேண்டும் என்ற ஏக்கத்தின் வெளிப்பாடு. அதற்கான மனநிலை சரியாக வேண்டாமா? திடுதிப்பென்று கட்டுப்பாடுகளைப் போட்டால் புதியன புனைதல் என்பது சாத்தியமா? எப்போது கல்வியுலகம் இவற்றை இவ்வாறு யோசிக்கத் தலைப்படும்? அந்த எண்ணமே அவர்களுக்கு இல்லையா?

கெட்டித்தனம் என்னவென்றால் இந்தத் திடுதிப்பான அறிவித்தல்களில் ஒரு கவனம் இருக்கின்றது. என்ன தெரியுமா?

➲19

நன்றி - நூலகத்திட்டம்



## திருமலை சித்த ஆயுர் வேத வைத்தியசாலை:

# கடவுள் கொடுத்த வரமும் தடுக்கும் பூசாரியும்!

சுதேச மருத்துவம் மிகவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய துறையாகும். தொன்மையான பாரம்பரிய மருத்துவமான இதன் அபிவிருத்தி பற்றி யாருமே கவலைப்படுவதாக தெரியவில்லை. அப்படியிருக்கையில் வட - கிழக்கு மாகாணத்தில் இது பற்றி பேசவே வேண்டியது இல்லை! இதன் அபிவிருத்தி பற்றி வட - கிழக்கு மாகாணங்களின் அரசியல்வாதிகளோ அல்லது பொது தொண்டர் ஸ்தாபனங்களோ மற்றும் புத்திஜீகளோ, நலன் விரும்பிகளோ கருத்தில் கொள்வதாக இல்லை. இது பற்றி கவலையே இல்லை. இதனால் வட - கிழக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவம் கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்குக் காரணம் எம்மவர்கள் மத்தியில் பொது நலன் மற்றும் பொது அபிவிருத்திகள் சமூக முன்னேற்ற சிந்தனைகளின் வரட்சியாகவும் இருக்கலாம்.

சுதேச வைத்தியசாலைகளை ஐந்து பிரிவுகளாக ஆயுள்வேத, திணைக்களம் தரப்படுத்தியுள்ளது. முதல் தரமாக போதனா ஆயுள் வேத வைத்தியசாலை வருகின்றது. அடுத்ததாக இரண்டாவதாக நூறு கட்டில்களுக்கு மேல் வசதியுள்ள மாகாண ஆயுள்வேத வைத்தியசாலை வருகின்றது. மூன்றாவதாக நூறுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட படுக்கை வசதிகளைக்கொண்ட மாவட்ட ஆதார ஆயுள்வேத வைத்தியசாலை வருகின்றது. நான்காவதாக நாற்பது கட்டில்களுக்கு குறைவான வசதிகளைக் கொண்ட கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை வருகின்றது. ஐந்தாவதாக வெளிநோயாளர் மட்டும் சிகிச்சை பெறும் ஆயுள்வேத மத்திய மருந்தகங்கள் வருகின்றன. இந்த வசதிகள் வட - கிழக்கு மாகாணத்துக்கு கிடைத்துள்ளனவா?

**இந்த விடயம் மாகாண சபையின் அதிகாரத்துக்குரிய விடயம். இதில் அரச அதிபர் எப்படி தலையிட முடியும்? அரச அதிபருக்கு அதிகாரம் கூட இருக்கின்றதா? மாகாண சபைக்கு அதிகாரம் கூட இருக்கின்றதா? அரச அதிபர் மாகாண சபையின் அதிகாரத்துக்குள் வருகின்றவரா? அல்லது அரச அதிபருக்கு மாகாண சபை கட்டுப்படுகின்றதா? எது எப்படி இருந்த போதிலும் ஒரு சாதாரண அரச அதிபரால் இங்கு மாகாண சபையே நிர்வகிக்கப்படுகின்றது. அவரின் சுண்டு விரலுக்குள் எல்லாம் அடங்கி விடுகின்றது! மாகாண சபைக்கென ஒரு ஆளுநர், தலைமைச் செயலர் மற்றும் பிரதிப் பிரதம செயலர்கள் இருந்தும் பயன் என்ன? அரச அதிபர் உத்தரவிட்டால் எல்லாரும் அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டியது தான்!?**

இலங்கையின் வட - கிழக்கு மாகாணம் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் சுதேச மருத்துவம் ஓரளவுக்கு அபிவிருத்தியடைந்து கொண்டே வருகின்றது. இதற்கு உந்து சக்தியாக உலக சுகாதார நிறுவனம் மற்றும் நாடுகளின் சுகாதார பொது தொண்டு நிறுவனங்கள் சுதேச மருத்துவ அபிவிருத்திக்காகவும் மூலிகை வளர்ப்பு, ஆராய்ச்சிக்கெனவும், பெருந்தொகைப் பணத்தை கொடுத்து வருகின்றன. இதன் மூலம் வட - கிழக்கு தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் மூலிகைப் பண்ணைகள், மூலிகை மருத்துவ ஆராய்ச்சி நிலையங்கள், மருந்தகம் என சுதேச மருத்துவம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது. மற்றைய ஏழு மாகாணங்களிலும் போதிய வசதியுடைய நாற்பத்திநாலு ஆயுள்வேத ஆரோக்கியசாலைகள் இயங்கி வருகின்றன. ஆனால், வட-கிழக்கு மாகாணத்தில் கைதடியில் உள்ள போதனா ஆயுள்வேத வைத்தியசாலை தவிர்ந்து வேறு வசதியுள்ள ஆரோக்கியசாலைகள் இல்லை!

வடகிழக்கு மாகாணத்தில் மக்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான மகா மாவட்ட அல்லது கிராமிய ஆயுள்வேத ஆரோக்கியசாலைகள் கூட இல்லை! மருந்துக்குக்கூட ஒன்றும் கிடையாது. வட-கிழக்கு மாகாணத்தில் ஆக இருப்பது வெளிநோயாளர் சிகிச்சை பெறும் சாதாரண ஆயுள்வேத மத்திய மருந்தகங்களும், உள்ளூராட்சி நிறுவனங்கள் நடத்தி வரும் சாதாரண சிகிச்சை நிலையங்களுமே! இதில் கூட இருப்பவை உள்ளூராட்சி நிறுவனங்கள் நடத்திவரும் சாதாரண மருந்தகங்களே! என்றபோதும் இதில் கூட சில உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் (பிரதேச சபைகள்) இதுபற்றி சிந்திப்பதும் இல்லை. இதற்குக் காரணம் எமது தலைவர்கள் சாதாரண கிறவல் றோட்டுக்கும், கக்கூசு கட்டுவதற்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் பாராளுமன்றம் போகவும் இல்லை. அரசியல் நடத்தவும் இல்லை! அவர்கள் தமது உயரிய இலட்சியமான அபிவிருத்திக்கு போனதால் சின்னவிடயமான இவைகள் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. இதில் மினெக்கெட நேரமும் கிடைக்காது! இதனால் தான் இன்று வேலைவங்கிகள் நாறுகின்றன. வங்கி உத்தியோகம் இரண்டு லட்சம் சாதாரண ஆசிரியர் பதவி ஐம்பதினாயிரம் என்று பேரம் பேசப்படுகின்றன.

துறைமுக உத்தியோகம் ஏலத்தில் விடப்படுகின்றது? நாம் எங்கே போகின்றோம்?

என்ன கூத்துக்கள் நடந்தாலும் தென்னிலங்கையில் அரசியல்வாதிகள் போட்டி போட்டுக்கொண்டு அபிவிருத்தி என்று ஏதோ செய்கின்றார்கள். ஊருக்குள் தலை காட்டுகின்றார்கள்! இல்லையென்றால் அடுத்த முறை தேர்தலுக்கு முகம் காட்ட முடியாது. ஆனால், எமது அரசியல்வாதிகள் திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டே காலத்தை கடத்தி விடுகின்றார்கள்!?

இப்படியிருக்கையில் வட-கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் குளுக்கோஸ் ஏற்றியதுபோல், கொஞ்சம் உசார் அடைந்து, சுதேச மருத்துவ அபிவிருத்திக்கென சில திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுடன் மல்லுக்கட்டி கொஞ்ச நிதிவசதியினை பெற்றுக் கொண்டது. அதன்மூலம் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்துக்கென வைத்தியசாலைகள் அமைக்கவும் ஆயத்தம் மேற்கொண்டது. அதற்காக அந்தந்த மாவட்ட அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டது சிலர் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். சிலர் அசமந்தமாய் இருந்தனர். இன்னும் சிலர் காணாமலே இருந்தனர்! அபிவிருத்தி கட்டிடம் மருந்து தயாரித்தல் ஐயோ! யார் இது எல்லாம் கேட்டது? ஏன் எமக்கு இந்த தலையிடி? வேண்டாம் தொல்லை! கதிரையில் இருந்து கதைத்துப்பேசி மகிழலாமே!

சரி அதுதான் போகட்டும். எல்லா இன மக்களும் வாழும் சமாதான திருநகராம், திருகோணமலை மாவட்டத்தில் முதல் கட்டமாக, ஒரு மாவட்ட ஆயுள்வேத ஆரோக்கியசாலை அமைப்போமென வட-கிழக்கு சுதேச மருத்துவ திணைக்களம் துணிவாக இயங்கியது. மத்திய அரசின் சுகாதார, நிதி நிறுவன செயல்-

**ஒரு மாகாண சபை எத்தனை மாவட்டங்களை கட்டி ஆளுகின்றது. இதற்கு என எத்தனை எத்தனை அதிகாரிகள். அதை விட வயதான மேலதிக அதிகாரிகளும், இருக்கின்றார்கள். இதை விட சட்ட ஆலோசகர் எனவும் ஒரு பதவி இருக்கின்றது. எல்லாம் இருந்து என்ன பயன்? ஒரு மாவட்ட அரச அதிபரின் முன் இவர்கள் எல்லாம் கைகட்டி நிற்கவேண்டியது தான் கேவலம்! வட- கிழக்கு மாகாண சபை யாருக்காக அமைக்கப்பட்டது? இதற்காக எத்தனையோ எத்தனையோ ஆயிரக் கணக்கான முகம் தெரியா இளைஞர்கள் செத்து மடிந்தனரே...! இளைஞர்கள், மக்கள் என இரத்தம் சிந்தினரே! கடைசியில் இந்திய நிர்ப்பந்தத்தால் உருவான சபை இன்று ஆண்டிகள் மடமாயிற்றே! இதனால் வட- கிழக்கு மக்களுக்கு என்ன பிரயோசனம்? என்ன லாபம்?**

துறைகளுக்கு தூதுபோய் கெஞ்சி கூத்தாடி கொஞ்சம் கருணை காட்டுமாறு மன்றாட அவர்களும் இது என்னடா கரைச்சலாய் காலை, கையைப் பிடிக்கிறாங்கள் எனக் கொஞ்சம் நெகிழ்ந்து, சனியனே ஓடு! இந்தா என கொஞ்சம் தெளித்து விட்டார்கள்!

அடுத்த கட்டம் திருகோணமலை நகரத்தில் தகுந்த ஒரு காணியை தேடவேண்டும். திருமலையில் பொதுக்காணி எடுப்பதென்றால் கல்லில் நீர் தேடுவது போல் மகா கஷ்டம். காணி அதிகாரியிடம் காவடி எடுத்துப் போய் பின், பிரதேச செயலாளர் இடம் தேர் இழுத்துப்போய் பின் நகர அபிவிருத்திக்கும் மற்றும் பல இடங்களிலும் தீர்த்தமாடியதின் பயனாய் கோணேஸ்சர் ஆலய வீதியில் மோட்சம் கிடைத்தது! ஆம், சங்கமித்த என்ற இடத்தில் (இந்த இடத்திற்கு எத்தனையோ நாம காரணங்கள் சிவனொலிபாதமலைக்கு உள்ளது போல்) அதாவது நகரின் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து பிரட்ரிக் கோட்டைக்கு செல்லும் வழியில் கடற்கரைக்கு சமீபமாக உள்ள, இடத்தில் ஒன்றரை ஏக்கர் காணி மாகாண காணி ஆணையாளரினாலும், பிரதேச செயலாளரினாலும் கையளிக்கப்பட்டது. இது கடல் சூழல் மற்றும் கடற்கரை சட்ட திட்டங்களுக்கு அமைவாக கடற்கரையில் இருந்து சில யார் தள்ளியே உள்ளது என்றும், கூறப்பட்டது. காணி கிடைத்த பின்பு, மாவட்ட வைத்தியசாலை முதற்கட்ட வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கட்டிட ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு வேலை பாரம் கொடுக்கப்பட்டது. அப்படா ஒரு பெரிய பாரம் முடிந்து விட்டது!

கட்டிட ஒப்பந்தக்காரரும் கட்டிட ஆரம்ப வேலைக்காக காணியை துப்பரவு செய்து வேலைகளை ஆரம்பித்தார். கடவுள் வரம் கொடுத்து விட்டார்! வந்தது கேடு. பூசாரி விழித்துக் கொண்டார். "என்னைக் கேளாமலா ம்..ம். வரமா? கத்தரிக்காயா...? ம் ம் ..." பூசகர் ருத்ரதாண்டவம் ஆடினார். கடவுளும் கத்தரிக்காயும், பூசகர் உருவெடுத்தாடி காய் வெட்டுவது போல் ஒரு வெட்டு! ஒரே வெட்டு. வியடம் முடிந்து விட்டது. திருகோணமலையின் சாபக்கேடு எந்த வேலை தொடங்கினாலும் ஒரே தடை தான்! சந்தை தொடங்கினாலும் சரி, ஆஸ்பத்திரி கட்டினாலும் சரி, தடை, தடை. ஒரே தடை தான். பேரினவாதம் தலை விரித்தாடுகின்றது.

வட- கிழக்கு மாகாணத்தின் சுதேச மருத்துவ அபிவிருத்திக்காக என முதலாவதாக அமைக்கப்பட்ட மாவட்ட ஆஸ்பத்திரிக் கட்டிட வேலைகளை திருமலை அரச அதிபர் இடை நிறுத்தி உள்ளதாக கட்டிட ஒப்பந்தக்காரர் மற்றும் பிரதேச செயலாளர் மூலம் அறியவந்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஏன் இந்தத் தடை!? இதற்கான காரணம் என்ன? என சுதேச மருத்துவம் தலையைக் குடைகின்றது!

சமாதானத் திருநகராம் திருகோணமலை மாவட்ட சகல இன மக்களுக்கும் பயன்படப் போகின்ற ஒரு ஆரோக்கியசாலையின் கதி என்ன? மருந்துக்கு எந்த வித வேறுபாடுகளும் இல்லை. சகல மக்களின் ஆரோக்கியத்தின் கோயிலே ஆரோக்கிய சாலைகள்! இதற்கும் தடையா? திருமலை மாவட்டம் அபிவிருத்தி அடையக் கூடாதா? சகல விதங்களினாலும் திருமலை பின்னடைய வேண்டியது தானா? எல்லாரும் வாய்மூடி மௌனித்திருக்கின்றனர்? முதுகெலும்பு என்ற ஒரு உறுதியான உறுப்பு இருப்பதாகவே தெரியவில்லை! மாவட்டத்தில் எத்தனையோ தொண்டு நிறுவனங்கள் இருக்கலாம். பெரிய பெரிய பெரியோர்கள் இருக்கலாம்: அத்துடன் புத்திஜீவிகளும் இருக்கலாம். இன்னும் பொது நலம் நலன் விரும்பிகள் இருக்கலாம். ஆனால், என்ன பயன்? திருமலையில் ஒன்றுமே நடைபெறாது!

உண்மையில், இந்த விடயம் மாகாண சபையின் அதிகாரத்துக்குரிய விடயம். இதில் அரச அதிபர் எப்படி தலையிட முடியும்? என சாதாரண பிரஜை கேட்கிறார்? அரச அதிபருக்கு அதிகாரம் கூட இருக்கின்றதா? மாகாண சபைக்கு அதிகாரம் கூட இருக்கின்றதா? சட்ட வல்லுனர்கள் தேடிப்பிடிக்க வேண்டிய சந்துபொந்துகள் நிறையவே இருக்கின்றன. அரச அதிபர் மாகாண சபையின் அதிகாரத்துக்குள் வருகின்றவரா? அல்லது அரச அதிபருக்கு மாகாண சபை கட்டுப்படுகின்றதா? எது எப்படி இருந் த போதிலும் ஒரு சாதாரண அரச அதிபரால் இங்கு மாகாண சபையே நிர்வகிக்கப்படுகின்றது. அவரின் சுண்டு விரலுக்குள் எல்லாம் அடங்கி விடுகின்றது! மாகாண சபைக்கென ஒரு ஆளுநர், தலைமைச் செயலர் மற்றும் பிரதிப் பிரதம செயலர்கள் இருந்தும் பயன் என்ன? அரச அதிபர் உத்தரவிட்டால் எல்லாரும் அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டியது தான்!?

ஒரு மாகாண சபை எத்தனை மாவட்டங்களை கட்டி ஆளுகின்றது. இதற்கு என எத்தனை எத்தனை அதிகாரிகள் அதை விட வயதான மேலதிக அதிகாரிகளும், இருக்கின்றார்கள். இதை விட சட்ட ஆலோசகர் எனவும் ஒரு பதவி இருக்கின்றது. எல்லாம் இருந்து என்ன பயன்? ஒரு மாவட்ட அரச அதிபரின் முன் இவர்கள் எல்லாம் கைகட்டி நிற்கவேண்டியது தான் கேவலம்! வட- கிழக்கு மாகாண சபை யாருக்காக அமைக்கப்பட்டது? இதற்காக எத்தனையோ எத்தனையோ ஆயிரக் கணக்கான முகம் தெரியா இளைஞர்கள் செத்து மடிந்தனரே...! இளைஞர்கள், மக்கள் என இரத்தம் சிந்தினரே! கடைசியில் இந்திய நிர்ப்பந்தத்தால் உருவான சபை இன்று ஆண்டிகள் மடமாயிற்றே! இதனால் வட- கிழக்கு மக்களுக்கு என்ன பிரயோசனம்? என்ன லாபம்? நிர்வாகம் தமிழாக இருந்தும் வெள்ளைக்காரன் இங்கிலீசிலை நடக்குது? சாதாரண தமிழ் மகன் அல்லது தமிழ் மகள் போய் ஒரு நிவாரணம் பெற முடியாது? ஊழல்கொடி கட்டிப் பறக்குது? மக்கள் உதாசீனப்படுத்தப்படுகின்றார்கள்? இதனால் யாருக்கு என்ன லாபம்? ஏன் சும்மா கட்டியழ வேண்டும்? இளைஞர்கள் வேலையின்றி வீதியில் அலைகின்றார்கள். படுக்கையில் கிடப்போர்க்கும் வட-கிழக்கு மாகாண சபையில் வேலை

**திருகோணமலையின் சாபக்கேடு எந்த வேலை தொடங்கினாலும் ஒரே தடை தான்! சந்தை தொடங்கினாலும் சரி, ஆஸ்பத்திரி கட்டினாலும் சரி, தடை, தடை. ஒரே தடை தான். பேரினவாதம் தலை விரித்தாடுகின்றது.**

கிடைக்கின்றது? கொழுத்த சம்பளங்களும், கிம்பளங்களும் கிடைகின்றன! கறையான் புற்றெடுக்க பாம்புகளும், ஓணான்களும் குடியிருக்கும் கதையாகி விட்டது. நாட்டின் அபிவிருத்தி என்ன? மக்கள் எக்கேடு கெட்டால் என்ன? ஜமாய்த்துத் தள்ளுங்கடா கண்ணுகளா?

வட-கிழக்கு மாகாண சபைக்கு வரும் நிதி எல்லாம் பெரும்பாலும் திரும்பியே போகின்றது. பின், எப்படி திரும்பாது இருக்கும். கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடா நிலையே இங்கு நடக்கின்றது. ஒரு சாதாரண மாவட்ட ஆயுள்வேத ஆரோக்கியசாலையையே அமைக்க முடியவில்லை? நிதி கிடைத்தும், காணி கிடைத்தும் கட்டிடம் கட்ட முடியாத நிலை! வாய்க்கு முன் சாப்பாடு கிடந்தும் சாப்பிட முடியாத நிலை! ஒரு சாதாரண அரச அதிபரினால் எல்லா அபிவிருத்தியையும் நிறுத்த முடிகின்றது!

இதற்குள் வேடிக்கை என்னவென்றால் எமக்கு அரச மந்திரி பிரதானிகள் என நூறுபேர் தாரை தப்பட்டைகளுடன் கோஷம் எழுப்பி வருகின்றார்கள். இருக்கின்றவர் காணாது என்று புதியவர்களும் வருகின்றார்கள். வட-கிழக்குக்கு என்று எத்தனையோ கட்சிகள், அமைப்புகள், பாராளுமன்ற பெருமகன்கள். இதில் ஒருவித குறையுமில்லை. ஆனால், பூனைக்கு யார் மணி கட்டுவது?

**கோணன்**

நன்றி - நூலகத்திட்டம்



# பூச்சியம்

குளவியின் அலைவுறுதல்களையும் நகர்வுகளையும் பார்த்தவாறே நடந்துமுடிந்த நம்ப முடியாத அமானுஷ்யமான நிகழ்வில் விறைத்து விக்கித்து போயிருந்தேன். இது தெய்வச் செயலா? ......... Is it Suprenatural? கண்ணகி வழக்குரைத்த காலை நிகழ்ந்ததாய் கூறப்பட்டது போலும், யேசு மரணித்த வேளை நிகழ்ந்ததாக கூறப்பட்டது போலும், இன்னும் கூறப்பட்ட எத்தனையோ அமானுஷ்யமான எத்தனையோ நிகழ்வுகளைப் போலும் இதுவும் ஒன்றா? ஒரு பூச்சியின் ஆத்ம ஓலம் இத்தனை சக்தி வாய்ந்ததா?...... அதற்குள் இத்தனை பெரிய ஆத்மா இருந்ததா? எது யதார்த்தம்? எது ஆத்மார்த்தம்? இத்தனையும் தற்செயல்களில் அமுங்கப் போகும் பூச்சியங்களா?

சட்டென்று அந்த நீலக் குளவி இப்போதும் சுவரில் தென்படுகிறது. அதே நீலக் குளவிதானா? அது தான் என்னை நையப்புடைத்து வெற்றிகண்டு விட்டு இன்னும் என் அறையை விட்டுப் போகாமல் இஸ்ஸுக்கிறது. எப்படியோ நான் அதற்கு விட்டுக் கொடுக்க வேண்டியவனே என்ற பாபச் சுமையையும் என் மீது ஏற்றியுமிருக்கிறது.

இந்த நீலக் குளவி அப்படியொன்றும் பிரமாண்டமானதல்ல. சுமார் 2 செ.மீ நீளம். இரண்டு பக்கமும் சிறகுகள் விரிக்கப்பட்ட நிலையில் சுமார் 2.5 செ.மீ. குறுணி திலையில் சுமார் 0.5 செ.மீ நீளமுள்ள இரண்டு குறுகிய உணர் கொம்புகள், சோடி கால்கள் கூட 2 செ.மீ க்கு மேலிருக்காது. உடல் பிரகாசமான நீலம். அதன் அழகே அந்த நீலந்தான். கண்ணீர் துளி போன்ற, மினுமினுப்பான, ஒளி புகக் கூடிய திசுவான, வெளிர் சாம்பல் நிறமான கண்ணீர்த்துளிச் சிறகுகள். மெல்லிய நூல் போன்ற மார் பிடையாடல் தொடுக்கப்பட்ட வயிற்று நுனியின் அடியில் வெளித்தள்ளக் கூடிய கொடுக்கின் முனை.

இந்த வகையான நீலக் குளவிகளின் இறந்த சடலங்களை நான் சின்ன வயதிலேயே பார்த்திருக்கிறேன். இந்த வகையான குளவிகளை அம்மா வேட்டைவாளி என்று சொல்லித் தந்ததும் நினைவிருக்கு. பூச்சிகள் என் அறைக்கு புதியவை அல்ல. எத்தனையோ பூச்சிகள் வந்து வந்து போகின்றன. சில நிரந்தரமாகவே முகாமிட்டிருக்கின்றன. எறும்பு, நுளம்பு, இலையான், சிலந்தி மற்றும் விளக்கு வெளிச்சத்துக்கு வரும் விட்டில் முதலிய எத்தனையோ பூச்சியினங்கள். பூச்சிகளின் மீது எனக்குப் பொதுவாக பகை கிடையாது எத்தனையோ பட்டுப் பூச்சிகளை கொல்லாமலே எடுத்தெறிந்திருக்கின்றேன். என் கையடிப்புக்குள் அகப்பட்டு நசியும் நுளம்புகளுக்காக எப்போதும் வருத்தப் படுவேன். நுளம்புத் திரியில் மயங்கி விழுந்து மூர்ச்சையாகிக் கிடந்து பின் மூர்ச்சை தெளிந்து உழன்று எழுந்து பறக்க முனைகின்ற நுளம்புகளை உற்சாகப்படுத்த மனம் விளைவதும் உண்டு. எறும்புகளுடன் விளையாடுவேன். இலையான்களை கைக்குள் வீசி எடுத்து பின் பறக்கவிட்டு விடுவதும் விளையாட்டுத்தான். மதியம் கழிந்த சாய்பொழுதில் இடைக்கிடை இரண்டொன்று என் அறைக்குள் மொய்த்து ஐந்து பத்து நிமிடங்களில் அப்பாலாகிவிடும். சிலந்திகள் உலகத்திலேயே பெரிய ஜோக்கர்கள். சூமற்சுவர் நூலான்களை இடைக்கிடை நாடு கடத்தவே வேண்டியிருக்கும். எனினும், மீண்டும் நாடு புகுவதில் பெரிய ஆத்திரம் ஒன்றுமில்லை. எந்நேரமும் அவைகளைப் பார்த்து வியந்துகொண்டே இருக்கலாம்.

எந்த நீல வேட்டைவாளிக் குளவிகளோடும் நான் பகைமை கொண்டதில்லை. சுவரில் உள்ள ஆணித்துளைகளை அவை பயன்படுத்துகின்றனவா? அல்லது அவைகளே துளைபோடுகின்றனவா? என்பதை நான் இன்னமும் கவனிக்கவில்லை. துளை போடக்கூடிய வாயுறுப்புகள் அவைகளுக்கும் உண்டு. சில குளவிகள் மரத்தில் கூட துளை போடுகின்றன.

ஒரு நாள் மிக அதிகாலையில் எழுந்துவிட்டேன். விளக்குப் போடாமலேயே வெளியில் போய் வந்தேன். வெளியில் நிலவு இன்னும் மறையாத நேரம் அது. தளர்ந்து விலகிப்போயிருந்த சுவிச்சில் இருட்டில் கை வைக்கப் பயம். அதன் வயர்கள் குழம்பி குறும் சுற்றோட்டம் ஏற்படுகின்ற ஆபத்தும் இருந்தது. அதனால் கதவை மூடிய பின்னும் இருட்டில் தடவிக்கொண்டே கட்டிலில் அமர்ந்தேன். அவ்வளவு தான். ஒரு கணம் என் உயிரே போனது. ஊசியிலும் கொடிதாக ஏதோ என் கீழ்த் தொடையில் குத்தியது போலிருந்தது. 'ஆய்' என்று அலறியும் விட்டேன். நல்ல காலம் மனுசியும் பிள்ளைகளும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நீல நிற வேட்டைவாளி குளவிதான் கொட்டியிருக்க வேண்டும் என நினைத்தேன். நான் அதிகாலை இருட்டுக்குள் கட்டிலில் அமர்ந்தது அதற்கு எந்த வகையில் குந்தகமாக இருந்திருக்கும் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. விடியற் காலையிலேயே அதுவும் எழுந்து விடுகிறதா?

அந்த வலி சில நாட்களுக்கு நீடித்தது. தொடைப் பகுதி சிவந்து உள்ளே சீழும் உண்டாயிற்று. சீழ் உண்டான பகுதியில் கல்லுப்போல ஒரு திரணை என் கையோடு வரவும் செய்தது. அந்தத் திரணையின் உட் பொதிவில் குளவியின் ஒடிந்த கொடுக்குத் தான் இருந்ததோ எனவும் யோசித்தேன்.

இந்தச் சம்பவத்தை நான் மறந்தது போலாயிற்று. நான் அபாரமாய் பிரேமிக்கும் தேனீக்கள் கூட என்னைப் பலமுறை கொட்டியிருக்கின்றன. அதற்காக அவைகள் மீதெல்லாம் வஞ்சம் கொள்ள முடியுமா? இந்தப் பூச்சியிடமும் எனக்கு விரோதம் ஏற்படவில்லை. அல்லது என் உள்ளுணர்வில் என்னை அறியாமலே ஒரு விரோதம் ஏற்பட்டிருக்கும்.

இன்று மதியம் என்ன தான் ஏற்பட்டது எனக்கு? சாப்பிட்ட பின் கட்டிலில் பத்திரிகையை வாசித்தும் வாசியாமலும் அயர்ந்து கொண்டிருந்தேன். அப்படி என்ன நடந்தது. இந்த நீல நிற குளவியில் வன்மம் ஏற்பட? என் தலையணைக்கு அருகில் உள்ள சுவரில் காலூன்றி சிறகு அதிர உணர் கொம்புகளை நீட்டிக்கொண்டிருந்ததனாலா? நான் உசாராகி எழுந்து அமர்ந்தேன் என்பது உண்மைதான். அதன் பின் தலையணையில் இருந்து இரண்டு அடிக்கு மேலுள்ள சுவர்ப் பகுதியில் இருந்த ஒரு துவாரத்தினுள் அது உட்செல்வதும் துவாரத்துள்ளிருந்து வெளிவருவதுமாய் இருந்தது. தற்பாதுகாப்பின் நிமித்தம் நான் கட்டிலில் இருந்து எழும்ப வேண்டியே இருந்தது.கூடவே என் எரிச்சலும் எழுந்தது போலும். இந்தப் பூச்சிகளுடன் நான் ஒரே அறையில் வாழ்வது எப்படி என்று என்னையே நான் கேட்டுக் கொண்டது நினைவுக்கு வருகின்றது. இந்தப் பூச்சியை நான் கலைத்து விடுவதா? தொலைத்து விடுவதா என்று குழம்பி சாரனை மடித்துக் கட்டி கையில் துவாயை எடுத்துக் கொண்டதும் நினைவுக்கு வருகின்றது.

கலைத்து விடத் தான் எண்ணினேன். துவாயை லேசாகத்தான் வீசினேன். லேசான துவாய் வீச்சில் அதற்குக் காற்று வீசியது போலிருந்ததோ! அது மேலும் உற்சாகமாக சுழன்று சுழன்று துவாரத்தை நோக்கியே பறந்தது. எனக்கு சினம் மூண்டது உண்மை. எப்படியும் அதை வீழ்த்தி விடுவது என்று ஆவேசம் பூண்டு கட்டில் வார்ப்பை உதறி எடுத்தேன். அதை அள்ளிப் பிடித்து ஓங்கி விசுக்கிய போதுதான் குளவி அச்சம் கொண்டு ஜன்னலினூடாக வெளியே பாய்ந்து, வாழை மடலில் இடறி மதிலுக்கு அப்பால் அடுத்த வீட்டுக் கொல்லையினுள் பறந்து மறைந்தது.





வார்ப்பை மீண்டும் கட்டிலில் வைத்து மீண்டும் பத்திரிகையை துளாவத் தொடங்கினேன். இரண்டொரு நிமிஷங்கள் கழிய குளவி மீண்டும் அறையில் தோன்றியது. என் மனதிலும் ஒரு சிறிய விட்டுக் கொடுப்பு. எப்படியாகினும் போகட்டும் என்ற சகிப்பு. திடீரென மீண்டும் கொதிப்பு. இந்தச் சனியனை இப்படியே வைப்பதன் அர்த்தம் என்ன? என்ற உறுத்தல். மீண்டும் சாரணை மடித்துக் கட்டியபடி மீண்டும் கட்டில் வார்ப்பும் கையுமாய். மீண்டும் யன்னலை நோக்கிய பூச்சியின் மன்னல். மீண்டும் வாழை மடல்கள். மீண்டும் மதில். மீண்டும் அடுத்த வீட்டுக் கொல்லை.

இனி வராது என்று ஏனோ நான் திடமாக எண்ணினேன். அவ்வாறு எண்ணுகையிலேயே மீண்டும் அந்தக் குளவி அறையினுள் புகுந்தது. அடே, போன கையோடேயே சுழன்று மீண்டும் வந்து குதிக்கிறதே என மனம் துடித்தது. எப்படியும் உன்னை அடித்து வீழ்த்துவேன் என்று என் முரட்டுத்தனம் கருவியது. வெறுமனே இதை அடித்து விரட்டுவதில் பயனில்லை. திரும்பவும் வரத்தானே போகிறது என எனது வக்கரிப்பில் நிதானமானேன். மேசையில் இருந்த மெழுகுவர்த்தித் தாங்கியை ஒருமுறை பார்த்துக் கொண்டேன். தாங்கியின் ஓரமெல்லாம் ஒழுகி நிரம்பி மிகைத்திருந்த மெழுகு வழியல்கள் ஜன்னலூடு பாய்ந்த சூரிய வெப்பத்தில் நைந்து கூள் நிலைக்கு நொதுமலாகிக் கொண்டிருந்தது. என் வக்கிரம் மூட்டுப் பூச்சுகளின் இடுக்களின் எங்கோ ஊற்றியிருக்கக் கண்ட அடைப்புக்களின் குரூரத்துக்கு கோயில் கட்டியது.

"மூட்டுப் பூச்சிகளுக்கு மெழுகு ஊற்றி அடைப்பதை ஓரளவு நியாயப்படுத்த இயலும். அது மனிதரை குத்த குருதியை உறுஞ்சுகிற ஒரு பிராணி. வேட்டைவாள் குளவி எதைக் குத்தியது? எதைக் குடைந்தது? எதை உறுஞ்சியது?"

"ஏன் என் தொடையைக் குத்தவில்லையா? என் தொடையை குடையவில்லையா? என் நிம்மதியை உறிஞ்சவில்லையா?"

என்னிலுள்ள அரக்கன் உறுதியானான்.

இதை ஒரு பெரிய விஷயம் போல ஆர்ப்பரித்துக் கொண்டான். நான் வேறு, என் அரக்கன் வேறு என்று நான் இப்போ தப்பித்துக்கொள்ள நினைக்கும் நினைப்பு அப்போது இருக்கவில்லை. பழியிலும் பாவத்திலும் முழங்கால் புதைய நின்றேன். - கையில் நொதுமலான அரைவேக்காட்டு வெள்ளை மெழுகு குளம்பை அள்ளியபடி.

நீலக் குளவி அதன் சுவர் வளைக்குள் புகுந்து கொள்ளும் தருணத்தை எதிர்நோக்கி நின்றேன்.

சுவர் மணிக்கூட்டின் டிக் டிக் ஒலி மட்டும் கேட்டது. குளவியின் ர்வ் என்ற சிறகு அதிர்வுகள் கூட எனக்குக் கேட்கவில்லை. குளவி சுவரில் மொய்த்து துவாரத்தை தேடுவது போல நகர்ந்துகொண்டிருந்தது.

இரண்டொரு வினாடிகள்........

மீண்டும் ர்வ் என்ற திசுவின் சிறகோசை. பத்துப் பதினைந்து சுற்றுலாக்கள். பின் மெதுவாக தரையிறக்கம். மெதுவான மிக மெதுவான தரையிறக்கம். நான் பொறுமை இழந்தேன். மெழுகுக் குறை குழம்பை எறியத்தான் மனம் வந்தது. வேண்டா வெறுப்புடன் மெழுகைத் தாங்கியின் அடியில் அப்பிவிட்டு நிமிர்ந்தேன். குழவியைக் காணவில்லை. ஜன்னலினூடாக வாழைமடல் பக்கமும் மதிலுக்கு அப்பாலும் நோக்கிவிட்டு அறையின் கூரைத் தளங்களை பார்த்து மீண்டும் சுவரைப் பார்த்தேன். துவாரத்தினுள் இருந்து பூச்சி தலையை நீட்டிக் கொண்டிருந்தது. மெழுகை எடுப்பதற்கிடையில் அது வெளியே வந்துவிட்டது. நான் சோர்ந்து போன தருணத்தில் மீண்டும் பூச்சி உள்ளே போனது. முற்றாக உள்ளே போனது. குரூரமும் கோபமும் தலைக்கேற மெழுகை துவாரத்தினுள் வைத்து அப்பினேன். அவ்வளவு தான், குளவியின் கதை முடிந்தது என்ற வன்மத்துடன் அப்பிய கையை எடுத்தேன்.

வெளியில் எங்கோ பறையொலி கேட்டது. யார் வீட்டு சவமோ? இந்தக் குளவியும் சவம் தானோ? என் மென்மையான தளைகளிலிருந்த வரிகள் பீறிட்டெழுந்தன. "புறா இறந்த ஊர்வலம் அது இப்போது மரண கீதம் என் விழி நனைகிறது. கறுத்த எழுத்துக்கள் கரைகின்றன பறையொலியுடன் குழலோசையின் ஈனஸ்வரமும் கேட்கிறது. நான் துடித்துப் போனேன்.

உடனே இடிபாடுகள் தொடங்கின என் இதயத்துள். "டாங் டாங்" என்று சம்மட்டிகள் தெறித்தன. என்னில் வரலாற்றுக் காசியப்பனைக் கண்டேன். தம்பட்டையின் சாந்த மணல் மேடுகளில் கைதிகள் வெட்டிய குழிகளில் கைதிகளையே இறக்க வைத்த சிப்பாய்களைக் கண்டேன். என்ன குரூரம்! என்ன குரூரம்!. என் மூச்சுத் திணறியது. கூடவே ஒரு குரலும் கேட்டது.

"குரூரமும் வேண்டியதே."

"குரூரம் இல்லாமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இயலாதா?"

மனதின் கறுத்த வானிலே பளிச்சென்று ஒரு சென்னிறப் பொட்டு!

உடனே மெழுகை துவாரத்தின் வாயிலிருந்து கவனமாக நீக்கினேன். உள்ளே போயிருக்கக் கூடிய மெழுகையும் பேனா முனையால் நீக்கினேன். ஓர் ஆணியையும் உபயோகித்தேன். பூச்சி எஃறப் பாயும் என்றும் எதிர்பார்த்தேன். பூச்சியின் அசைவாட்டமே இல்லை.

இதற்கிடையில் பூச்சி இறந்திருக்குமோ?....

அது இறந்திருக்கக் கூடாது என வேண்டிக் கொண்டேன்.

பூச்சி இறந்து விட்டதா? அல்லது உயிருக்குப் போராடுகிறதா? துவாரத்தின் வாயை அகட்டிவிடலாமா? என அலுமாரி லாச்சியில் ஸ்குரு றைவரை எடுத்துக் கொண்டு திரும்பினேன். வ்ர் என்று ஏதோ என் கண்ணுக்குள் பாய்ந்தது. நான் கண்களை மூடி, பின்னுக்காகி, மீண்டும் கண்ணைத் திறந்த போது ஒரு பொட்டாக புள்ளியாக கூரை முகட்டை தொட்ட பின் ஒரு ஜெற்றாக ஜன்னலினூடே பாய்ந்து மதிலின் அப்பால் அடுத்த வீட்டுக் கொல்லைக்குள் தலை கீழாக குத்தென்று கர்ணமடிப்பது தெரிந்தது. அதன் நிலை மோசமாகி விட்டதோ என்ற அச்சம் மீதூர வெளியில் ஓடி மதிலோரமாக நின்று அடுத்த கொல்லையைப் பார்த்தேன். கொல்லையில் எங்கெங்கோ தொட்டுத் தொட்டு திரிந்துகொண்டிருந்தது. அதன் உயிராபத்துப் பற்றிய கிலேசம் நீங்கியவனாய் அறையினுள் வந்தேன்.

சரி, இனி எனது மறுகட்ட வேலை ஆரம்பமாக வேண்டும். இதோடு பூச்சி வெருண்டு வராவிட்டால் சரி. இன்னும் இன்னும் அது வந்தால் என் அடுத்த அஸ்திரத்தை நான் பாவிக்க வேண்டும். பூச்சி வருகிறதா? இல்லையா என்பதை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

நீண்ட நேரமாகியும் பூச்சி வரவில்லை. பூச்சி வெருண்டுவிட்டது என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. ஜன்னலில் வெய்யில் இன்னும் வீச்சாகப் பாய்ந்தது. பொழுது சற்று இறங்குகிறது என்று அர்த்தம். பத்திரிகையை எடுத்து சற்றுப் புரட்டினேன். கட்டிலில் சிறிது கிடப்பதற்கும் ஆயத்தமானேன். திடீரென்று ஒரு ரீங்காரம். ஜன்னலுக்கு வெளியில் தான் கேட்டது. நான் வெளியில் இறங்கி பின்னுக்கு வாழைமரங்களின் பக்கம் போனேன். கொல்லைப் புறத்தையும் எட்டிப் பார்த்தேன். குளவியின் எந்த சிலமனையும் இல்லை. எனக்கு யோசனையாயும் இருந்தது. அறையினுள்ளே வந்த போது அந்த இஸ்ஸ்ஸிஸ்ஸ்ஸு மீண்டும் கேட்டது.

அண்ணார்ந்தேன். ஒன்றுமில்லை. குனிந்தேன். சரியாக என் கட்டிலின் மீது. அப்போது அது ஒரு சிறு பூச்சியாக எனக்குப் படவில்லை. என் கட்டிலில் கிடக்கின்ற பூச்சிமுகனாகவே பட்டது. குழம்பி சுருட்டியது போலிருந்த போர்வையுள் புகுந்து வெளிப்பட்டு தலையணைகளில் தாவி அங்கிருந்து சுவர்ப் பரப்பில் தன் கூட்டுத் துவாரத்திற்கு தாவியது. எனக்கு முடிந்த முடிவாயிற்று. மெழுகுவர்த்தி தாங்கியிலிருந்து மெழுகு வழியலில் சிறிதை பெயர்த்துக் கொண்டேன்.

பூச்சி துவாரத்தின் உள்ளே போனது. மணிக்கூட்டின் டிக் டிக் ஒலி தெளிவாக கேட்டது. அதன் நீண்ட சிவப்பு வினாடிக் கம்பியின் ஒவ்வொரு பெயர்வும் என் பொறுமையைச் சோதித்தது. எப்போது பூச்சி வெளிவரும் என்ற வாசகத் துடிப்பு மேலோங்கியது.

ஒரு பூச்சியுடன் நான் போரிடுவது எதற்காக? எனது இருப்பிடத்தை நான் பாதுகாக்க வேண்டாமா? இருப்பிடம் என்பது எனது இருப்புடன் தொடர்பானது. எனது இருப்புக்கான சுயாதிபத்தியம் எனக்குண்டு. பூச்சி வெளியே வரும் வரை நான் காத்திருந்தேன்.

பூச்சியின் தலை வெளிப்பட்டது. ஆகப் போனால் 'சென்றிமீற்றர்' நீளமோ அகலமோ இல்லாத பூச்சியின் குளவித்தலை இப்போது எனக்கு ஒரு வலிய விலங்கின் தலை போலவே தெரிந்தது. சில நூல் இடைவெளிகளைத் தவிர

நன்றி - நூலகத்திட்டம்



தலையில் இருபக்க உச்சிகளையும், நுதல்களையும், கதுப்புகளையும் மூடியிருந்த குமிழுருவான அதன் கூட்டுக் கண் வில்லைகள் ஒவ்வொன்றிலும் என் உருவம் கட்டுண்டு போவதைக் கற்பனை செய்தேன். எவ்வளவு நொருங்குண்டு போயிருக்கும் என் உருவம் அதன் கண்களில்! அரை சென்றி மீற்றர் கூட இல்லாத அதன் நீள உணர்கொம்புகள் ஒரு ஹெலிகொப்டரில் புரோபெல்லர்கள் போல எனக்குத் தோன்றின. ஒரு சிறு பூச்சிதான் ஆனால், எவ்வளவு பூதாகரமான மூச்சையும், முனைப்பையும் ஆளுமையையும் உடையதாய் என்னுள் உருக்கொண்டு விட்டது.

மெல்ல மெல்ல அதனுடல் பாதிக்கு மேல் வெளிவந்த போதும் 'ஹன் ஹாரிலிருந்து' ஒரு விமானம் போன்ற கனதி ஒன்று தெரிந்தது.

இப்போது துவாரத்தில் இருந்த சுவரின் மேற்பரப்புக்கு நகர்கிறது. மென்மையான ஒளி புகக்கூடிய அதன் அழகான மினுக்கமான சிறகுகளின் நரம்புகளில் ஒரு சிற்பியின் வித்தைகள் தெரிகின்றன. சிற்பியின் வித்தைகள் தெரிகின்ற அந்த கண்ணீர் விமானச் சிறகின் கனதியும் நுட்பமும் பெற்றே இருக்கின்றன. அந்தக் கண்ணீர்த் துளிகள் எனக்கு சவால் விடுகின்ற கண பரிமாணம் பெற்று விடுகின்றன.

'போராடியே தீருவது நானும் நீயும்' என்ற புல்லரிப்புடன் நான் மெழுகு வழியலின் நொய்மத்தை உருட்டி திரட்டிக்கொள்கிறேன். வீர் என்று பறந்து விடுகிறது விமானம். நான் ஹங்காரின் வாயிலை மேகத் தழைவான எரிமலை குளம்பினால் அடைத்து விடுகின்றேன். இனி வந்து பூச்சி இந்த எரிமலைப் பாராங்கல்லை உசுப்பி பார்க்கட்டுமே.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. பூச்சியை எதிர்பார்த்துக் கொண்டே நிற்கிறேன். ஜன்னலை கடந்தும், வாழை மடல்களைக் கடந்தும், மதிலைக் கடந்தும், மதிலுக்கப்பால் உள்ள அடுத்த வீட்டு கொல்லைப் புறத்தை கடந்தும் எட்டி எட்டி பூச்சியை எதிர்பார்த்துக் கொண்டே நின்றேன்.

வருகிறது விமானம். அதன் இரைச்சல் அதைக் காணு முன்பே எனக்குக் கேட்டுவிடுகிறது. அதோ வெளியில் உள்ள அந்த மதிலுக்கு மேல் வாழை மடல்களைக் கடந்து அது வருகிறது. எனது ஜன்னல் கம்பிகளுக்கிடையில் உள்ள பாரிய வான் வெளியினூடாக எனது அறைக்குள் பாய்ந்து விடுகிறது.

அறையெங்கும் அதன் இரைச்சல். சுவரின் ஓடுபாதையெங்கும் அது துருவித் துருவிப் படர்கிறது. தொடுதலும் எழுதலுமான வழமையான நகர்வுகள். கடைசியாக மேகத்தழைவான என் வெண்ணிற எரிமலைக் குளம்பு பூச்சுக்கு வருகின்றது. எனது சூதின் மர்மம் அதற்குப் புரியவில்லை. ஓடுபாதையிலிருந்து கிளம்பி விமானத் தளத்தின் வான் வெளியெங்கும் சுற்றிச் சுற்றி சுழல்கிறது.

இந்த உயிர் விமானத்தின் பதற்றம் மிக்க இரைச்சலை என்னால் பொறுக்க முடியவில்லை. ஒரு ரோபோ போல கணனிக் கணிப்புகளுடன் கோணம் வரித்து நகர்ந்து நகர்ந்து பறந்து பறந்து மூடப்பட்ட ஹங்காரை நெருங்குகின்றது. இறுகிப்போன எனது வெண்பாறைக் குளம்பில் முட்டிக்கொள்கிறது.

**சண்முகம் சிவலிங்கம்**

ஏதோ தவறு, ஏதோ சூது நடந்திருக்கிறது என்பதை என் பூச்சி விமானம் புரிந்துகொண்டு விட்டதைப் போல் தோன்றுகிறது. உடனே ரீவ் என்று கிளம்பி ஜன்னலின் வான்வெளியை ஊடறுத்து வாழைமடல்களை உரசியவாறு மதிலுக்கப்பால் அடுத்தவீட்டுக் கொல்லையின் மேக மண்டலங்களில் மறைந்து விடுகிறது.

முடிந்தது கதை என்ற நிம்மதி எனக்கு. பூச்சியின் வளை மூடப்பட்டு விட்டதால் அது இனித் திரும்பி வருவது சாத்தியமில்லை. அது இனி வேறு இடங்களை நாடும். வேறு வளைகளைப் போடும் என்பதை நான் ஒரு பாட்டாகவே பாடினேன்......

வேறு இடத்தினை நாடு
வேறு வளையினை போடு

அட என் வேட்டைவாளி குளவியே
நீ
வேறு இடத்தினை நாடு
வேறு வளையினை போடு....

எனது பாடலின் உச்சஸ்தாயில் அதன் பின்னணி இசை போல அந்த விமானத்தின் ஓசை மீண்டும் கேட்டது. விமான ரீங்காரம் மேலோங்கியது. நான் அறையினுள் அண்ணார்ந்து பார்த்தேன். விமானம் விமானமாகத் தெரியவில்லை. ஒரு பறக்கின்ற தாயாகத் தெரிந்தது. அந்தரத்தில் அந்தரப்படுகின்ற அபலைத் தாய்.

'ஆக்காண்டி' எழுதிய அதே கைதானா இந்தத் தாயின் குடிசையை மூடியது? கல்லைக் குடைந்து இட்ட முட்டையல்லவா அவைகள்? எத்தனை குடம்பிகளுக்கு எத்தனை மலைகளையும் எத்தனை உலகங்களையும் சுற்றி இரை தேடிக்கொண்டு வந்திருக்கிறதோ நீலக் குளவி ஆக்காண்டி? நான் அடைத்த வெள்ளை மெழுகை எடுத்துவிடத் துடித்தன எனது விரல்கள். எனினும் இந்த மென்மையின் தளைகளிலிருந்து நான் இன்னமும் விடுபடுவதில்லையா? வெறும் இரக்கங்களை மீறிய தீர்க்கமான முடிவுகள் எனக்கு சாத்தியமில்லையா? வெறும் மெழுகு மீண்டும் என்னுள் இறுகிய எரிமலைப் பாறையானது. எனினும் எதிரொலிகள் கேட்டுக்கொண்டே இருந்தன.

"கோழையாகாதே"

"பாவம்"

என்னுள் நானே ஒரு கிருஷ்ணனாகவும், அர்ஜுணனாகவும் என் போர்க்களம் விரிகிறது.

பூச்சி வெளியே போவதும் உள்ளே வருவதுமாக இருந்தது. ஒரு மணி நேரமான அலைச்சல். ஒரு மணி நேரமான எனது உறுதியும் உறுத்தலும் காத்திருப்பும். அலைவுறும் பூச்சிக்கு களைப்பிருக்காதா? நான் அகதியாய்ப் போன நினைவுகள் வந்தன. பிள்ளைகளை இழந்த எமது தாய்மாரின் அபலக் குரல்களும் கேட்டன. இந்த துயர நினைவுகளுடன் ஏன் ஒரு பூச்சியின் அலைவுறுதலைத் தொடர்புபடுத்த வேண்டும்? புள்ளியளவில் ஒரு பூச்சிக்காய் இரங்கிய புலவன் நான் அல்ல. பூச்சியை கிள்ளி கிள்ளி அதன் வேதனையை பார்த்துப் பார்த்து இதயத்தை இரும்பாக்கிக் கொள்ளும் போராட்ட காலம் என்னுடைய காலம். மனதை மீண்டும் இரும்பாக்கிக் கொண்டேன்.

"இப்படி இந்தப் பூச்சி அலைந்து திரிந்து அல்லல் பட விடுவதை விட அதனை ஒரே அடியாய் அடித்துக் கொன்றுவிடலாமே....."

"அதுதான் முடியாமல் போயிற்று கல்லறைக்குள் போட்டதை தோண்டி உயிர்ப்பித்தல்லவா இருக்கிறேன்."

"உயிர்ப்பித்து என்ன அது மீண்டும் மீண்டும் வந்து அழுது புலம்பி கதறித் திரிகிறதே." மீண்டும் என் மனதின் கரிய வானிலே ஒரு செஞ்சுடர். மீண்டும் இந்தப் பூச்சியை இந்த அறையில் இருந்து அகற்றுவதற்கு ஒரு புதிய உத்தி.

"பொறு; பொறு இன்னொரு முறை இது வெளியே போகட்டும். இது திரும்பி வருவதற்கு இடம் வைக்கிறேனா பார்."

மீண்டும் அழுது புலம்பியபடி பூச்சி ஜன்னலினூடு தாவி வெளியே போனது. இன்னொரு முறை அதை அறைக்குள் அனுமதித்தது. அதன் அழுகையையும் புலம்பலையும் அலைவுறுதலையும் காண என்னிதயம் தாங்காது. விசுக்கென்று எழுந்து அறையின் புறக்கதவை இழுத்து அடைத்து ஜன்னல் கதவுகளையும் இழுத்து மூடிக் கொழுக்கி போட்டேன்.

அறை முழுதும் இருட்டு. மதியம் சாய்ந்த பொழுதாயினும், கதவையும் ஜன்னல்களையும் மூடிவிட்டால் இருட்டாகாமல் விடுமா? கதவோரம் இருந்த சுவிட்சை போடப் போனேன். அந்த சுவிட்சைப் போடுதல் அவ்வளவு எளிதல்ல. சுவிட்சைப் போட்டால் மட்டும் போதாது. சுவிட்சின் மேல்ப் பகுதி கழன்று போய் இருந்தது. அதன் மேல்த்தட்டை எடுத்து சற்று ஓரம் சாய குத்தாக தொக்க வைத்தேன். வழமை போல் உள்ளுக்குள் பளிச் பளிச் என்று மின்னல் தெறிக்க பயம் காட்டியது. சற்றுப் பயந்தாலும் மேசைச் சுவரில் மாட்டப்பட்டிருந்த 200 பல்ப் ஒளிரும் வரை சுவிட்சின் மேல்தட்டை பல கோணங்களில் தொக்க வைத்துக் கொண்டிருந்தேன். குருட்டுத் தனமான ஒரு சூட்சுமத்தில் காலம் கழிகிறது.

ஒளிரத் தொடங்கிய மின்குமிழைப் பார்த்தேன். நல்ல வெளிச்சம் 200 வோல்ட் பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தேன். பூச்சி இனி வர முடியாது முன்பக்க ஹோலுக்கு அப்பால் உள்ள சாப்பாட்டு அறையில் கதவு சாத்தப்பட்டே கிடக்கிறது. அந்த ஜன்னலினூடே வருமளவிற்கு பூச்சி சுற்றி வளைக்கும் என்று தோன்றவில்லை. அப்படித் தான் வந்தாலும், எனது முன்னறைக் கதவு திரைச்சீலை யூடாக அது வர முடியாது. வேணுமென்றால் கூரை வளையினூடாக அது வரக்கூடும். ஆனால், இந்த மிக உயரமான கூரையின் வளைக்குள் செல்வதென்றால் கீழிருந்து மேலாக செங்குத்தாக உயர்ந்து வளையிடுக்கை அறிய வேண்டும். ஒரு பூச்சி பழக்கத்தின்பால் இதை செய்யக்கூடுமாயினும் சடுதியாக அறிந்து செய்ய முடியாது. அதனால் இந்தப் பூச்சி இப்போதைக்கு இந்த அறைக்குள் வரும் சாத்தியமே இல்லாமல் போய்விட்டது. என நினைத்து செருக்குக் கொண்டேன்.

ஆனால், ஜன்னலுக்கு வெளியில் குளவியின் இரைச்சல் கேட்கத் தொடங்கியது. வெறும் இரைச்சல் அல்ல. அழுகின்ற இரைச்சல். அழுது புலம்பும் இரைச்சல். ஜன்னல் கதவுகளில் அது மோதி மோதி விழுவது போலும் கேட்டது. மனதைக் கல்லாக்கிக் கொண்டு தொடர்ந்து பத்திரிகையைப் படித்தேன். பின்னர் புறக்கதவின் வெளியிலும் அதன் இரைச்சல் கேட்டது. நீண்ட நேரம் புறக்கதவுக்கு வெளியில் கேட்டது. புறக்கதவும் இதற்கு ஏற்கெனவே பழக்கமாகியிருக்க வேணும். சிறிது செல்ல புறக்கதவுக்கு வெளியிலும் ஜன்னலுக்கு வெளியிலும் மாறி மாறி அதன் இரைச்சல் கேட்டது.

நான் பத்திரிகையை படித்து முடித்தாயிற்று. பூச்சி இன்னும் போனபாடில்லை. பூச்சி என்னை சீற வைத்ததா? அல்லது நான் பூச்சியை அப்புறப் படுத்தினேனா? இது ஒரு புதிய பிரச்சினையாயிற்று.

இது ஒரு புதிய பிரச்சினை. கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துக் கொண்டது போல என் காதுகளையும் அடைத்துக் கொள்ள வேண்டுமா? எத்தனை ஒலிகள் வெளியில் எழுகின்றன? சேவல் ஒன்று கூவுகின்றது. காகங்கள் சில மாறி மாறி கரைகின்றன. தெருவில் சிறுவர்களின் கிரிக்கெட் ஆட்டம். ஆகாயம் நோக்கிய அன்ரனாவில் கிக்கிலுப்பை ஒன்று தன்னந்தனியாக அமர்ந்து கொண்டு வாய்க்குள் திருவிழா காலத்தில் வாங்கிய விசில் உருட்டுவது, கறுத்தப் பழங்களையுடைய மலைவேம்புக் கிளையில் அமர்ந்து கொண்டு கவிதை பாடும் குக்குறுப் பாச்சான் குருவி. துவாக்களின் அழுகுரல்கள். மைனாக்களின் வயலின் இழுப்புகள் - அத்தனை ஒலிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்ட இந்த பூச்சியின் விர் விர் என்ற விமான ஓசையைப் போல காதுக்குள் திரி வைக்கும் இந்த ஓசை...... இந்த அழுகுரல், இந்த ஓலம், இந்த ஒப்பாரி, இப்படி அதன் ஆத்மா விம்மி வெடிக்க வெடிக்க இந்தப் பூச்சியினால் அழ முடிகிறதே.... என்ன பாவத்தில் மாட்டுப்பட்டோம். என்ன கொடுமைக்குப் பங்காளியானோம் என என்னிதயமும் விம்மி விம்மி, என்னவென்று புரியமுடியாத ஒரு உணர்ச்சியில் வெடித்துப் பொருமப் போகின்ற ஒரு கணத்தில் என் இதயமே வெடித்தது போல உடைந்து போயிருந்த அந்த சுவிட்சினுள் சுர் சுர் என்று ஏதோ கேட்டு என்னை பயங்கொள்ளச் செய்ய தொடர்ந்து மின் வீச்சுப் போல சுவிட்சின் ஒளிர்வுள் தெறிக்க ஏதோ எரிவது போல் புகை கிளம்ப அதே சமயத்தில் பட் என்ற பேரிடியோடு சுவரில் 200 மின்குமிழ் அணைந்து கரி படிந்தது போலாக......... இருளில் தூக்கியெறியப்பட்டவன் போல நான், நான் கட்டிலில் இருந்து கீழே கவிழ்ந்தேன். நிமிர்ந்த போது இருள். கதவையும் ஜன்னலையும் திறப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

ஜன்னலைத் திறந்ததும் மின்னல் பாய்ச்சலில் குளவி உள்ளே வந்தது...............

நான் இன்னும் விறைத்து விக்கித்து.....

## உன் வியர்வையின் துர்நெடி உறைக்கத்தொடங்கியிருந்த போது.....

அறுந்து போகாக் கற்பனையுடனும்,
அளவற்ற பொறுமையுடனும்,
கால நியமங்களுள் கணிபடாதவனாய்
உன்னையே ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

கொதித்த என் மண்டைதான் குழம்பாக
மலைகளில் குமுறிற்று என்று
மூவாயிரமாம் ஆண்டுகளில் வாழ்ந்த விஞ்ஞானிகள்
கண்டறிந்து கூறினர்.

குளவிகள் கூடுவைத்திருந்த என்
செவிவழி - சரித்திரக் கணக்குத் தொடங்கும்
காலத்திற்குப் பிறகு -
முதன்முதலாய் உனதுகுரலின் அதிர்வெண்ணுக்குத்
தூண்டலுற்றுத் துலங்கல் காட்டியபோது
நான் கண்களைத் திறந்தேன்.
பொழுது -குறும்பகலாய்ப் பின்வாங்கிற்று.

நான் கண்களைத் திறந்தபோது
எனது இமை மயிர்களில் நூலோடியிருந்த சிலந்திகள்
இழையெறிந்து தாவின எங்கோ.

எனது பார்வையின் எரி
சூரியனின் பரிதியை கருக்கிச் சாம்பராய் உதிரப்பண்ணிற்று.
நிலவின் சீதத்தை-பனியின் கோளத் துளியொன்றாய் திரட்டி
ஆவியாய்ச் செய்தது.-
ஆன ஆவி அந்தரத்தே தீப்பற்றிய நாளில்
அண்டத்தின் ஆயுளில் அதியுச்ச வெப்பநிலையைப்
பதிந்துகொள்ளத்தக்க
வாசிப்பு வசதிகளுள்ள மானிகள் பாவனையில் இருக்கவில்லை.
ஓரம் கருகிய அப்பம் போலவும்,
வரண்டு தளம் வெடித்து வாய்பிழந்த வட்டமொன்றினதும்
செய்மதிப் படங்கள் நாளை பின்னொருநாள் கிடைத்தன.

கிறிஸ்த்து பிறப்பிற்குப்பின்
இரண்டாயிரமாவது விக்ரம வருஷத்தில்
அப்போதைய வழக்கின்படி
எனக்கு இருபத்தியாறு வயது சொச்சமாவதாய்ச் சொன்னது
பிறப்புப் பதிவு.

அம்மனின் திருக்குளிர்த்தி போய் சற்றே அடுத்த ஓரிரு நாட்கழித்து
அக்கினிப் பொழுதொன்றில்
புறநகர்ப் பகுதியின் அவ்வளவாய் அறியப்படாத
அரங்கத்தின் அழுக்கேறிய திரையில்
ஒளி விரிந்து காட்சியாய்ப் பரவத்தொடங்கியிருந்த போது
முதன் முதலில்
என் தவவலிவால் உன்னை வசியம் செய்திருந்தேன்.

வெட்டி விலத்தி
விலத்தி எடுத்த இதழ்களை -
எனது உதடுகளின் பிடியில் தந்திருந்தாய்.

நாம் மொத்தமும் எரிய நேரிட்டது-

உன் கழுத்தின் மடிப்பிலும்,
வயிற்று ஊழைச்சதைத் திரட்சி தொங்கி நெரியும் உட்தாழ்விலும்.
வியர்வை தேங்குகிறது.
எனக்கு-
அக்குளிலும், கவட்டு இடுக்கிலும்.
பிடரியில் தொட்டு நீர்வரி நீளவாய் வளர்கிறது.

கரிக்கின்ற உப்பிற்கான உணர்திறனை
நா ஓர அரும்பர்கள் மீளப்பெற்றிருந்த வேளைதனில்
நானும் நீயுமாய்த் தளர்ந்திருந்தோம்.

அறுந்து போகாக் கற்பனையுடனும்,
அளவற்ற பொறுமையுடனும்,
கால நியமங்களுள் கணிபடாதவனாய்
உன்னையே ஜெபித்துத்
தவப்பயனாய் கண்டடைந்த என் சுவனம்-
ஊழிக்கு முன்னம் கடைசியாக விசிறுண்ட
சுக்கிலத்தில் அரிப்பிற்குள்ளாகிக் கரைந்து
இருந்த இடமுமற்று அழிந்திருந்த போது-
உன் வியர்வையின் துர்நெடி உறைக்கத்தொடங்கியிருந்தது.

றஷ்மி
24052000 மாலை4.10மணி

நன்றி - நூலகத்திட்டம்



# வேர்களை இனங்கண்டு கிளைவிடும் தமிழரங்கு

## கிழக்குப் பல்கலைக்கழக உலக நாடகதின விழாவூடு ஓர் பார்வை

நாடகங்கள் பொதுவாக பல்வேறு மட்டங்களிலும் வேறுபட்ட தேவைகளுக்காகவும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களின் ஆத்மாவின் அதிர்வான கூத்துக்கள் முதல், நவீன நாடகங்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற நாடகங்கள் வரை பயிலப்படும் சூழல்களின் சமூகத் தேவைகள், சுவைகளோடொட்டி அவை ஆற்றுகை செய்யபட்டு வருகின்றன. ஆனால், நாடகத்துக்கென ஒரு தினத்தை வரையறுத்து அத்தினத்தில் அல்லது அதனை உள்ளடக்கியதாக சில நாட்கள் நாடகவிழா நிகழ்த்தும் மரபு 1961இல் இத்தினம் சர்வதேச அரங்க நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது முதல் உலகின் பலபாகங்களிலும் ஆரம்பித்துள்ளது.

எல்லா நாட்களிலுமே நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படினும், குறிப்பிட்ட இக்காலப் பகுதியிலான நாடக விழா, அதன் அனைத்துக் களிப்பூட்டல் மற்றும் அறிவூட்டல் அம்சங்களுடன், அவைக்காற்றுக் கலைகள்சார் அறிவு, செயன்முறைப் பரிமாற்றம், ஆக்கத்திறன் விருத்தி போன்ற நோக்கங்களை எய்தவும் வாய்ப்பளிக்கிறது. சமுதாயத்தின் உயர்கல்விப் பீடமான பல்கலைக் கழகங்களில் கற்கை நெறியாதல் வரை அறிவுசார் வளர்ச்சி பெற்றுள்ள ஈழத்தமிழர் அரங்கும் இடையில் நின்று நிதானித்து தன்னுடைய செயற்பாடுகளை மீள்பார்வை செய்து கொள்ளவும், பல்வேறு புதிய வடிவங்களுடனும், முறைமைகளுடனும் தன்னைப் பரிச்சயமாக்கிக் கொள்ளவும் இந்த உலக நாடகதின விழா ஓர் நல்ல சந்தர்ப்பமாகும். பல்வேறு அரங்க வடிவங்களும், அவைசார் கலைஞர்களும் தனித்த தீவுகளாக நின்று செயற்படாமல், அவ்வடிவங்கள் - நேரடியாகச் சந்தித்துக் கொண்டு கொடுப்புகளைச் செய்ய இத்தகைய ஓர் விழா அவசியமாகிறது.

இந்த வகையில், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, தான் செயற்படத் தொடங்கிய ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே இந்த விழாவை நிகழ்த்தத் தொடங்கி 98ம் ஆண்டுமுதல் இதனை ஆறுநாள் விழாவாக பெரியளவில் நிகழ்த்தியும் வருவது, ஈழத்தமிழரங்கின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கும் ஓர் செயற்பாடாகும். அதனுடைய இப்பணியின் முன்னெடுப்புக்கு, காலத்துக்குக் காலம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களும் ஏனைய நிர்வாகிகளும் வழங்கிவரும் ஒத்துழைப்பும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது.

இவ்விழாவினால் பல்கலைக்கழகமே பெருமையடைவதாகவும், பேராசிரியர் மௌனகுருவுக்கும், நுண்கலைத் துறைக்கும் தான் நன்றி செலுத்துவதாகவும் தனது வாழ்த்துரையில் துணைவேந்தர் குறிப்பிட்டதிலிருந்து இவ்விழாவின் முக்கியத்துவத்தையும் சமூகப் பெறுமானத்தையும் பல்கலைக்கழக நிர்வாகம் புரிந்து கொண்டிருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. ஏனைய ஈழத்துப் பல்கலைக்கழகங்களும் பின்பற்ற வேண்டிய முன்மாதிரி இது.

சென்ற தடவைகளைப் போல, இம்முறையும் கிழக்குப் பல்கலைக்கழக நாடகதின விழா, அதன் நோக்கங்களைச் சரியாக எய்தக்கூடிய வகையில்,

1. பாரம்பரியக் கூத்துக்கள்
2. புதிய கூத்து முயற்சிகள்
3. பிரதேச நாடகங்கள்
4. ஆங்கில நாடகங்கள்
5. பல்கலைக்கழக நாடகங்கள்

என அரங்கின் பல பரிமாணங்களையும் உள்ளடக்கியதாகவே நிகழ்த்தப்பட்டது. இவை தவிர ஐந்து நாட்களும் இடம்பெற்ற அரங்கியல் கண்காட்சியும் இறுதி நாள் கருத்தரங்கும் விழாவுக்கு ஓர் முழுமையை அளித்தன.

விழாவின் முதலாவது நாள் முழுவதுமாகப் பாரம்பரியக் கூத்துகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த போதும், ஐந்து நாள்களிலுமே ஏதோவோர் பாரம்பரியக் கூத்தோ அல்லது புதிய கூத்து முயற்சிகளோ அரங்கேறியமை விழாவின் ஓர் சிறப்பம்சமெனலாம். முக்கியமாக இக்கூத்து முயற்சிகள் பற்றிய ஆய்வுடன் ஏனைய அம்சங்களையும் தொட்டுச் செல்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.

நாடகதின விழாவுக்காக, பல்கலைக்கழகம், வாயிலிலிருந்து மண்டபம் மற்றும் கண்காட்சி அறை, கூத்துக்களரி வரை அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக நுழைவாயில் பாரம்பரிய முறையில் அமைக்கப்பட்ட தோரணவாயிலாக விழாவுக்கு வருவோரை கம்பீரமாக வரவழைத்தபடி நின்றது. இடையில் ஓர் அலங்காரப் பந்தல் தோம்பைகளுடன். பாரம்பரிய முறையிலான இவ்வலங்காரங்களை ஓவியர் குலராஜ் அவர்கள் வடிவமைத்திருந்தார். கண்காட்சி மண்டபத்துக்கான நுழைவாயில், பெரிய வடமோடி முடியமைப்பில் பார்வையாளரை ஈர்த்தபடி நின்றது.

விழாவின் ஆரம்பத்தில், பிரதம விருந்தினரை பல்கலைக்கழக நுழைவாயிலிலிருந்து அழைத்து வந்த பண்பாட்டு இசையணி, தமிழ்ப் பாரம்பரியத்துக்கு அவசியமான ஓர் மீள்கண்டுபிடிப்பு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட பாரம்பரிய உடையணிந்த நுண்கலைப்பீட மாணவர்கள், பல தாளவாத்தியக் கருவிகளிலும் சில அடிப்படையான தாளக்கட்டுக்களை தனித்தும், கூட்டாகவும், இசைத்தபடி அழகாக ஊர்வலமாக நகர்ந்தனர். இசையணியில், நுண்கலைத்துறை விரிவுரையாளர் சி.ஜெயசங்கரும் பங்கு பற்றியமை துறையின் கூட்டுச் செயற்பாட்டுத் திறனை வெளிப்படுத்துவதாயிருந்தது. இன்னும் பல சொற்கட்டுகளும் இசைக்கப்பட்டு குழல் அல்லது நரம்பு வாத்தியங்களுடன் ஆட்டக் கோலங்களும் சேர்க்கப்படின், இசையணி, தமிழிசை, ஆடல் மரபின் ஓர் வெட்டுமுகமாக அமையும். அடுத்தடுத்த ஆண்டுகளில் இத்தகைய ஓர் வளர்ச்சியை எதிர்பார்க்கலாம்.

முதலாவது நாள் ஆற்றுகை செய்யப்பட்ட பறைமேளக் கூத்து இத்தகைய ஒரு பண்பாட்டு இசையணியின் வடிவமைப்புக்கு சில அம்சங்களை தந்துதவக் கூடியது. இக்கூத்துப் பற்றி சற்று விரிவாக நோக்குவது இங்கு பொருத்தமானது. இருவர் இடுப்பில் கட்டிய பறைகளில் பல தாளக் கட்டுக்களை இசைத்தபடி அதற்கேற்ற சிறிய ஆட்டக் கோலங்களை நிகழ்த்துவதே இக்கூத்தின் அடிப்படை. இருவரினதும் பறைவாசிப்புகளையும், அசைவுகளையும், ஒருவர் தம்பட்டத்தில் வாசிக்கும் அடிப்படைத் தாளமும் மற்றொருவர் வாசிக்கும் சொர்ணாலி இசையும் வழிநடத்திச் செல்லும்.

இருவரது கரங்களும் பிரம்பும் பறையில் பல்வேறு விதமான சொற்கட்டுக்களை எழுப்ப ஒருவரையொருவர் நேரெதிராகப் பார்த்தபடி, இருவரும் ஒருவரையொருவரை அணிமித்தும், விலகியும் சில பாதடிக் கோலங்களையும் நளினமான கையசைவுகளையும் செய்வர். இருவரது கைகளிலும் மாட்டப்பட்டுள்ள சிலம்புகளும், பறை வாசிக்கும் போதும், கையசைவுகள் செய்யப்படும் போதும் தானும் தானுமென சேர்ந்திசைத்து, பறையிசைக்கு ஓர் உயர்மீதிறன் ஓசையைச் (HF) சேர்க்கும். ஆட்டத்தின் விறுவிறுப்பான கணங்களில் தாளக்கட்டுகளின் கதி அதிகரிக்க இருவரும் ஒருவரையொருவர் அணிமித்து ஒருவர் மற்றவரது பறையில் தட்டியும், பின்புறமாக கையை வளைத்து பறையின் மறுமுனையில் தட்டியும் ஓசையெழுப்பி தமது வித்துவத்தை வெளிப்படுத்தினர்.



பறைமேளக்கூத்தில் வாசிக்கப்படும் தாளம் 18 வகையானவை என அறிமுகவுரையின் போது சொல்லப்பட்டது. இவை வாழ்வுக்கு ஆறு, சாவுக்கு ஆறு, சடங்குக்கு ஆறு என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் கோயில் தாளம், பூசைத் தாளம், சாவீட்டுத் தாளம் என்பன இசைத்துக் காட்டப்பட்டன. தாளக்கட்டுக்களை வேறு பிரித்து இனங்காட்டும் பெயர்கள், இவ்வாறு வாழ் நிலைகள் சார்ந்த வகையாக இருப்பதானது கலைக்கும் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பிருந்த கால சமூகத்துப் பாரம்பரியமாக இதனை இனங்காட்டுகிறது.

இடையில் கோணங்கித் தாளம், இராச வரவுத் தாளம் போன்றவற்றை வாசித்த அவர்கள் அத்தாளக் கட்டுக்களுக்கேற்ப முக பாவனையுடன் கூடிய பாத்திரப் பண்பு கொண்ட ஆடலையும் நிகழ்த்தினர். ஆடல், பாடல், வாத்திய இசையென இருந்த புராதன ஆற்றுகை வடிவங்களுள் பாத்திரங்கள் அறிமுகப்படத் தொடங்கிய ஓர் ஆரம்ப - பூர்வீகக் கட்டம் இதுவாக இருக்கலாம். இக்கூத்து பயிலப்பட்டு வரும் சமூகம் வளர்ச்சியடையாத காரணத்தினால், அது அடுத்த கட்ட வளர்ச்சிகளை எட்டவில்லை என்ற பேராசிரியர் மௌனகுருவின் கருத்து இவ்விடத்தே கவனிக்கப்பட வேண்டியது. இறுதியாக சில பாடல்கள் பாடப்பட்டு நிகழ்த்தப்பட்ட அபிநயங்களுடன் கூடிய ஆடல், இக்கூத்தில் அடுத்த கட்ட வளர்ச்சி ஏற்படத் தொடங்கிய கட்டமாக இருக்கலாம்.

வாத்தியமிசைப்போர் வேறாகவும் ஆடுபவன் வேறாகவும் உள்ள தன்மைகளே பொதுவாக பல கூத்துக்களிலும் காணப்படுகிறது. இங்கு சொர்ணாலி இசையுடன் தம்பட்டத்தில் அடிப்படைத் தாளம் ஒலிக்க,

1. பறையில் பல்வேறு தாளக் கட்டுக்களையும் இசைத்தல்
2. அதற்கேற்ற பாதடிக் கோலங்கள்.
3. நளினமான கையசைவுக் கோலங்கள்
4. அடிப்படையான சில முகபாவங்கள்.

என்பவை யாவற்றையும் ஆடுபவர்கள் நிகழ்த்துகின்றனர். இது சவாலான ஒன்று. இக்கூத்துக்கேயுரிய தனித்துவமிது.

இறுதியில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு பொருளை கண் கட்டப்பப்பட்டுள்ள ஒரு கூத்தர் சொர்ணாலி இசையின் வழிகாட்டலில் கண்டெடுக்கின்ற ஓர் விளையாட்டும் செய்து காட்டப்பட்டது.

இவ்வாறாக தமிழர்களின் பூர்வீக அடையாளங்களைச் சுமந்து வரும் கூத்தான இது, இம்முறையுடன் மூன்றாவது தடவையாக நாடக தினவிழாவில் நிகழ்த்தப்பட்டுள்ளது. பல புதியவர்களும், இதனைப் பார்க்கும் வாய்ப்பு இதனால் கிட்டுகிறது. ஆயின், சென்ற தடவை நாடக தின விழா சிறப்பு வெளியீட்டில் விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் குறிப்பிட்டது போல, தேவையானது செயன் முறையுடன் கூடிய கற்கையுடனான அடுத்த கட்ட வளர்ச்சியே.

பூர்வீக நிலையிலிருந்து பின்னர் பக்திக் கலாசாரத்துள் உள்வாங்கப்பட்டுப் பயிலப்பட்டு வரும் தமிழர்களின் ஆடற்கலையான, காவடியாட்டம், இரண்டாம் நாள் விழாவில் திருகோணமலை சண்முகா வித்தியாலய மாணவிகளால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. தவில், உடுக்கு ஹார்மோனியம், கிளாரினெட், என்பவற்றினிசையுடன் பாடல்கள் பாடப்பட காவடியின் பல்வேறு நுணுக்கமான ஆடல்களை மாணவிகள் விறுவிறுப்பாக ஆடிக்காட்டி பார்வையாளரின் பலத்த கரகோஷத்தைப் பெற்றனர். பொதுவாக மாணவர்கள் மத்தியில் பரதநாட்டியப் பயில்வே கூடுதல் செல்வாக்குப் பெற்றுவரும் இக்கால கட்டத்தில் காவடி, கரகம், வசந்தன் போன்ற எமது பாரம்பரிய ஆடல் வடிவங்களின் பயில்வில் இவ்வாறு மாணவர்களை ஈடுபடுத்தல். இக்கலைகளின் தொடர்ச்சியான இருப்புக்கு வழிசெய்யும் நடைமுறையாகும். இவ்வாறான எமது பாரம்பரிய ஆடல்பாடல் வடிவங்கள் பலதையும் ஒருங்கிணைத்த விஞ்ஞான பூர்வமான ஓர் பாடத்திட்டம் வகுக்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டியது இக்கால கட்டத்தின் அவசிய அவசர பணியாகும்.



இத்தகைய ஓர் முயற்சியில் முன்பு, பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் இணைந்து, யாழ். இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் செயற்படுத்த முனைந்த போதும், ஒருசிலரின் கடும் எதிர்ப்பினால் அது இடையில் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. இந்த வேளையில் இப்பணியை மீண்டும் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தக்கூடிய வல்லமையும், வசதிகளும் பேராசிரியர் மௌனகுருவுக்கே உண்டு. இதனால் அது அவரது வரலாற்றுக் கடமையாகிறது.

வடமோடிப் பாரம்பரியக் கூத்துக்களான இராம நாடகம், கெங்கை அம்மன் என்பன முதலாம், இரண்டாம் நாள் விழாக்களில் அழகுற அமைக்கப்பட்டிருந்த களரியில் நிகழ்த்தப்பட்டன. பெரும்பாலும் இன்று புத்தகங்களூடு மட்டுமே அறிய முடிகின்ற பாரம்பரிய வடமோடிக் கூத்துக்களை நேரடியாகத் தரிசிக்கக் கிடைத்தமை வரப்பிரசாதமே. வடமோடிக் கூத்துக்களின் தனித்துவமாக அறியக் கிடைத்த, பாத்திரங்களின் வரவுத் தாளக்கட்டுக்கள், ஆடல்கள், நேரச்சுருக்கம் காரணமாக இராம நாடகத்தில் குறைக்கப்பட்டிருந்த போதும், கெங்கையம்மனில் இவற்றை ஓரளவு கண்டறிந்து கொள்ள முடிந்தது. நேரத்தைச் சுருக்கி கூத்தை வடிவமைப்பதில், நுண்கலைப் பீடம் சார்ந்தோரின் ஆலோசனைகள் வழங்கப் பட்டிருக்கலாம்.

கூத்து, களரியிலேயே, காட்சிப் பொருள்களேதுமின்றி, சூழவுள்ள பார்வையாளர்களுக்கு நிகழ்த்திக் காட்டப்படுவது. இதனால் அது நடிகரது உடல்மொழியில் அதிகம் தங்கியுள்ளது. ஆயினும், இந்த அமைப்புள் யாரும் யதார்த்தத்தைக் கோருவதில்லை.

1. இராமனுக்கு வேடந் தரித்தவர் ஓர் வயோதிபர்.
2. இலக்குவன் தனது மூக்கை அறுத்து விட்டதாக, சூர்ப்பனகை இராவணனிடம் முறையிடுவாள். ஆனால், மூக்கோ முழுவதுமாக அவளது முகத்திலிருக்கும். விசேட ஒப்பனைகள் செய்யப்படுவதில்லை.
3. மாயமானாக வேடந் தரித்து வந்த சிறுவனை, இராமன் துரத்திச் சென்று அம்பெய்ய, மான் கதறியபடி சுருண்டு விடும். பையன் எழுந்து இராமன் எய்த அம்பை அவன் கையில் கொடுத்துவிட்டு களரியை விட்டு அகல்வான்.

இவ்வரங்கில், பாத்திரங்களையும், சம்பவங்களையும் செய்து காட்டலே முக்கியமாகிறது. 'மானாக'ச் சுருளும் பையன், 'தானாக' எழுந்து அம்பை இராமனிடம் கையளிக்கும் போது, செய்து காட்டல் நிறைவடைந்து, நிகழ்வின் உணர்ச்சித் தளத்திலிருந்து பார்வையாளர் இயல்பாக விடுவிக்கப்படுகின்றனர். முழுதாக மூக்கிருக்க, மூக்கறுக்கப்பட்டு விட்டதாக 'அபிநயிப்பவரை'ப் பார்த்து பார்வையாளர் குழப்பமடைவதில்லை. 'இப்படி அன்று சூர்ப்பனகைக்கு நடந்தது' என்பதை அவர்கள் புரிந்து கொள்வர். இந்த அரங்கியல் நுட்பங்களையே, - நாம், 'Ver-frem-dung', 'வரலாறாக்கல்' என Brecht இடமிருந்து கற்றுக் கொள்கிறோம். (Alienation) - தூரப்படுத்தல் என்ற மொழிபெயர்ப்பு விவாதத்துக்குரியது)

**கோ. றுஷாங்கன்**

(மிகுதி அடுத்த இதழில்)

சரிநிகர் இதழ் - 198, ஜுன் 08 - ஜுன் 21, 2000 

'சரோஜா' திரைப்படம்

# சிங்களச் சிறுமியின் மனித நேயம்

'சரோஜா' என்ற சிங்களப் படம் எதனை நிறுவ முயல்கிறது?

இந்தப் படத்தில் தமிழினச் சிறுமி ஒருத்தி வருகிறாள். அவள் பெயர் சரோஜா. அதுவே படத்தின் தலைப்பு.

இப்படத்தின் நெறியாளர் இந்தச் சிறுமிக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறார் என்பதை நாம் ஊகிக்க முடியும்.

அனாதரவாக விடப்பட்ட இந்தத் தமிழ்ச் சிறுமியை, ஓரிரு வயது மூத்தவளான கிராமிய, சாதாரணச் சிங்களச் சிறுமியும், அவள் தந்தையாரும், பின்னர் மெல்ல மெல்லத் தன் வெறுப்பைக் களைந்து கொள்ளும் அவள் தாயாரும், தமது அரவணைப்புக்குள் கொண்டு வருபுறமிருந்தாலும், சிங்கள மொழி மூலம் தம்முடன் உறவு கொள்ளும் சரோஜா போன்ற தமிழ்ச் சிறுமிகளை மனிதாபிமான நோக்குடன் அரவணைத்துக் கொள்ளலாம். அது கூட, தமிழின வெறுப்புள்ள கிராமியச் சிங்கள மக்களின் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் -



ஒரு சில சிங்கள மக்கள் ஆகுதல், தமிழ் மக்களிடத்தில் வெறுப்புக் காட்டலாகாது.

இதனையே நெறியாளர் காட்ட முற்படுகிறார்.

தமிழ் மக்கள் அனைவருமே 'பயங்கரவாதிகள்' என்று கூறா விட்டாலும், வன்செயல்களில் கிறார். ஆயுதப் படையினர் தமிழர் மீது அல்ல, வன்செயலில் ஈடுபட்ட தமிழர்களையே அழிக்க வேண்டும் கிறார்கள் என்பதை வலியுறுத்திக் காட்ட நெறியாளர் விரும்புகிறார்.

அதாவது, சிறுபான்மையினர், தமது இருப்புகளுக்குக் கூடப் பெரும்பான்மையினரின் பெருந்தன்மையில் தங்கியிருக்க வேண்டியுள்ளது என்பது உணர்த்தப்படுகிறது.

பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள், குறிப்பாகக் கிராமிய, மக்கள் மனிதாபிமானிகளாக நடந்து கொள்கிறார்கள் என்பதை நான் ஓரளவு ஏற்றுக்கொள்கிறேன். நகர்ப் புறங்களில் உள்ள சிங்கள மக்களிற் பலரும் அவ்வாறே நடந்து கொள்கிறார்கள் எனலாம்.

இந்த மனிதாபிமானச் சிங்கள மக்கள் இன வேறுபாடுகளைப் பொருட்படுத்துவதில்லை. இவர்கள் வன்செயல்களில் ஈடுபடும் தமிழரின் ஆளுகைக்குள் அகப்பட்டவர்களையும் கருணைக் கண்களினாற் பார்ப்பவர்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறார் நெறியாளர்.



இதற்கு உதாரணமாக, சிங்களவரே இடம் பெறும் இராணுவத்தினருள் ஒருவன், சரோஜாவை அவள் தகப்பனுடன் ஓடி மறைய உதவுகிறான் என்ற காட்சி மூலம் நெறியாளர் அழுத்தங் கொடுக்கிறார்.

நெறியாளர், தனது சிங்களக் கதாபாத்திரங்கள் கருணையுள்ளவர்கள் என்பதை நிலை நிறுத்திவிட்டு, வன்செயலில் ஈடுபடும் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று அடையாளங் காட்டுகிறார்.

சரோஜாவின் தந்தை, பலவந்தமாகப் பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டவன் என்றும், அவன் அதிலிருந்து விடுபட முயலும் போது, அவன் மனைவியை - சரோஜாவின் தாயாரை - பயங்கரவாதிகள் கொல்வதுடன், சரோஜாவின் தந்தையையும் பின்னர் கொன்று விடுகிறார்கள் என்றும், நெறியாளர் காட்டுகிறார். ஆக, தமிழர் பயங்கரவாதம், சிங்கள மனிதாபிமானத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரு கொடூரமான போக்கு என நெறியாளர் சொல்- [illegible]

இது நெறியாளரின் நோக்கு. சிங்கள மக்களுக்கு அவர் சொல்லும் செய்தி என்னவென்றால் -

தமிழ்ப் 'பயங்கரவாதிகள்' ஒரு ஈடுபட்ட தமிழர்கள் வெறுமனே, ஈவிரக்கமற்ற கொலைகாரர்கள் என்ற பிரமையைச் சிங்களப் பார்வையாளர்களுக்கு, உணர்த்துவிக்க நெறியாளர் விரும்புகிறார் என நினைக்கிறேன். இங்கு சமநிலை இல்லாமற் போய்விடுகிறது.

'பயங்கரவாதிகள்' என அழைக்கப்படும் வன்செயலாளர்கள் வன்செயலில் ஏன் ஈடுபடத் தொடங்கினர் என்பதைச் சூசகமாகத் தன்னும் நெறியாளர் காட்டியிருக்கலாம். அரச இராணுவப் படையினரின் 'பயங்கரவாதத்தை'ச் சிறிதேனும் காட்டியிருக்கலாம்.

போகட்டும். நெறியாளரின் தனி மனித உரிமையை நாம் தட்டிக் கேட்க முடியாது.

நான் இதுவரை விபரித்த நோக்கிலேதான் நெறியாளர் உண்மையிலேயே படத்தை நெறிப்படுத்தினாரா என்பதை அவரே விளக்க வேண்டும். ஆனால், பார்வையாளனாகிய எனக்கு அவ்வாறுதான் பார்க்க முடிந்தது.

இது வரையும், நெறியாளாரின் நோக்கம், எடுத்துக் கொண்ட பொருள் மூலம் கதையின் அடிநாதக் கருத்து ஆகியவற்றை எனது பார்வையில் எடுத்துக் கூறினேன்.

அடுத்ததாகச் "சரோஜா" திரைப்படமாக எவ்வாறு அமைந்தது என்பதைப் பார்ப்போம்.

0 0 0

இப்படத்தின் நெறியாளர், மனிதாபிமான ஊற்று இன்னும் அற்றுப் போகவில்லை. விபரந் தெரியாத இளசுகள், மொழி கடந்த அன்பையும், பாசத்தையும் பரிமாற்றிக் கொள்ளலாம். சிறுகச் சிறுகப் [illegible] தனம். தமிழ்ப் பிரதேசங்களில் கல்வி போதித்த, விபரம் அறிந்த சிங்கள ஆசிரியர்கள், ஆபத்துச் சூழல்களிலும் உண்மைக்காக வாதிட்டு உதவலாம் என்பதையும் காட்டு- எனப் பொலிஸ்காரர் விளங்கப்படுத்துவதையும் படத்தில் சேர்த்திருக்கிறார். சிங்களப் பள்ளிக்கூட ஆசிரியர், வரலாறு போதிக்கும் பொழுது, இனவாதத்தைத் தூண்டும் கட்டுரைகளைக் கண்டித்து, வரலாற்றுச் சமநிலை பேணப்படும் விதத்தில் கருத்துத் தெரிவிக்க வகைசெய்கிறார்.

இவையெல்லாம், சாதகமான அம்சங்கள். கிராமத்தவர், சிங்களப் பள்ளிக்கூட ஆசிரியரின் பெரிய மனதைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறார். சுருங்கக்கூறின் கடினப் போக்குடைய சிங்கள மக்களைச் சிறிது இளகச் செய்ய உதவுகிறார். இந்த விதத்தில் துணிகரமாக அவர் தனது பாத்திரங்கள் மூலமும், உரையாடல்கள் மூலமும் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்து விடுகிறார். இது உண்மையிலேயே பாராட்டத்தக்க அம்சமாகும்.

சிறு சிறு காட்சிகள் மூலம் மனிதாபிமானமும், நெகிழ்ச்சியை உண்டு பண்ணத்தக்க விதத்தில் நெறியாள்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. ஒளியமைப்பு, படப்பிடிப்பு, உரையாடல், மௌனக் காட்சிகள், நடிப்பு ஆற்றல், எளிமை, விகற்பமற்ற செயல்கள், தீவிரப் போக்குகள், உதாசீனங்கள், உளவு பார்த்தல் - இவை எல்லாம் நுட்பமாக இரசிக்கத்தக்கவை. விரிவாக அலசிப் பார்க்கத்தக்கவை. நுண்ணியதான பகுப்பாய்வுக்குட்பட்டவை.

அனைத்துலகத் திரைப்பட விழாக்களில் 'சரோஜா' படத்துக்கு விருதுகள் கிடைத்தமை ஆச்சரியப்படுவதற்கான தொன்றல்ல. கலை நுட்பம், கைவரப்பெற்ற / கைதேர்ந்த / அனைத்துலகத் திரைப்பட நுட்பங்களை அறிந்த / ஒருவரினால் செயற்படுத்தப்படுகிறது.

"சரோஜா" கலைத்துவம் வாய்ந்த ஜனரஞ்சகமான படமுமாக எடுக்கப்பட்டிருப்பது நெறியாளரின் மனிதாபிமான / உளவியல் சார்ந்த /தந்திரோபாயமான / இசை சார்பான அணுகுமுறையினாற்றான் என்பேன். இது சந்தேகமில்லாமல் ஒரு வெற்றிப் படம். இந்த நெறியாளர் அடுத்ததாகத் தமிழர் நோக்கில், இதன் தொடர்ச்சியைக் காட்டுவது வரவேற்கத்தக்கதாய் அமையும்.

– கே.எஸ்.சிவகுமாரன்

## மண்ணிறமான......!

ஒரு அதிகாலையில் அவர்கள்
என் வீட்டுக்கு வந்தனர்
என்னமோ என்று....,
கட்டிலுக்கு கீழ், கதவிடுக்கில்
மர அலுமாரிக்குள், கக்கூசில்
என்னமோ நான்,
சூரியனை ஒளித்து வைத்திருப்பது போல்
தம்பிப் பையனின் புத்தகப் பைக்குள்ளும் -
அதற்குள் அம்மாவிடம் அடிபட்டு
வாங்கிய பென்சில் துண்டுதான்
தேய்ந்து போய்க் கிடந்தது
அப்பாவின் வெத்திலை பெட்டி -
காய்ந்து போன
சுண்ணாம்பு துண்டுகள் -
அப்பாவின் பென்ஷனைப் பற்றி
அவர்களுக்கு என்ன தெரியும்
எதுவுமில்லை! எதுவுமில்லை!
போகலாம்.
கிணற்றடி வேலியை பிய்த்தபடி-
'.......' மனிதர்களைப் புகழ்ந்தபடி
போய்விட்டார்கள்.

ஒரு அழகான சோலை
பெரிய தென்னந்தோப்பு
மாடமாளிகை,
அழகான நிம்மதி உலகு என்றும்
வசந்த காலம், புதுத்தென்றல்
புத்தம் புது ரோசா, இளந்தென்றல்
கொண்ட என்நாட்டை
மென்று தின்றபடி
நடக்கின்றது என் கனா.....!!

– பளை கோகுலராகவன்

0

## எங்களூர் வாசிகள்!

நிசப்தம் நிலவுகின்ற
இரவுகளில் மனித
அவலங்களே
பாடலாகிப் போன
விசனங்களுக்காக
இங்கே சில மனங்கள்
எரிந்து சாம்பலாயிற்று!

இரத்த வேள்விகளே
தினம் தினம் நிறைவேற்றப்படும்
காரிரவுகளில் 'காலா'வுக்கும்
கழுத்தறுத்து விட்ட
துயரப்பாடல்களே
எங்களூரில் வழி நெடுக
இசைக்கப்படுகின்றது!

ஊனுடல்கள் சல்லடையாகிப்
போகும் சஞ்ஞாரமற்ற
இரவில் ஒரு சமாதியின்
அறை கூவல் காற்றோடு நிறைகிறது!

தெருவெங்கும் ஒட்டியிருக்கின்ற
புழுதிப்படலங்களை கழுவிச்
செல்லுகின்ற குருதி வெள்ளத்தில்
சிலர் மூழ்கிப் போகும் பரிதாபமும்
எங்ஙளூரில் ஏராளம் ஏராளம்!

நிஜங்களில் தொலைத்த
நிம்மதியை கனவுகளில்
தேடித் திரியும் மானிட
வர்க்கங்களும் நெரிசல்களுக்கு
மத்தியிலும் நெடுநாட்களாகவே
வாழ்க்கையினை தேடி அலைகின்ற
மாந்தர்களும் எங்களூர்
வாசிகள் தான்!

இவர்கள் இன்னும் சில
நாழிகைகளில் அழிந்து போகலாம்
ஆனால் இவர்களுக்குப்
பிறக்கின்ற பிறவிகள் வாழ்வார்கள்
எங்களூர் வாசிகளாக!

– ஏ.எச்.எம்.ஜிப்ரி

0

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்து கவிதைப் பரப்பில் கவிஞர் சோ. பத்மநாதன்

தமிழகத்தின் பல இலக்கியப் போக்குகளின் பாதிப்புகளை ஈழத்தில் பார்க்க முடியும். முருகையன், மஹாகவி, நீலாவணன் ஆகியோருக்கு ஆரம்பத்தில் கலைவாணன் (திருவானைக் காவல் அப்புலிங்கம்) மீது ஈடுபாடு இருந்தது. கூடவே பாரதி, பாரதிதாசன் ஆகியோரது பாதிப்புகளையும் இனங் காண முடியும். அவர்களுடைய ஆரம்பக் கவிதைகளில் இவற்றைத் தெளிவாகவே பார்க்கலாம். இத்தகைய பாதிப்பிலிருந்து விடுபட்டு நுஃமான், முருகையன், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இனங்கண்டு சொல்லியிருப்பது போல - ஒரு பேச்சோசை வழக்குக்கு ஈழக் கவிதையின் ஒரு பிரதானமான கூறு திரும்பியது முக்கியமான திருப்பமாகும். இந்த திருப்பத்திலிருந்து ஒரு தனித்துவமான ஈழத்துக் கவிதைப் போக்கொன்றை இனங்காண முடியும். எழுபதுகளின் ஆரம்பம் வரை ஈழத்துக் கவிதைகள் / கவிகள் என முக்கியமாக மேலெழுந்த பலரிலும் இப்போக்கைத் தொடர்ச்சியாகப் பார்க்க முடியும். இப்போக்கின் அசலான இன்றைய பிரதிநிதியாக சோ.பத்மநாதனைக் குறிப்பிடலாம் என்பது என் எண்ணம்" மேற்படி கூற்று சேரனால் காலச்சுவடு (16) இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகக் கவிதையின் போக்கிலிருந்து மாறுபட்டு மண்வாசனை, சமகால யதார்த்தம், கொதிநிலையிலுள்ள பிரச்சினைகளும், அது எழுப்பும் மன உணர்வுகளும் என்கின்ற பல்வேறுபட்ட கருக்களை உள்ளடக்கமாகவும் வீச்சான படிமப் பயன்பாடும், பேச்சோசை பண்புடன் கூடிய மொழி நடையும் கொண்டு வடிவத்திலும் தனக்கென தனித்துவமான போக்கை கொண்டியங்கும் ஈழத்துக் கவிதைப் போக்கில் சோ.பத்மநாதனின் கவிதைகளுக்கு உரிய இடம் என்ன என்பதை இக்கட்டுரை ஆராய முயலுகிறது.

ஆற்றொழுக்கான கவிதை ஓட்டம் இழும் எனும் ஓசைச் சிறப்பு, அசையும் சீரும் கருத்தோடு நர்த்தனமிடும் லாவகம், உணர்வோடு ஒட்டி உறவாடும் படிமங்கள், அவை தரும் மனக்காட்சிகள் என்பன சோ.பத்மநாதனின் கவிதைகளை வாசிப்பவர் இரசிக்கக் கூடிய அம்சங்கள் எனலாம். வானம் பாடிக் கவிதைகள் தந்த புனைவியல் மற்றும் இருண்மைத் தன்மைகளோ, எழுத்து இலக்கியக் குழுவினூடு வெளிவந்த இடாம்பீக மொழிப்பாவனை மற்றும் அதீத, தனிமனித உள்நோக்கிய தன்மைகளையோ சோ.பத்மநாதனின் கவிதைகளில் காணமுடியாது. சமூக மனிதனாக, சமூக அக்கறையுடன் தெளிவான படிமங்களையும், இனிமையான மொழிநடையையும் பயன்படுத்தும் கவிஞராக சோ. பத்மநாதன் மிளிர்கிறார்.

இனிமையும், எளிமையும் நிறைந்த கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது சோ.பத்மநாதன் 'வடக்கிருத்தல்' எனும் தொகுதி. 'சுயம்', 'பரம்', 'அகம்', 'புறம்' என நான்கு பகுதிகளாப் பிரிக்கப்பட்டுள்ளன கவிதைகள். இத்தொகுதியில் ஒரு கவிஞராக சோ.பத்மநாதன் வளர்ந்தவற்றை வரலாற்றுப் பதிவாக ஆக்கும் நோக்கில் அவர் எழுதிய ஆரம்ப காலக் கவிதைகளையும் தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளனர் தேசிய கலை இலக்கிய பேரவையினர். இது ஒரு வகையில் கவிஞரின் படிமுறை வளர்ச்சியை வரலாற்று நோக்கில் இனங்காண உதவும்.

கவிஞரில் சிந்தனைப் போக்கையும், சமூக கண்ணோட்டத்தையும் 'சுயம்' பகுதி வெளிப்படுத்துகிறது.

'அமுத கவிதை பருகி உலகம்
அமர நிலையை அடையாதோ'

பாரதி மீது கொண்டுள்ள ஈடுபாடு பின்வருமாறு பதிவாகிறது.

'மண்ணல்ல, மலையல்ல,
ஆறும் அல்ல மானிடனே ஒரு
நாட்டுக்குயிராம் - அந்த
விண்ணையவன் இங்கு - கண்முன் -
கொணர வல்லான்"

இயற்கைழுகை பாடும் விதம் இப்படி அமைகிறது.

மொழிப் பாவனையும் அதன் கச்சிதமும் புதிய ஈழத்துக் கவிஞர்களிடம் காணப்படாத ஒன்று. புதுக்கவிதைக்கும் ஓசை உண்டு. சொற்களின் இலாவகமான பயன்பாடும் அவசியமாகும்.

கவிஞர் சமகால நிலைமையையும் 'பரம்' இனூடாக தருகிறார்.

'மரணமும் சிறையும்
சாசுவதமானவ்வயல்ல
ஒருநாள்
வாழ்வும் விடுதலையும் கிட்டும்
என்ற
நம்பிக்கைதாரும் ஆண்டவரே'

காதல் வானில் சிறகடிப்பதும் கவிதை படைப்பதும் மனிதர் இயல்பு. கவிஞர் சோ.பத்மநாதன் விதிவிலக்காக முடியுமா என்ன? 'அகம்' பகுதி தரும் பாடல் ஒன்று,

'பேச்சிலை எம்மிடை என்பதாலாமொரு
பெரியகுறையிலையே - கண்
வீச்சினில் ஆயிரம் செய்தி வெளிப்படும்
விந்தை நிகழ்கிறதே'

என்று வருகிறது.

'சுயம்', 'பரம்', 'அகம்' எனும் பகுதிகளினூடாக கவிவண்ணம் கைவரப்பெற்ற கவிஞர் 'புறம்' பகுதியினூகவே ஈழத்துக் கவிதைப்பரப்பில் முக்கிய தடம் ஒன்றைப் பதிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கா.சிவத்தம்பி நூலின் முன்னுரையில் குறிப்பிடும் கருத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையது.

"இளைஞர் இயக்கங்கள் மூளைவிடுவதற்கான பின்புலம் தோன்றுவற்கு முன்னர் நிலவிய நிலைமைகளிலேயே தொடங்கி, படையினரின் மிகைத்தாக்குகை, மக்களின் இன்னல்கள், இந்தியப் படையினர் வருகை, ஷெல் குண்டுத் தாக்குதல்கள், அகதிவாழ்க்கை, தாண்டிக்குள அனுபவங்கள், 'ரிவிரச' ஏற்படுத்திய புலப்பெயர்வு, மீண்டும் 'வீடுபேறு' அடைதல் என வரலாற்றொழுங்கு தவறாது கவிதைச் சாட்சியங்களாக இந்தப் பாடல்கள் அமைந்துள்ளன. புலம்பெயர்ந்த தமிழர்கள் இவரது அங்கதப் பார்வைக்கு ஆளாகிறார்கள்"

எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ் நகர் தீப்பற்றியதை கவிதையூடு கேள்வி எழுப்புகிறார்.

'முற்றுகையும் இல்லை. மூண்டபெரும்
போரில்லை
எற்றுக்கப்பா நம் நகரம் எரிகிறது?'

இன்றைய தமிழர் உரிமையைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போர்ராட்டமாகவும் இனவாதமாகவும் சித்திரிப்போர் அதன் வரலாற்றை மறந்து விடுகின்றார்கள். இதோ கவிஞர் எழுப்பும் கேள்வி அவர்கள் சிந்தனையை விரிக்கட்டும்.

'இனவாத விதையிங்கு யார் தூவினார்கள்?
எரியென்றும் உடையென்றும் யார்
ஏவினார்கள்?
சினமான செந்தீயை யார் மூட்டினார்கள்?
திருநாட்டை எரியூட்டி யார்
காட்டினார்கள்?'

பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் சொந்த நாட்டு மக்களையே அழித்து துன்பக் கேணியில் ஆழ்த்தும் அரசுப் பயங்கரவாதத்தினால் மக்கள் படும் துயரை கவிஞர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

'எந்தவழி தரை, கடல், வான் /இவற்றினூடு எமை நோக்கி யமன் வருவான் என்று பார்த்து/நொந்தவர்கள் நாங்கள், படுந்துன்பம் ஒவ்வோர்/நொடியும் உள, ஷூடியர் / இருந்தீயில் நின்று/ வெந்தவர்கள் நாங்கள், அநியாயமாக/ வெட்டுண்டும், சுடுபட்டும் வீழ்ந்தோர்கள் நாங்கள்'

என்றும் துயருறுகின்றார்.

இன்றைய காலம் மக்களுக்கு வழங்கியது என்ன? மக்கள் வாழ்வு குழம்பியது, ஊர்கள் அழிந்தன, புலப்பெயர்வும், இடப்பெயர்வும் தான் மக்கள் வாழ்வாகியது.

'நிழல்சொரியும் மரங்களெல்லாம்
நெருப்பள்ளிச் சொரியும்
நினைத்து செயும் கொடுமைகளால்
நெஞ்சமெல்லாம் எரியும்
புயல் அடித்த ஊராகி
எம் வாழ்வுகுலையும்'
புலம்புதலும் விம்முதலும்
மொழியாகி உலவும்'

போரினால் நாளாந்த வாழ்வு சீரற்றுப்போக மனிதரை மனிதர் மதிக்கும் பண்பு அற்றுப் போகிறது. கறுப்புச் சந்தைக்காரர்களின் கொட்டம் மிகுதியாகிறது. நிர்க்கதியான மக்களின் அவலம் மட்டுமல்ல அநாதையாகிப் போகும் நாய்களும் கவிஞர் கண்களுக்கு தப்பவில்லை. உன்னி உன்னி சைக்கிளில் ஓடி உழைக்கும் சிறுசுகள், பெண் நாய் பிறவி எடுத்த நாய்க் குட்டிகள், கிழட்டுநாய் என பல்வேறுபட்ட பாடு பொருட்களில் கவிஞர் கவிதைகள் தொடர்கின்றன.

பேச்சோசைப் பண்போடு நாடகத் தன்மை உரையாடல் பாங்கை உள்ளடக்கி 95ம் ஆண்டு இடப்பெயர்வை 'வீதி வழி வந்த "விருட்சங்கள்' கவிதையூடாக பதிவு செய்கிறார் கவிஞர்.

'செம்மணித் தெரு இரு மருங்கிலும்
சேற்றிலே விழுந்தெழும்பினர் சிலர்
கண் பனித்தது விண், இருட்டிடை
கால் வலித்திட மேல் நடந்தனர்.'

'நெஞ்சு வலியும் நெடுமூச்சுமாய்
கமலம் அஞ்சுமைல் நடந்தாள்
அப்பால்
அடிபெயரக்கூட இயலாது
குந்தி விட்டாள்.'

காட்சி விரியும் சொற்படிமங்கள், பல்வேறு பட்ட ஓசை, சந்தம் என்பன கவிஞரின் சிறப்புகள்,

'சோளகத்தில் அம்பிட்ட
பஞ்சு சுழல்வது போல்
வாழிடத்தைவிட்டு
வழிமாறிவந்தார்கள்
வேர் சூழப்பாய்ந்த விருட்சங்கள்
வீதிவழி
ஏராளமாக
இடம்பெயர்ந்து வந்தன காண்'

கவிஞர் எதை இழக்கிலும் நம்பிக்கை மட்டும் இழக்கவில்லை என்பதை 'பாலாய் நிலவு பொழிகிறது' கவிதை சுட்டி நிற்கின்றது.

'மீண்டும் எமது நிலத்தில் பனைவடலி
தோன்றி நிமிர்க,
துயரம் பொடி படுக
மீண்டும் அண்ணாவி முழக்கம் உருக்கின்
ஒலி
நீண்ட இரவுப் பொழுதில் நிகழட்டும்!
ஊதும்குழல் பெய் சுருட்டி இனியிரண்டு
காதும் அமுதம் பொழிக
கடலோரம் ஈரமணலில் இனிநாம்
நடக்கலாம்
பாலாய்நிலவு பொழிகிறது - பௌர்ணமி
நாள்!'

ஈழத்துத் தமிழ்க் கவிதையின் வளர்ச்சி பற்றி யேசுராசாவும், நுஃமானும் (ஈழத்துப் பதினொரு கவிஞர்கள்-கவிதைத் தொகுப்பு) குறிப்பிடும் போது மகாகவி முதல் சேரன் வரை ஐந்து தலை முறைகளைக் குறிப்பிடுவர். செய்யுள் ஊடகத்தில் தொடங்கி பின்னர் அதைக் கைவிட்டு புதுக்கவிதையூடாக உருவ உத்திப் பயன்பாடு, மொழிப்பாவனை, வீச்சு என்பவற்றில் மாற்றம் கண்டு உத்வேகம் பெற்றது ஈழத்துக் கவிதை. தமிழர் அரசியலில் ஏற்பட்ட அரசியல் சூறாவளி வாழ்வியலையும் பெரிதும் பாதிக்க அது தொண்ணூறுகளில் பல்வகைச் சிக்கல் தன்மை பெற்ற படிமப் பயன்பாட்டோடும் புதிய அனுபவப் பகிர்வோடும் புதிய பரிமாணம் பெற்றது. அதில் தோன்றிய சோலைக்கிளி, அரபாத், நட்சத்திரன், அஸ்வகோஷ், ஆத்மா, றஷ்மி, மற்றும் கருணாகரன், சிவசிதம்பரம், போஸ்நிஹாலே ஆகியோர் விதிர்த்து நிற்கும் களத்தில் சோ.பத்மநாதனும் செய்யுள் ஊடகத்தினூடாக படிமப் பயன்பாடு, மொழிப்பாவனை, ஓசைச் சிறப்பு, பேச்சோசைப் பண்பு நாடக உத்தி என்பவற்றுடன் தனித்துவமாக மிளிர்கின்றார் என்பதனை 'வடக்கிருத்தல்' தொகுதி உணர்தி நிற்கின்றது.

கந்தையா ஸ்ரீகணேசன்

## யுத்தமும்......
## அதன் இரண்டாம் பாகமும்........

எக்ஸில் ஏட்டில் வந்துள்ள சக்கரவர்த்தியின் "யுத்தமும் அதன் இரண்டாம் பாகமும்" கதை வாசித்தாயா? வாசித்திருப்பாய்! அண்மையில் நான் இங்கு வாசித்தவைகளில் என் மனதில் ஆழப் பதிந்து அசைவுகளையும், நம்பிக்கைகளையும் ஏற்படுத்திய மனச்சாட்சி மிகுந்த கதையிது. மனச்சாட்சி மிகுந்த கதையா ..? அப்படியென்றால் என்னவென்று கேட்காதே. எனக்கு விளக்கத் தெரியாது.

புலம்பெயர் இலக்கிய சூழலில் நமக்கு மிக அண்மையில் அறிமுகமானவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் ஷோபா சக்தியும், சக்கரவர்த்தியும். இவர்கள் மிக நேர்த்தியான பல சிறுகதைகளை புலம் பெயர் இதழ்களில் எழுதியிருக்கிறார்கள். இவர்களின் படைப்புக்கள் சரிநிகரின் மீள்பிரசுரமூடாக ஈழத்து வாசகர்களுக்குக் கிடைத்தது. சக்கரவர்த்தியின் இரு கதைகளும், ஒரு நீள் கவிதையும், அவர் கவிதை பற்றிய ஒரு முழுப் பக்கக் கட்டுரையும் சரிநிகரில் பிரசுரமாயிருக்கின்றன. இது அவரின் படைப்பாக்க ஆளுமையைக் காட்ட போதுமான சான்று.

சக்கரவர்த்தியின் கதைகள் மிக அக்கறையாக வெளிப்படுத்துகிற ஒரு விஷயம் தமிழ்-முஸ்லிம் மக்களின் விரிசல்களும், அவற்றை எவ்வாறு ஆயுத அமைப்புகட்கள் செயற்படுத்தின என்பதும் தான். முன்னர் வெளியான கதையொன்று(...) கொழும்பு மத்திய வங்கித் தாக்குதல் பற்றிய ஒரு புலி வீரனின் தன் மனப் பதிவுகளை மிக அழகாகச் சொல்லியிருந்தது. அக்கதையை வாசிக்கையில் அதில் சக்கரவர்த்தியும் பங்கு பற்றியிருப்பாரோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. எக்ஸில் ஏட்டில் வந்திருக்கிற மேற்குறித்த கதையும் அவ்வெண்ணத்தை எனக்கு மீண்டும் ஏற்படுத்துகிறது. இது மட்டக்களப்பு- காத்தான்குடி பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை அணுகிய விதத்தை அழகாகச் சொல்கிறது. காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை எப்படி திட்டமிடப்பட்டது என்பது பற்றியும், அதை ஒரு மனச்சாட்சியுள்ள போராளி எவ்வாறு எதிர்க்கிறான் என்றும், அவன் பின்னர் எவ்வாறு மூளைச்சலவை செய்யப்பட்டவனாய் இருக்கிறான் என்றும் இக்கதை மிக நேர்த்தியாக (கதை எந்த வகை மாதிரிக்குரியது என்பதை பெரிய பெரிய இலக்கியகாரர்களிடமும், விமர்சகர்களிடமும் விட்டு விடுவோம்.)

ஷோபாசக்தி, கலாமோகன் போன்றோரது எழுத்துக்களை பின் நவீனத்துவ எழுத்துக்கள் என்று சாரு நிவேதிதா அடையாளம் கண்டிருக்கிறார். சக்கரவர்த்தியை எதற்குள் அடக்குவார்களோ தெரியாது. பொறுத்திருந்து பார்ப்போம். கதையின் அடியில் காத்தான்குடிப் பள்ளிவாசல் தாக்குதல் திட்ட வரைபடம் மெலிதான கோடுகளால் கீறப்பட்டிருப்பது கதைக்கு மாத்திரம் முக்கியத்துவமானதல்ல முஸ்லிம்களுக்கும், புலிகளுக்கும் கூட முக்கியத்துவமானது.

காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை நிகழ்வுகளை காத்தான்குடி முஸ்லிம்கள் மாத்திரமல்ல ஈழத்து முஸ்லிம்களே மறக்க மாட்டார்கள். அவர்களிடம் இன்னும் பசுமையாய் அந்த நினைவுகள் இருக்கின்றன. அது பற்றிய பதிவுகள் இருக்கின்றன. வருடா வருடம் அதை அவர்கள் நினைவு கூர்ந்தும் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஒரு ஆணித்தரமான இலக்கியப் பதிவாக அது முஸ்லிம்களால் பதிவு செய்யப்படவில்லை என்றே நினைக்கிறேன். அதை இந்தக் கதை செய்திருப்பது முக்கியமானது. இன்னொரு வகையில் இது புலிகளின் மனச்சாட்சியின்(?) குரலாய் ஒலித்திருப்பதும் கவனிக்கத்தக்கது. இந்த மனச்சாட்சி அவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியதும் கூட.

இக்கதையில் இவர் சொல்ல வருகிற முக்கிய விடயம் அல்லது நீதி தனிமனித துரோகிகள், எட்டப்பர்களுக்காக ஒரு சமூகத்தை எந்த வகையில் பலிகொள்வது நியாயம் என்பதுவும், பெரும்பான்மை அடக்குதலுக்குள்ளாகிப் போராடும் ஒரு இனம் எந்த வகையில் இன்னொரு இனத்தின் மீது தங்கள் பெரும்பான்மை அடக்குமுறையைப் பிரயோகிக்க முடியும் என்பதும் தான். இது ஏற்கெனவே எழுதப்பட்ட, பேசப்பட்ட விடயங்கள் தான். ஆனால் யாருக்கும் உறைக்கவில்லை. சக்கரவர்த்தியின் கதைகள் உறைப்பை ஏற்படுத்தியிருக்கின்றனவென்றால் அதன் காரணம் படைப்பாளுமையும் அதன் வீச்சும் தான் என்று சொல்லலாம்.

சக்கரவர்த்தி கதை சொல்லும் விதமும், அவர் கையாளுகிற மிகச்சாதாரண நடையும் (கிழக்கு முஸ்லிம்களின் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேச முஸ்லிம்களின் பேச்சுமொழியை மிகலாவகமாக இவர் கையாள்வது குறிப்பிடத்தக்கது) வாசகர்களை ஈர்ப்பன.

இலக்கிய வாசிப்புக்காக மட்டுமல்லாது, தமிழ், முஸ்லிம் சமூகங்களின் புரிந்துணர்வான இருத்தலுக்காகவும் ஈழத்து வாசகர்களுக்காக இக்கதையை மீளப் பிரசுரிப்பது நல்லதாகப் படுகிறது எனக்கு. உனக்கு.....?

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது? என்ன நடக்கிறது?

"யுத்தம் காரணமாக நாங்கள் அடிக்கடி இடம் பெயர்கிறோம். பாடசாலைகள் இழுத்து மூடப்படுகின்றன. அல்லது இடம் மாறுகின்றன. இதனால் மாணவர்களாகிய எங்களுடைய கல்வி பாதிக்கப்படுகின்றது. இதனால் எங்களுடைய சந்ததி அறிவற்ற சந்ததியாகத் தான் வரப் போகின்றது. இதைத் தடுக்க யுத்தத்தை நிறுத்த வேண்டும்.

இது ரூபவாஹினி செய்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு அண்மையில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் யாழ்ப்பாணத்து மாணவன் ஒருவன் கூறியது.

மாணவன் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து நிகழ்ச்சியை விவரணப்படுத்திய குரல் ஒலிக்கிறது. இந்த யுத்தத்துக்கு யார் காரணம்? யார் சமாதானத்தை எதிர்ப்பது? யார் தமிழ் மக்களின் எதிரி?



தணிக்கை



ஆனால், அரசாங்கத்தினால் அமுல் படுத்தப்பட்டுள்ள கடுமையான தணிக்கைச் சட்டங்கள் யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தது? என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு எந்த வாய்ப்புக்களையும் வழங்கவில்லை.

குறிப்பாக தென்மராட்சியில் நடந்த எறிகணை வீச்சில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் இன்னும்சில நூற்றுக்கணக்கானோர் காயப்பட்டுமிருக்கிறார்கள்.

ஒரு உதாரணத்தைப் பாருங்கள். கரையோரக் கிராமமான மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து மட்டுவிலில் தங்கியிருந்த ஆறு பேர் கொண்ட ஒரு குடும்பம். மே 26ம் திகதி இடம் பெற்ற செல்வீச்சில் மாட்டுப்பட்டு விட்டார்கள். வீட்டை விட்டு ஓடும் போது மறவன்புலவில் தான் இந்த அனர்த்தம் நடைபெற்றிருக்கிறது. கந்தசாமி அரிய நாயகம்(74) என்ற பெண்மணி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவரின் சடலத்தை எடுத்துச் செல்லக் கூட முடியாமல் அந்த இடத்திலேயே தாட்டு விட்டார்கள் பூபாலச்சந்திரன் சந்திரமலர் (61). [illegible] (62). அவருடைய மனைவி செல்வரட்ணம் சந்திரவிமலா (58), அவடைய இருமகள்களான செல்வரட்ணம் நளாயினி (26) செல்வரட்ணம் தயாளினி (25) ஆகியோர் கடும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அக்கராயன்குள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் செல்வரட்ணம் நளாயினி மே 31ம் திகதி வைத்தியசாலையில் மரணமானார்.

இவ்வளவு சம்பவங்கள் நடந்தும் திருமலையிலிருக்கும் அவர்களின் ஒரு சகோதரருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

வெளிநாடொன்றிலிருந்து மூத்த சகோதரன் தான் தொலைபேசியில் இவருக்கு அறிவித்திருக்கிறார்.

அம்மம்மா, சகோதரி என இருவரும் இறந்த துயரம் ஒரு புறம், அவர்களுடைய முகத்தை இறுதியாகப் பார்க்கப் போக முடியவில்லை என்பது இன்னொரு துயரம். தற்போது காயப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து வந்து வைத்தியம் செய்ய முடியாத துயரம் இன்னொரு புறம்.

துயரங்களிலும் சோகமானதல்லவா இது.

தணிக்கை



அதிலிருந்து கைதடி வயோதிபர் இல்லத்தில் அவர் கண்டு எழுதியதை மட்டும் இங்கு தருகிறோம்.

"அங்கிருந்து சாந்தி நிலையம் எனப்படும் முதியோர் இல்லத்தை நோக்கிச் சென்றோம். எங்களைக் கண்டதும் அழுகை ஆரம்பமானது. தம்மில் 15 பேரை படையினரின் எறிகணை வீச்சில் இழந்திருந்தனர் எமது முந்தைய சந்ததியினர். அவர்களிடம் "உங்களைப் பராமரித்த ஆட்கள் எங்கே?" என்று கேட்டோம். அழுகை இன்னம் பலமானது. அவை எல்லோரும் விட்டுட்டெல்லோ போட்டினம். அம்மா கூட (அதிபர்) போட்டா. வேலை செய்யுற ஆக்கள் கங்காணிமார் ஆம்பிளைச் சமையற்காரர் எல்லோரும் போய்ட்டினம். நாங்கள் தனியத்தான் இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

"செத்த ஆக்களின் பெயர் என்ன?" என்று கேட்டதும் 4ம் வார்ட்டிலை செல்வி, லீலா, 5ம் வார்ட்டிலை கண்மணி, கொக்குவில் செல்லத்துரை, ஆனைக்கோட்டை மணியம்..., மிச்சமெல்லாம் கொப்பியிலை தான் [illegible] அந்த இடங்களைக் காட்டினர்.

கட்டிலில் ஒருவர் பிணமாய்க் கிடந்தார். குடல் வெளியில் வந்திருந்தது. ஒரு காகம் தனது சொண்டினால் அதனை இழுத்துக் கொண்டிருந்தது. ஏனைய கட்டில்களில் இருந்தோர் இதனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். காகத்தைத் துரத்தவும் இயக்கமில்லாத நிலை.

இக்காட்சியைப் பார்த்ததும் அதிர்ந்து போய் விட்டேன். இனி எக்காலத்திலும் இப்படி ஒரு காட்சியைப் பார்க்கும் நிலை வரக் கூடாதென எனது மனதுள் வேண்டிக் கொண்டேன்.

கொள்ளிக்கென்றும் வம்சத்துக்கென்றும் ஆசையாய்ப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்த இவர்களை பாரமென்று பிள்ளைகள் துாக்கியெறிந்து விட்டார்கள். பேரப்பிள்ளைகளோடு மகிழ்ச்சியாய் இருக்க வேண்டிய இவர்கள் இங்கே வாழ்க்கையை வெறுத்துப் போய் இருக்கிறார்கள். இதைவிட இப்படி அவலமாக எறிகணைக்குப் பலியாகி காகத்துக்கும் ஏனைய பறவைகளுக்கும் உணவாக வேண்டிய நிலை.

"பூத்த செடி பூக்களின்றித் தவிக்கிறது". பாடல் அச்சமயம் நினைவுக்கு வருகிறது. மனதில் எனது தந்தையின் ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்ட அவரது கரங்களைப் பற்றியபடி சில கண நேரம் நின்றேன். அந்தப் புதிய உறவுக்காக என் கண்கள் பனித்தன.

இவர் கொக்குவிலைச் சேர்ந்தவர் சிவசுப்பிரமணியமென அங்கிருந்த ஒருவர் கூறினார். தொடர்ந்து இன்னொரு வார்ட்டில் முத்தையா என்பவர் கட்டிலில் பிணமாகிக் கிடப்பதை பார்த்தேன். கையில் தான் காயம் இரத்தப் பெருக்கினால் மரணம். காயமடைந்ததுடன் மலமும் கழித்திருந்தார். இந்த வார்ட்டிலும் ஏனையோர் காயத்துடன் படுத்திருந்தனர்.

அங்கிருந்து 11 பேரின் சடலங்களை போராளிகள் கொண்டு சென்றிருந்தனர். இருவரின் சடலம் அங்குள்ள சுடலை ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அதன் பின்னர் நடை பெற்ற எறிகணைத் தாக்குதலிலேயே சிவசுப்பிரமணியமும் முத்தையாவும் பலியாகி இருந்தனர்.

தோள் மூட்டில் பாரிய காயத்துடன் ஒருவர் நிலத்தில் கிடந்தார். பதில் கூறக் கூட இயக்கமில்லை. இவர் அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரையென ஒருவர் கூறினார். இன்னொருவர் மார்க்கண்டு எனத் தன்னை அறிமுகப்படுத்தினார். அவருக்கும் காயம். பெண்கள் வார்ட்டில் காயமடைந்தோர் பெருங்குரலில் அழுதபடியிருந்தனர்.

எவரிடமும் எதுவும் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் முடியவில்லை. அவர்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்றும் தெரியவில்லை. அவர்களிற் சிலர் ஊனமுற்றோர். சிலர் மனநிலை பாதிக்கப்பட்டோர். ஏனையோரும் எறிகணை வீச்சினால் ஏற்பட்ட பீதியால் தெளிவாக எதனையும் கூறமுடியாதிருந்தனர்.

**ராஜ்குமார்**

## வீரத்தை முளையிலேயே.....

1. வீரம் வேண்டாம்.

2. விடுதலைப் பாடல் வேண்டாம்.

3. ஆற்றுவோர் / பார்ப்போர் இடைத்தாக்கம் பிரதியில் இருந்தால் போதும்.

4. பார்வையாளர்களை அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறான திடீர் அறிவிப்புக்கள் எதுவும் சுற்று நிருபங்களிலோ அல்லது வேறொன்றிலோ எழுத்து மூலமாக வழங்கப்படுவதில்லை. எப்படி முடியும்? நாகரிகமற்றவற்றைச் சுயாதீனமற்றவற்றை, சொல்லக் கூசுகின்றனவற்றை, வெட்கக் கேடானவற்றை எப்படிப் பொன் எழுத்துக்களால் பொறிக்க முடியும்? இவையெல்லாம் வாயால் தான். நாக்கைச் சுழற்றுவதன் மூலம் தான்.

எது எப்படியோ வலய மட்டங்களில் போட்டிகள் நடந்து முடிந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய கழுத்து நெரிப்புகளுடன் ... வீரத்தை, அரசியலை, போரை, தொடமுடியாமல் தொட்டு விடமுடியாமல் விட்டு திக்கி முக்கி, கருக்கட்டியவற்றைப் பெற முடியாமல் பெற்று அரையாய் குறையாய்ப் பிரசவித்து குறைப் பிரசவங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய பிரசவ வேதனைகள் சத்திர சிகிச்சையின்றி சரியாக மாறப்போவதில்லை. சத்திர சிகிச்சையை யார் செய்வது?

அந்த வைத்திய நிபுணர் யார்? என்பது தான் கேள்வி. முதுகெலும்பு இல்லாத எந்த வைத்தியராலும் நிமிர்ந்து நின்று இதைச் செய்ய முடியாது.

போட்டிகளுக்குத் தயார் செய்யும் அதிபர்களே, ஆசிரிர்களே, பெற்றோர்களே, பிள்ளைகளே உங்களிடம் நிச்சயமாக முதுகெலும்பு இருக்கின்றது. "பார்வையாளர்கள் அற்ற இருட்டறை அரங்கேற்றங்களை நாம் கண்டிக்கின்றோம்" என்று சொல்ல ஏன் நீங்கள் இன்னும் தயாராகவில்லை. அந்தப்புரத்து அழகு ராணிகளாக இருக்க மட்டுமா? உங்கள் பிள்ளைகளுக்கு நடனம் கற்பிக்கின்றீர்கள்? இருட்டோடு பேசும் பைத்தியங்களாக்கவா உங்கள் குழந்தைகளுக்கு நாடகமும் பாட்டும்?

உங்கள் குழந்தைகளை வீரமுள்ளவர்களாக வளர்க்க ஆளுமைச் செழிப்பு மிகுந்தவர்களாக மாற்ற இந்தப் போட்டிகள் உதவுமென்றால் அதை உரிய முறையில் சுதந்திரமான சந்தோமான சூழலில் நடாத்த வேண்டியது தான். பொறுப்புள்ளவர்களின் கடமை. வீரம், வேண்டாம் என்று சொல்லுவதும், கழுத்தை நெரிப்பதும் சுலபமானதல்ல. இவர்கள் ஒரு சந்ததிக்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் என்பதை நினைவு கொள்ளுங்கள். தமிழ் மொழித்தினம், தமிழ் மொழி வளர்க்க, தமிழ்க் குழந்தைகளை வளர்க்க வலுவுள்ளவர்களாக்க என்பதை உறுதி செய்யுங்கள். ●

## பொ.ஐ.மு. ஆதரவாளர்களின் கொடூரம்! 12 வயதுச் சிறுமி ஆபத்தில்!

பொ.ஐ.முவின் ஆனமடுவ பாராளுமன்ற உறுப்பினர் த.மு. தசநாயக்க அவர்களின் ஆதரவாளர்களினால் சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

12 வயதான இந்த சிறுமி 10 தடவைகள் பாலியல் வல்லுறவுக்குள்ளாகியுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. தசநாயக்க அவர்கள் இவ்விசாரணையை நடாத்தும் பொலிசாருக்கும், மருத்துவர்களுக்கும் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளதாக விசாரணையை மேற்கொள்ளும் பொலிஸ் பிரிவு, பொலிஸ் தலைமையகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளது.

சம்பந்தப்பட்ட சிறுமியின் தந்தை கடை ஒன்றை நடாத்தும் வர்த்தகர். சம்பவத்தின் பின் அவரது கடை தீக்கிரையாக்கப்பட்டு அவர் உட்பட குடும்பத்தினர் அனைவரும் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். சிறுமியை கடத்திச் சென்று வைத்திருந்த வேளை ரூபா.60,000 கப்பமாக தருமாறு அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## தேசிய பாதுகாப்பு .....

சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றத்தின் முன் விளக்கமளிக்க நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

**நீதிமன்றத்தின் முன் இது பற்றி விளக்கம் அளிக்க நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு ஏதும் நடவடிக்கைகள் எடுக்கின்றீர்களா?**

இலங்கையில் ஜனநாயகத்திற்கும் தொடர்பூடக சுதந்திரத்திற்கும் ஏற்பட்டுள்ள பயமுறுத்தல் மற்றும் அடக்குமுறைகள் பற்றி தேசிய சர்வதேசிய ரீதியில் விளக்கமளிப்புகள் செய்யவும், இதன் மூலம் இந்த நிலைமையை நீக்கிக் கொள்ள அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் எண்ணியுள்ளோம். இப்பொழுது பல சர்வதேச நிறுவனங்கள் இதற்காக என்னை அழைத்துள்ளன. இவ்வாறான நெருக்கடி சூழ்நிலையில் தான் நாம் நமது நண்பர்களை அறிந்துகொண்டோம். நாம் தனிப்பட்ட நண்பர்களை மட்டுமல்ல, இந்நாட்டு மக்கள் சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் குறித்து உண்மையான ஆர்வமும் நேர்மையான தேவையும் கொண்டவர்களை அறிந்துகொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. எமது பத்திரிகையை சீல் வைத்தது தொடக்கம் எம்முடன் தொடர்புகொண்டு பலதரப்பட்ட ஆதரவுகளை நல்கிய பலர் இருக்கின்றனர். அவர்களைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். அரசியல்வாதிகள் சட்டரீதியில் ஆலோசனை வழங்கியவர்கள் ஆகியோரின் பெயர்களை கூற நான் விரும்பவில்லை. எனினும், வருண கருணாதிலக்க, விக்டர் ஐவன், பாக்கியசோதி சரவணமுத்து, ஹரித்த விக்கிரமநாயக்க, ரஞ்சித் விஜேவர்தன, [illegible] மேலும் பலர் எமது நிறுவனத்தின் தலைவரான எனது சகோதரனை சந்தித்து ஆதரவு தருவதாகக் குறிப்பிட்டிருந்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறேன்.

**அரசினால் அமுலாக்கப்பட்டுள்ள மோசமான அடக்குமுறைச் சட்டங்கள் செயற்படுவதனூடாக இந்நாடு எத்திசையை நோக்கிப் பயணிக்கும் என நம்புகிறீர்கள்?**

இந்த நிலைமையை ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்படுவதற்கான ஒரு முயற்சி என்று கூறமுடியாது. அதாவது குழிதோண்டி புதைத்து விட்டாயிற்று. ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கை வடமேல் மாகாண சபை தேர்தல் நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறு இடம்பெற்றது. இப்பொழுது குழியின் மீது மண் போடுவதையே அரசாங்கம் செய்கின்றது. இப்பொழுது நம் நாட்டு மக்களுக்கு செய்வதற்கு ஒரு விடயமே எஞ்சியுள்ளது. அதாவது அக்குழியின் மீது கொன்கிறீட் போடுவதற்கு முன் தடுத்து விடவேண்டும். இதனைத் தடுக்காவிட்டால், இந்நாட்டு மக்கள் மிக மோசமான எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பது மட்டுமல்ல எதிர்கால சந்ததியினரின் சாபத்துக் கும் உள்ளாக நேரிடும். இது பற்றி நாம் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். இந்த ஒரு காரணத்திற்காக நாம் கொல்லப்பட்டாலும் கூட மனச் சாட்சியின்படி இந்த நாட்டிற்காக ஜனநாயகத்திற்காக ஏதோவொரு பணியை ஆற்றியிருக்கின்றோம் என்று [illegible]

நன்றி : [illegible]

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே*

-பாரதி



இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
**மின்னஞ்சல்** : sarini@sltnet.lk


Registered as a Newspaper in Sri Lanka

## தேசிய பாதுகாப்பு – அச்சுறுத்தல்!

முதலில் அவசரகால சட்ட விதிகளை அமுலுக்கு கொண்டு வந்தார்கள்.

எந்தப் பிரேமதாச அரசாங்கம் அறுபதினாயிரம் சிங்கள இளைஞர்களை தீயிலிட்டுப் பொசுக்கியும்,கொன்றும், இல்லாமலாக்கியும் செய்ததாக வாய்கிழியக் கத்தினார்களோ, அந்தப் பிரேமதாச அரசாங்கம் இவ்வளவற்றையும் செய்ய வசதியாக இருந்த அதே அவசரகால சட்ட விதிகளை மீண்டும் இவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே கிட்டதட்ட இரண்டாண்டுகளாக நடைமுறையில் இருந்த தொடர்பு சாதன தணிக்கையை மேலும் தீவிரமாக அமுல் படுத்தத் தொடங்கினார்கள். தணிக்கை அதிகாரி ஒருவரை நியமித்து அவரது கையில் கட்டுக்கடங்காத அதிகாரங்களையும் வழங்கி 'நீ நினைத்தபடி செய்' என்று அனுமதித்தார்கள்.

விளைவு?

முதலில் யாழ் நகரில் வெளியான ஒரே பத்திரிகையான 'உதயன்' தடை செய்யப்பட்டது.

அது தடைசெய்யப்பட்ட ஒருவார காலத்துள் 'சண்டே லீடர்' பத்திரிகையும், அதன் சகோதரப் பத்திரிகையான 'இரிதா பெரமுன' என்ற சிங்களப் பத்திரிகையும் தடை செய்யப்பட்டன.

உதயன் யாழ் நகரில் இராணுவத்தினரால் 'சிவில் நிர்வாகம்' நடாத்தப்படும் ஒரு பிரதேசத்தில் இருந்து வெளிவந்த பத்திரிகை.

'ஆயினும் அப்பத்திரிகை வெளிவரும் சூழலையும் பத்திரிகையில் வெளிவரும் தகவல்களையும் வைத்து ஓரளவுக்காகவது அங்குள்ள உண்மை நிலைமைகளை மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது.

***தணிக்கை***

அடுத்தது சண்டே லீடரும், இரிதா பெரமுனவும்.

அவை இரண்டும் தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்து வந்த பத்திரிகைகள். அரசாங்கத்தின் ஊழல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் என்று அவை தொடர்ச்சியாக பல விடயங்களை அம்பலப்படுத்தி வந்தன.

அவையும் சீல் வைக்கப்பட்டன.

அன்று அம்மா 'தவச' பத்திரிகைக்கு சீல் வைத்தார் என்றால், இன்று மகள் இப்பத்திரிகைகளுக்கு சீல் வைத்தார்.

நாட்டை யுத்த முனைப்புடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அரசாங்க நோக்கத்திற்கு எதிராகவும், தேசிய பாதுகாப்புக்கும் குந்தகமாகவும் இப்பத்திரிகைகள் நடந்து கொண்டன என்பதே இதற்கு சட்டம் சொல்லும் காரணம்.

***தணிக்கை***

சட்டப்படி அவர் அப்படி தெரிவிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

ஏனென்றால் அவசரகால சட்ட விதிகள் 'தகுதி வாய்ந்த அதிகாரியாக' நியமிக்கப்பட்ட அவருக்கு 'தேசிய பாதுகாப்புக்கு குந்தகமாக இருப்பதாக' அவர் 'கருதும்' பட்சத்திலேயே அப்படியான ஒரு முடிவை எடுக்க வேண்டியளவு அதிகாரங்களை வழங்கியிருக்கிறது.

ஆனால், இந்தச்சட்டம் கலகம், அல்லது உள்நாட்டுக் குழப்பம் போன்ற விடயங்களை தூண்டாகக்கூடிய விடயங்களை வெளியிடுவதையும் கூட தடைசெய்கின்ற போதும், அப்படிச் செய்கின்றது என்று ஒரு விடயம் எல்லோருக்கும் வெளிப்படையாக தெரிகிற போதும், தகுதி வாய்ந்த அதிகாரி அப்படிக் கருதாவிட்டால் அவற்றைச் செய்யும் வாய்ப்பை ஒருவருக்கு அளித்து விடுகிறது. அதிலும் அரசாங்கம் தான் எதை 'கலகம்', 'குழப்பம்', 'தேசிய பாதுகாப்புக்கு குந்தகம்' என்று கருதுகிறதோ அதைச் செய்யவர்களை தண்டிக்கும் விதத்தில் 'அபிப்பிராயப்படும்' ஒருவரையே 'தகுதிவாய்ந்த அதிகாரியாக' நியமித்து வைத்திருக்கையில் அரசாங்கத்திற்கு வேண்டிய விதத்தில் ஒருவர் 'குழப்பம்' ஏற்படக் கூடிய செயல்களில் இறங்க பூரண உரிமை உடையவராகிறார்.

உதாரணமாக, அரசாங்கம் இந்தச் சட்டத்தை அறிவித்த நாள் முதலாய், சமாதானத்துக்கு ஏதிராகவும், இனவன்முறையைத் தூண்டும் விதமாகவும் இலங்கையின் இனவாத இயக்கங்கள் பூரண சுதந்திரத்துடன் பேசியும் எழுதியும் வருகின்றன.

அவற்றையெல்லாம் பற்றி தகுதிகாண் அதிகாரிக்கு எந்த 'அபிப்பிராயமும்' ஏற்படுவதில்லை.

அண்மையில் டி.சிவராம், பூ. சிவகன், மேர்வின் மகேசன் போன்ற தொடர்பு சாதனவியலாளர்களை புலிகளுடன் சம்பந்தப்படுத்தி பத்திரிகை கட்டுரை எழுதியது. அரசாங்க தொலைக்காட்சியான ஐ.ரி.என். செய்தி வெளியிட்டது. தனிப்பட்ட முறையில் அவர்களது பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் இவை அமைந்திருந்தன.

அரசுக்கு எதிரான கருத்துள்ளவர்கள், தொடர்பு சாதனவியலாளர்கள் - அதிலும் குறிப்பாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுடன் தொடர்புடையவர்கள் மீது 'தேசத்துரோகிகள்' பட்டம், சூட்டப்படுவதை அது கண்டு கொள்ளவில்லை.

அவை குழப்பத்தையோ, கலவரத்தையோ உண்டு பண்ணி தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமாக அமையும் என்று கருதவில்லை.

வழமைபோல இதிலும் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் ஒடுக்கப்படும் தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

மேலே குறிப்பிட்ட தொடர்பு சாதனவியலாளர்கள் குறித்து திவயின பத்திரிகையில் துரோகிப் பட்டம் சுமத்தப்பட்டிருப்பது, எதிர்காலம், அனைத்து தமிழ் ஊடகவியலாளர்கட்கும், எதிராக கட்டவிழ்த்து விடப்படப் போகும் நடவடிக்கைகளின் ஒரு முன்னுரையாகவே தோன்றுகிறது.

இப்போது ஊடகவியலாளர்கள் சர்வதேச சமூகங்களிடம் தமக்கு பாதுகாப்பு தருமாறு கோரி நிற்கிறார்கள்.

***தணிக்கை***

அப்படியான ஒரு நிலை தோன்றுமானால், அது இந்த அரசாங்கத்தின் 'அபிப்பிராய'த்தில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமா அமையாதா என்று தகுதிகாண் அதிகாரியாலும் கூட சொல்ல முடியாது.

ஏனென்றால் அப்படி ஒரு சூழலில், அதை தீர்மானிக்கப்பவராக அவரால் இருக்க முடியாது. அதை உதவிக்கு வருபவர்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்.

குளத்தைக் கலக்கிப் பிராந்துக்கு இரை கொடுப்பது போல இன்று நடந்து கொண்டிருக்கிறது அரசு.

அதில் முதலில் அகப்பட்ட மீன்கள் இவர்கள்.

அடுத்ததாக மீதி மீன்கள்.

பிறகு தண்ணீர்.

அதன் பிறகு குளம்.

அதன்பிறகு தேசியமும் பாதுகாப்பும்.


அதன் பிறகு?

அதன் பிறகு?

சந்திரிகா தான் சொல்ல வேண்டும்!

## மன்னாரில் கழக மணிகளின் அடாவடித்தனங்கள்!

***தணிக்கை***



இக்கலத்தில் வர வேண்டிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனப்படும் புளொட் அமைப்பின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை தற்போதைய தணிக்கை அதிகாரியும் முன்னாள் ஈறோஸ் மத்திய குழு உறுப்பினரும், பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவரும், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் அதிகாரபூர்வ ஏடான புதிய கண்ணோட்டம் மற்றும் அக்கட்சியின் ஆதரவுடன் வெளியான காலைக்கதிர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் ஒருவரும், தற்போதைய ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினருமான சின்னபாலா எனப்படும் பாலநடராஜன் அவர்கள் தணிக்கை செய்துள்ளார்.

தணிக்கை விதிகளின் கீழ் இச் செய்தி தணிக்கை செய்யப்பட வேண்டிய அவசியமில்லையே என்று சுட்டிக் காட்டிய போது, ஜனநாயக வழிக்கு வந்த கட்சிகள் பற்றிய விமர்சனங்கள் அனைத்தையும் தணிக்கை செய்யுமாறு தனக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

-ஆசிரியர்


## அவரசகால சட்டத்தை எதிர்த்து மேலும் ஒரு வழக்கு!

*இலங்கை அரசாங்கத்தால் கடந்த மே 3ம் திகதி நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட விதிகளின் 14வது சரத்துக்கு எதிராக EDITORS Guild இனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு புறம்பாக மாற்றுக் கொள்கைகட்கான மையத்தின் இயக்குனர் பாக்கியசோதி சரவணமுத்து கொழும்பு பல்கலைக்கழக அரசியலமைப்புத்துறை விரிவுரையாளர் றொகான் எதிரிசிங்க, சட்டத்தரணி மஞ்சுளா சிறிமான ஆகிய மூவரால் இன்னும் ஒரு வழக்கும் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வழக்குக்கான முறைப்பாடு வாசகர்கள் மற்றும் தகவல் பெறுவோரின் கண்ணோட்டத்தில் இந்த அவசரகால விதிகளை கேள்விக்குள்ளாக்குவதுடன் இச்சட்டவிதிகளின் 8ம் 26ம் சரத்துக்கள் உட்பட்ட கடுமையான சட்ட விதிகளிற் சட்டபூர்வ தன்மை குறித்து கேள்வி எழுப்புகிறது. இந்தச் சட்ட விதிகள் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டவிதிகளிற்கு முரணான விதத்தில் பெருமளவு அதிகாரத்தை தணிக்கை அதிகாரியிடம் குவித்து வைத்துள்ளது. இது தனியாள் ஒருவரது சட்டபூர்வ ஜனநாயக நடைமுறைகளை மிரட்டும் தன்மை வாய்ந்ததாக அமைந்திருக்கின்றது.*

*சரத்து 26, ஜனாதிபதி, அரசாங்கம், நீதித்துறை நிர்வாகம் என்பன தொடர்பான அபிப்பிராய பேத உணர்வுகளை வெளிப்படுத்துதலை கூட குற்றமாக காண்கிறது என்று இவ்வழக்குக்கான முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகளுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் எந்தத் தர்க்க ரீதியான தொடர்பும் கிடையாது என இம் மனுதாரர்கள் வாதிக்கின்றனர்.*

## *களுத்துறையிலிருந்து விடுதலை பம்பலப்பிட்டியில் சிறை!*



இக்கலத்தில் வர வேண்டிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை தற்போதைய தணிக்கை அதிகாரியும் முன்னாள் ஈறோஸ் மத்திய குழு உறுப்பினரும், பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவரும், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் அதிகாரபூர்வ ஏடான புதிய கண்ணோட்டம் மற்றும் அக்கட்சியின் ஆதரவுடன் வெளியான காலைக்கதிர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் ஒருவரும், தற்போதைய ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினருமான சின்னபாலா எனப்படும் பாலநடராஜன் அவர்கள் தணிக்கை செய்துள்ளார்.

தணிக்கை விதிகளின் கீழ் இச் செய்தி தணிக்கை செய்யப்பட வேண்டிய அவசியமில்லையே என்று சுட்டிக் காட்டிய போது, ஜனநாயக வழிக்கு வந்த கட்சிகள் பற்றிய விமர்சனங்கள் அனைத்தையும் தணிக்கை செய்யுமாறு தனக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

-ஆசிரியர்